
# தமிழரசு

டிசம்பர் 1-15, 1997 ரூ.3





பாரதியார் இல்லம், சென்னை



இராஜாஜி நினைவகம், சென்னை




## இந்த இதழில்...

★ மாநிலங்களுக்கிடையேயான கவுன்சிலில் - முதலமைச்சர் உரை ... 2

★ மகாகவி பாரதியார் - பேரறிஞர் அண்ணா ... 4

★ இலக்கை விஞ்சிய போலியோ சொட்டு மருந்து முகாம் ... 8

★ கூட்டுறவு வார நிறைவு விழாவில் முதலமைச்சர் கலைஞர் உரை ... 9

★ தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகள் ... 13

★ தியாகச் சிறகுகள் ... 14
- கவிஞர் இரவிபாரதி

★ நெஞ்சையள்ளும் தஞ்சைக் கலைத்தட்டுகள் ... 19

★ காவல்துறைக்குப் புதிய வாகனங்கள் ... 23

★ மகாகவி பாரதி (கவிதை) ... 24
- கவியரசர் இளந்தேவன்

★ பூந்தளிரின் இதயராகம் (மருத்துவம்) ... 26

★ செந்தமிழ்ச்செல்வி ... 29

★ ஊனமுற்றோர்க்கு உற்றுழி உதவிடப் பொதுமக்கள் தாராளமாக முன் வரவேண்டும் ... 33
- முதலமைச்சர் கலைஞர் செய்தி

★ நூல் நயம் ... 35

★ ஆழ்கடல் அகழாய்வும், மறைந்த மாநகர் பூம்புகாரும்! ... 36
- நடன.காசிநாதன்

★ மூதறிஞர் இராஜாஜி ... 41
- அறிஞர் அண்ணா

★ தீபத்திருவிழா ... 42

★ எங்கள் ஊர்ப்பிரச்சினை ... 44

★ இராமநாதபுர மாவட்டப் பாசனத்திட்டங்கள்... 47

★ உலக சாதனை படைத்த கிணத்துக்கடவு இரத்ததான முகாம் ... 48



# மாநிலங்களின் திட்டங்களுக்கு 70% கடன் - 30% மானியம் என்பதை மாற்றி 50% கடன் - 50% மானியம் என வழங்க வேண்டும். முதலமைச்சர் கலைஞர் வலியுறுத்தல்.

**20.11.97 அன்று டெல்லியில் நடைபெற்ற, மாநிலங்களுக்கிடையேயான கவுன்சில் கூட்டத்தில், முதலமைச்சரின் சார்பாக போக்குவரத்துத் துறையமைச்சர் திரு.க.பொன்முடி அவர்கள் ஆற்றிய உரை:**

மாநிலங்களுக்கிடையேயான, இந்நான்காவது கூட்டத்தில் பங்கேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன். முறையான இடைவேளைகளில், ஐக்கிய முன்னணி அரசு தவறாது இக் கவுன்சிலின் கூட்டத்தை நடத்திவருவதை நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

**நிகழ்ச்சி நிரலின் முதலாவது இனமாக, மத்திய-மாநில அரசுகளுக்கிடையேயான 'நிதி உறவுகள்' பற்றிய சர்க்காரிய கமிஷனின் பரிந்துரைகளின் மீதான, பொது இசைவு குறித்து ஆலோசித்தல்:**

முன்மொழியப்பட்டுள்ள பொருளின் மீது, கீழ்க்காணும் யோசனைகளுடன், எங்களது இசைவினைத் தெரிவிக்க விழைகிறோம்.

மத்திய அரசால் நிர்ணயிக்கப்படும் வரிவிதிப்புகளின் அடிப்படையில், மாநிலங்களால் வசூலிக்கப்பட்டு, அவைகளாலேயே பயன்படுத்திக்கொள்ள வகை செய்யும், அரசியல் சட்டத்தின் 268-வது பிரிவை மாற்றி, மாநிலங்களுக்கே வரி விதிப்பு உரிமையை வழங்குவது குறித்த சாத்தியக் கூறுகளை, மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும். முத்திரைக் கட்டண வரிகள், மருந்து வகைகள் மற்றும் குளியலுக்குப் பயன்படுத்தும் பொருட்கள் உற்பத்திக்கான கலால் வரி விதிப்புகள் போன்ற மேற்காணும் வகையின் கீழ்வருபவை தற்பொழுது மத்திய அட்டவணையின் கீழ் உள்ளன.

இந்நிதிக்குழுவின் ஆலோசனை மற்றும் நிபந்தனைகளையேற்று, சட்டத் திருத்தம் கொணருவதற்கு முன் இதுகுறித்து மாநில முதலமைச்சர்களுடன் கலந்து யோசித்துப் பின்னர் இறுதியாக்கலாம் என்பதே எங்களது விருப்பமாகும்.

வரியில்லா நகரவைக் கடன் பத்திரங்கள் அறிமுகப்படுத்துதலில், நகரப்புற உள்ளாட்சி அமைப்புகள், இவ்வித வரியில்லாக் கடன்பத்திரங்களைத் தாமே வெளியிட்டு அவைகளின் நிதி ஆதாரங்களை உயர்த்திக்கொண்டு கட்டமைப்பு வசதிகளின் உருவாக்கங்களுக்கான முதலீடுகளை மேம்படுத்திக்கொள்ள வழிவகுக்கும் வகையில், மத்திய அரசு அனுமதித்திட வேண்டுமென நாங்கள் வலியுறுத்திக்கொள்ளப் பெரிதும் விழைகிறோம்.

மாநில அரசுகளின் திட்டங்களுக்கென, வெளிநிதி உதவியாகத் தற்பொழுது, 70 சதவிகிதம் கடனாகவும், 30 சதவிகிதம் மானியம் என்ற அடிப்படையில்தான் வழங்கப்படுகிறது. இத்தகு திட்டங்களுக்கு, வருவாய்ச் செலவினங்கள் மிகுந்திருப்பதைக் கருத்திற்கொண்டு 50 சதவிகிதக் கடன்-50 சதவிகித மானியம் என்று உயர்த்தி வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

**நிகழ்ச்சி நிரலின் 2வது இனமாக, சர்க்காரியா கமிஷனின் பரிந்துரைகளின் 4வது தலைப்பான, 'ஆளுநர்களின் செயற்பாடு' என்னும் பொருள் குறித்த நிலைக்குழுவின் பரிந்துரைகள்பற்றி ஆலோசித்தல்:**

எங்களது ஆழ்ந்த தீவிரத் தொடர் ஆலோசனைகளினடிப்படையில், 'ஆளுநர் அமைப்பு முறை' ஒழிக்கப்பட்டாக வேண்டுமென்பதே எங்களது நிலைப்பாடாகும். இக்கருத்து ஏற்கப்படாவிடின், அம்மாநில முதலமைச்சரின் ஒத்திசைவுக்குப் பின்னரே, குடியரசுத் தலைவர், ஆளுநரை நியமிக்கவேண்டும். அதோடு, ஆளுநரின் 'தனித்துவ அதிகாரம்' என்பது அறவே நீக்கப்பட்டாக வேண்டும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஒருவரையே ஆளுநராக நியமிக்கக் கூடாது. இத்தகைய வரைமுறைகள் குறித்து, அரசியல் சட்டத்தில் தகுந்த திருத்தங்கள் கொணரப்பட்டாக வேண்டும். ஆளுநர் பதவி ஒழிக்கப்படுவதன் வாயிலாக, ஆளுநர் அலுவலக நிர்வாகத்திற்கென, மாநிலக் கருவூலத்தின் இவ்வகையிலான செலவினம் தவிர்க்கப்பட்டு, மிகப்பெரிய தொகையைச் சேமித்திட இயலும். அரசியல் சட்டத்தின் 153லிருந்து 162 வரையிலான பிரிவுகளிலுள்ள இத்தகு சலுகைகள் நீக்கப்படுவதோடு, 163, 164, 166, 167, 168 ஆகிய பிரிவுகள், இதற்கென, அரசியல் சட்டத்தில் தகுந்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். தற்பொழுது , ஆளுநர்களிடமுள்ள இத்தகைய அதிகாரங்கள் மாநில முதலமைச்சர்களால் பயன்படுத்தப்பட வேண்டும்.

இக்கருத்துக்கள் ஒப்புக்கொள்ளப்படாவிடின், அரசியல் சட்டத்தில் கீழ்க்காணும் கருத்துக்களினடிப்படையில் தகுந்த திருத்தங்களைச் செய்திடலாமெனக் கருதப்படுகிறது:

1. அரசியல் சட்டப்பிரிவு 153 திருத்தப்பட்டாக வேண்டும்.
2. மாநில முதலமைச்சரின் ஒத்திசைவுடன்தான், குடியரசுத் தலைவர், ஆளுநரை நியமனம் செய்யவேண்டும்.
3. ஒருவரையே, இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட மாநிலங்களுக்கு ஆளுநராக நியமிக்கச் சலுகையளிக்கும் 153ஆம் பிரிவும், 158ஆம் பிரிவின் விதி (3-ஏ)ம், அரசியல் சட்டத்திலிருந்தே விலக்கப்பட்டாக வேண்டும்.
4. ஆளுநருக்கான 'தனித்துவ' அதிகாரச் சலுகையை வழங்கும் 163(1) என்ற பிரிவுக்கு, குடியரசுத் தலைவருக்கு 74(1) பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள சலுகைக்கொப்பத் தகுந்த திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.
5. ஆளுநரின் தனித்துவ அதிகாரத் தொடர்புடைய பிரிவு 163(2) நீக்கப்படல் வேண்டும்.
6. மாநில முதலமைச்சரின் அறிவுரைக்கேற்ப, எந்தவொரு மாநில அமைச்சரையும், ஆளுநர் பதவிநீக்கம் செய்திடல் வேண்டும்.

7. மேற்காணும் இத்தகு முடிவுகள் குறித்து அறிவுறுத்தல்களை ஆளுநருக்கு அறிவிக்கும் வகையில் தகுந்த வரைமுறைகளை அரசியல் சட்டத்தில் இடம்பெறச் செய்யவேண்டும்.

**நிகழ்ச்சி நிரலின் மூன்றாவது இனமாக, சர்க்காரியா கமிஷனின் பரிந்துரைகளின் 17-வது தலைப்பான 'மாநிலங்களுக்கிடையேயான நதிநீர்ப்பிரச்சினைகள்' என்ற பொருள் குறித்து 'நிலைக்குழுவின் பரிந்துரைகள்' பற்றி ஆலோசித்தல்:**


நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகளில், மத்திய அரசின் செயற்பாட்டில் இன்னும் மிகுந்த ஈடுபாட்டை எதிர்பார்க்கிறோம் என்பதை நான் மிகுந்த வருத்தத்துடனேயே குறிப்பிட வேண்டிய நிலையிலிருக்கிறேன். மாநிலங்களுக்கிடையேயான நதிநீர்ப் பங்கீட்டு அல்லது ஒதுக்கீட்டுப் பிரச்சினைகள் குறித்து, எத்தகைய வழிகாட்டுதல்களுக்கோ, குறிப்பாக மாநிலங்களுக்கிடையேயான கவுன்சிலின் விவாதங்களுக்கோ, எவ்விதமான அவசியமும் இல்லை என்பதே என்னுடைய அரசின் உறுதியான நிலைப்பாடாகும். பிறிதொரு நிலையில், மாநிலங்களுக்கிடையேயான நதிநீர்ப் பிரச்சினைகள் தொடர்பான 1956ஆம் ஆண்டுச் சட்டம், இன்னும் வலிவுபெற்றதாகவும், நிலைத்த பயனைத் தர வல்லதாகவும் விளங்கிடும் வகையில் உரிய உடனடித் திருத்தங்கள் தேவையென்பதே எங்களின் ஒருமித்த முடிவாகும.

**நிகழ்ச்சி நிரலின் 4-வது பொருளாக சர்க்காரியா கமிஷனின் பரிந்துரைகளின் 11வது பகுதியான 'பொருளாதார-சமூக நலத் திட்டங்கள்' குறித்த நிலைக் குழுவின் பரிந்துரைகளின் மீது ஆலோசித்தல்:**

திட்ட உருவாக்கத்தின், அனைத்து நிலைகளிலும், மாநிலங்களை ஈடுபடுத்திட வேண்டுமென்ற பரிந்துரையினை முழுமையாக ஆதரித்திட நான் கடமைப்பட்டுள்ளேன்.

மத்திய அரசின் திட்ட உதவியை, அதாவது மாநிலங்களுக்குத் தற்பொழுது வழங்கப்படும். 30 சதவிகிதம் என்பதை உயர்த்தி 50 சதவிகிதமாக வழங்க வேண்டுமென்பதை நான் மிகவும் வலியுறுத்த விழைகிறேன். மத்திய அரசின் பொறுப்பினால் ஆன திட்டங்களை அவற்றின் தொடர்புடைய நிதியாதாரங்களோடு, மாநிலங்களுக்கு மாற்றப்பட வேண்டுமென்ற எங்களது கருத்தினை நாங்கள் ஏற்கெனவே தெரிவித்துள்ளோம். அதுவரையில், மத்தியப் பொறுப்பிலான திட்டங்களை, அவற்றின் நோக்கங்களைத் திருப்திப்படுத்துகின்ற வரைமுறையுடன், உள்ளூர் நிலவரங்களுக்கேற்ப தேவையான மாறுதல்களுடன் நிறைவேற்றுதலில் தேவையான நெகிழ்வுடன் மத்திய அரசு அனுமதித்திட வேண்டும். மத்திய திட்டக்குழுவின் அலுவலர்களும், மாநில இடைநிலை அலுவலர்களும், ஒருவொருக்கொருவர் பிறிதொரு இடங்கள் என்று பரஸ்பர நிலையில் பணியாற்றிடுவது பற்றிய பரிந்துரை முழுமையான வரவேற்பிற்குரியதாகும்; ஏனெனில், திட்டமிடுதலில் 'கூட்டுறவு ஐக்கியம்' என்ற உணர்வு இவ்வகையில் மேலோங்கும் எனக் கருதிடலாம். தேசிய வளர்ச்சிக் குழுவின் தற்போதைய நிலைப்பாடு தொடர வேண்டுமென விரும்புகிறேன் என்பதோடு, இக்குழுவானது, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதாரப் பிரச்சினைகளை விவாதிக்கும் வகையில், அவ்வப்பொழுது முறையாகக் கூடிட வேண்டுமென்பதையும் வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், முக்கியப் பிரச்சினைகளின் அடிப்படையில் அவ்வப்போதைய தேவைக்கேற்றவாறு நிலைக் குழுக்களும் அல்லது துணைக் குழுக்களும் தோற்றுவிக்கப்பட வேண்டுமென்பதையும் தெரிவிக்க விழைகிறேன்.

**நிகழ்ச்சி நிரலின் 5-வது இனமாக, சர்க்காரியா கமிஷனின் பரிந்துரைகளின் 'வனங்கள்' என்ற பொருள் குறித்த நிலைக்குழுவின் பரிந்துரைகள் பற்றி ஆலோசித்தல்:**



அரசியல் சட்டத்தின்படி 'வனங்கள்' ''பொதுத் தலைப்பின்'' கீழ் இருந்தாலும், 1980ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வனப்பாதுகாப்புச் சட்டம் மற்றும் பிரிவு 1.7(1) ல் கண்டுள்ள வழிகாட்டுதல்களின்படி, மாநிலங்கள் தங்களது பயனுக்கு வன நிலங்களைப் பயன்படுத்திக்கொள்ள முன் அனுமதியைப் பெறத் தேவையில்லை என்பதை மத்திய அரசு எதிர்க்கவில்லை எனினும், ஒத்திசைவுக்காகக் கருத்துருக்கள் மாநிலங்களால் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுக் கொண்டுதானிருக்கின்றன என்பதைக் குறிப்பிடுவது சாலப் பொருத்தமானதே. வனநிலங்கள், வனம் சார் தாவரங்கள், உயிரினங்கள் மாநிலத்திற்குத்தான் சொந்தமெனினும், ஒப்பளிப்பு, அனுமதி அறிக்கை போன்றவற்றில் மத்திய அமைச்சகத்தின் தேவையற்ற கால விரயங்கள், மாநிலங்களின் மேம்பாட்டுத் திட்டச் செயலாக்கங்களுக்குத் தடையாகிவிடுகின்றன.

வனநிலங்களைத் திட்டங்களுக்கென வேறு வகைக்குப் பயன்படுத்திடக் கோரும், இத்தகு கருத்துருக்கள் மாநிலங்களால் மத்திய அரசுக்கு அனுப்பிடத் தேவையில்லை என்பதே எனது கருத்தாகும். குத்தகைகள் அல்லது வனப்பகுதிகளில் கனிம அகழ்ந்தெடுப்பு போன்றவற்றிற்கு மத்திய அரசால் ஒருமுறை அனுமதியளிக்கப்பட்ட பிறகு, அவற்றை மீண்டும் தொடர்வதற்கான அதிகாரங்கள் மாநிலங்களுக்குத் தரப்பட்டாக வேண்டும்.

17.7.97ல் நடைபெற்ற மாநிலங்களுக்கிடையேயான கவுன்சில் கூட்டத்தில், சர்க்காரியாக் கமிஷனின் அனைத்துப் பரிந்துரைகளின் மீதும் முடிவெடுத்திட 31.3.98 வரையிலான கால அவகாசம் தேவையென்ற எனது கருத்தினை நாமனைவரும் ஒப்புக் கொண்டுள்ளோம். அக்கருத்தை நான் மீண்டும் வலியுறுத்த விழைகிறேன். மாநில-மத்திய அரசுகளுக் கிடையேயான இத்தகு கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்த்துவதற்கு, மாநிலங்களுக்கிடையேயான இக்குழு ஒரு வலிமையான அமைப்பு என்பது நிரூபண மாகிவிட்டது; இதனால் **தகுதியான கூட்டமைப்பு என்ற தத்துவத்தை நோக்கி இந்தியா முன்னேறுகிறது** என்பது குறிப்பிடத் தகுந்ததே. சர்க்காரியா கமிஷனின் பரிந்துரைகளில் ஏற்கப் பட்டவைகளை நிறைவேற்றுதலின் மூலம், நம் நாட்டின் **மாநிலங்கள் பெரிய அளவில் அதிகாரங்களைப் பெறுகிற வண்ணம் நமது இந்திய அரசு வழி வகுக்கும் எ**ன்**றே நான் நம்புகிறேன்.**

தொகுப்பு : **ஆர். பரதன்**, எம்.ஏ.,

# மகாகவி சி.சுப்பிரமணிய பாரதியார்

- பேரறிஞர் அண்ணா

மக்கள் கவிஞர் - மனங்கவரும் மகத்தான இந்தப் பட்டம் சாதாரணக் கவிஞனுக்கு வழங்கப்படும் புகழ்மாலை இல்லை.

பன்னூறு ஆண்டுகளாய்ப் பாரிலே கவிஞர்கள் உலவிவந்தார்கள்; அளவுக்கு அதிகமாகவே உலவிவந்தார்கள். ஆனால் அவர்கள் செய்து வந்த வேலையெல்லாம் வேதங்களுக்கு விரிவுரை, விளக்கப் பாடல்கள் தீட்டுவது-படாடோப அரண்மனை வாழ்விற்குத் தங்கள் கவிதைத் திறத்தால் பகட்டுப் பூச்சுப் பூசுவது-ஆகியவைதாம்.

மக்களுக்காக - மக்களைப் பற்றி - மக்களிடையே பழகு மொழியில் கவிதை இயற்றிய கவிஞன் - மிகமிக அருமை!

கவிஞனின் குரல், கோவில் காண்டாமணி செய்யவேண்டிய வேலையைச் செய்வதாகவோ, அரண்மனை முரசங்கள் அறைந்து அறிவிக்கும் ஒலியைப் பரப்புவதாகவோதான் இருந்தது. மக்கள் மனத்துள் உறையும் எண்ணத் துடிப்புகளை - சிந்தனையில் குமிழியிடும் சீரிய கருத்துகளை-எழுத்து வடிவிலோ, ஒலி உருவிலோ எடுத்து இயம்புவதாய் இல்லை.



தப்பித் தவறி, கவிஞன் மக்களோடு பேசத் தொடங்கினால், அந்தப் பேச்சு-இந்த உலக மக்கள் எவ்வளவு பேராசை பிடித்தவர்களாக, இகலோக இச்சை நிறைந்தவர்களாக ஆகிவிட்டார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட - உலகம் எவ்வளவு நிலையற்ற தன்மையது, எத்தகைய மாயையின் வடிவமுடையது என்பதை விளக்குவதற்காக - போதனைகள் உதிர்ப்பதற்காகத்தான் இருக்கும்.

### கங்காணிகள் ஆன கவிஞர்கள்

அரச தண்டம், பணக்கார வர்க்கத்தின் சவுக்கு - ஆகியவற்றுக்குப் பதிலாகப் பயன்படும் கருவியாகக் கவிஞனின் குரல் அன்று மிளிர்ந்தது. அரச பரிவாரத்திலே மற்றுமோர் இன்றியமையாத அங்கமாக-இகத்திலே குற்றப் பத்திரிகை படித்து, பரலோக விசாரணை மண்டபத்தில் உரிய தண்டனையைப் பெற இழுத்து நிறுத்தும் 'போலீஸ்காரனாக'-ஆகிவிட்டான் கவிஞன்!

அத்தகைய கவிஞர்கள் மக்களுக்குப் புரியாத, அவர்களுக்கு முற்றிலும் புதியதான மொழியிலேதான் பேசினார்கள். தங்கள் குலமான மக்கள் குலத்தை வெறுத்து ஒதுக்கிவிட்டு, தங்கள் அறிவுக் கூர்மையையும், திறமையையும் அரண்மனைப் புறங்களிலே உலவி வர அனுமதி பெறும் கருவிகளாகப் பயன்படுத்தினார்கள். அங்கே நுழைந்ததும் மன்னர் புகழ் குறித்துப் பாமாலைகள் பாடினார்கள். மன்னன் எத்தகையோனாய் இருந்தாலும் கவலை இல்லை. அவன் விட்டெறியும் காசு, பசும்பொன்னாய் இருந்தால் போதும் என்பதே அவர்கள் குறி.

வேதனை விளைவிக்கும் இந்த விதிக்கு விலக்காக விளங்கியவர்கள் சங்ககாலப் புலவர்கள். ஆனால் அவர்களைப் பற்றி இன்றைய நம்மவர்கள் அறிந்திருப்பது மிகவும் கொஞ்சமே!

ஒழுக்கங்களின் உறைவிடமாய் விளங்கிய அப்புலவர்கள், பாடல்களைப் பாடிப் பணம் பண்ணும் வியாபாரிகளாகவோ, இன்பரசப் பாடல்களை ஏலம் கூறுபவர்களாகவோ வாழவில்லை.

பிற்காலத்தில் வந்தவர்களோ வேறு வகையினராய் மாறினார்கள். 'மக்கள் கவிஞராக மலர்வது கடினம்; அத்துடன் அது இலாபகரமான தொழிலும் இல்லை' என்று எண்ணினார்கள். அதனால்தான் சங்க காலத்திற்குப் பின்னர் செல்வாக்கு மிக்க மக்கள் கவிஞராக யாரையும் காணமுடியவில்லை.


பரலோக இன்பம் கிட்டுவதற்காகச் சேர்த்துவைக்கும் சேமிப்புகளே ஒழுக்கமுறைகள் என்னும் கருத்து பரவியது. இந்த நாசகாரக் கருத்து வேரூன்றிய காலத்திற்குப் பின் முளைத்த கவிஞர்கள்-இகலோக இன்பங்களைப் பரலோகப் பரமானந்த வாழ்விற்காகத் துறக்கத் தூண்டும் கங்காணிகளாகத் தங்களைத் தாங்களே நியமித்துக்கொண்டு செயலாற்றினார்கள்.

### பரலோக சுவர்க்கத்தைப் பாடியவர்கள்

அறிவாளியான வங்கி முதலாளியைப் போல-சுறுசுறுப்பாக இயங்கும் காப்பீட்டுக் கழக முகவர் (இன்சூரன்ஸ் ஏஜன்ட்) போல-பரலோக வங்கியின் பாதுகாப்பான முதலீட்டுப் பலம் பற்றி, நிகழ்கால இன்பத் துறவுப் 'பாலிசி பிரிமியம்கள்' மூலம் கிடைக்கப்போகும் எதிர்காலப் பரலோகக் காப்பீட்டு (இன்சூரன்ஸ்) இன்பத் தொகை பற்றி எல்லாம் உரக்கவே பிரச்சாரம் செய்தார்கள்.

மனித வாழ்வின் பயனற்ற தன்மை குறித்து எடுத்துச் சொல்லி, இகலோக இன்பங்களைத் துறக்கத் தூண்டினார்கள்.

மேக மண்டலத்திற்கு மேலே, எங்கோ, எவர் கண்ணிலும் படாதிருக்கும்-'சுவர்க்க பூமி'யின் பெருமையை மிகைப்படுத்திப் பாடல்கள் இசைத்தார்கள். பாதாளத்தில் இருக்கிறது 'நரகம்' எனக் கற்பித்தார்கள்.



அந்தக் காலம், அறிவியல் தொலைநோக்கிக் கண்ணாடியைப் (Telescope) பெற்றெடுக்காத காலம். எனவே கவிஞர்களின் கற்பனை ஆற்றல் மக்களை மயக்கி மகிழ்ச்சி ஊட்டியது. பாமரர்கள் மெய்ம்மறந்து வியந்தார்கள். பகுத்தறிவாளர்கள் - அறிஞர்கள் - கருத்துக்காக அல்ல; கலை நயத்திற்காகப் பாராட்டு வழங்கினார்கள்.

### பாரதியின் இளமை நாட்களில்

'மக்கள் கவிஞர்' ஆக மாறுவது எளிதான செயல் இல்லை. மிகவும் கடினமான இந்தச் சாதனையில்தான் முயன்று வெற்றி பெற்றிருக்கிறார் சி.சுப்பிரமணிய பாரதி.

உயர்தர வர்க்கத்தினர் உளம் மகிழ்விக்கும் கவிஞன் ஆவது மிகவும் எளிது. நீல வான் கடலில் மிதக்கும் வெள்ளி ஓடமான நிலாவைப் பற்றி இரண்டு பாடல்கள் பாடினால் போதும்; கருவானத் திரை கிழித்துக் கண்சிமிட்டும் விண்மீன்களைக் குறித்துச் சில கவிதைகள் எழுதினால் போதும்; எழில் சிந்தும் மலர்களின் இனிய மணம் பற்றி ஒன்றிரண்டு பாக்கள் இசைத்தால் போதும்; ஆற்று நீரின் சலசலப்பில் எழுந்து எதிரொலிக்கும் தாள நடனம்-காதல் வெளி மூண்டெழக் கிளம்பும் கனிச் சுவைக் குளறல்-வீரர் தம் தீரம்-இவை பற்றிச் சிற்சில சொற்சித்திரம் தீட்டினாலே போதும்; கவிஞர்கள் வரிசையில் 'சரியாசனம்' பெற்றுப் புகழ் விருதும் பூணலாம்!

ஆனால் மக்களின் கவிஞனோ, தன் கடமையைச் சரியாய் ஆற்ற-மற்றவரால் வீசி எறியப்படும் வெறுப்பு வேல்களை எதிர்த்து நடக்கவேண்டும்; ஆபத்தான இடுக்கண்களில் எல்லாம் முக்குளித்து எழுதவேண்டும். பாராட்டுதல், ஆதரவு, செல்வாக்கு குறித்தெல்லாம் சிந்திக்கவே கூடாது.

தொடக்கத்திலேயே சுப்பிரமணிய பாரதியாரின் புலமைக் கூர்மை பற்றியும், திறமை குறித்தும் அவருடைய நண்பர்களான ஒரு சிறு குழுவினருக்குத் தெரியும். அவர்கள் வியந்து புகழ்ந்தார்கள். ஆனால், ஏனைய மக்கள் அனைவரும் அவர்களுடைய கவிஞராகிய அவரைப் பற்றி அறிந்தது எத்தனையோ ஆண்டுகளுக்கு அப்புறம்தான். அப்பொழுது கூட ஒரு வித அரசியல் மெருகேறிய ஒரு சில கவிதைகள் மட்டுமே பொதுமக்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. மக்கள் கவிஞர் மட்டுமே கற்பனை செய்து பாடக்கூடிய தனிச் சிறப்பான தன்மை பெற்ற கவிதைகள் பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை.

### உழவனைப் பாடிய பாரதி

நம் நாட்டில் கவிஞர்களுக்குக் குறைச்சல் இல்லை. ஆனால் 'நான் மக்களைப் பற்றிப் பாடுகிறேன்' என்று ஒருவன் சொன்னால், மக்களோ ஐயப்பாடு கொண்ட கண்களுடன், வெறுப்புடன் அவனைப் பார்ப்பார்கள். அவனுக்கு ஒப்புதல் கிடைக்காது. எத்துணைக்கெத்துணை அவனுடைய கவிதைகள் புரட்சிக் கருத்துக்கள் பொதிந்தனவாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமான எதிர்ப்பை அவன் சமாளிக்க வேண்டியிருக்கும்.

பாரதியார்-ஏரோட்டும் சாதாரண உழவனுக்குப் பாட்டுப் பாடினார். தொட்டில் ஆட்டும் தாய்மார்களுக்கு-விளையாட்டு வெளிகளிலே ஓடியாடும் குழந்தைகளுக்குக் கவிதைகள் இசைத்தார்.

கடந்த காலப் புலவர் சிகாமணிகளைப் போல, வேதாந்த வியாக்கியானங்களை விடுதலைக் கோரிக்கைக்குச் சப்பைக்கட்டாக அவர் பயன்படுத்தவில்லை. உலகின் மிகத் தொலைவில் உள்ள நாட்டு மக்களின் விடுதலைப்

போராட்டங்களைக் கவிதைகள் ஆக்கி, மக்களுக்குப் படைத்தார்.

### உலகப் புரட்சி ஓவியங்கள்

இத்தாலிய விடுதலை உதயத்தை-மாஜினி என்னும் மாவீரனின் சலியா உழைப்பால் மக்கள் புத்துயிர்ப்புப் பெற்று உரிமைப் போரில் வெற்றிகரமாக ஈடுபட்டதை-உன்னதச் சொற் சித்திரமாகத் தீட்டிக் கொடுத்தார்.

புரட்சிக்குப் பின் உருவான பிரெஞ்சு நாட்டுக் காட்சியைப் பாடினார்.

ஜார் மன்னனின் தளைகளைத் தகர்த்து நொறுக்கி, வீறுடன் எழுந்து நின்ற இரஷ்யாவைப் பற்றிப் புதுமை ஓவியம் தீட்டினார்.

விடுதலை பெற்ற பெல்ஜியம், பிரான்சு, சிவப்பு இரஷ்யா குறித்த சொல்லோவியங்கள் எல்லாம் அவர் மக்களுக்குப் பரிசாக அளித்தவை.

பிஜித் தீவு வாழ்வு பற்றிய பேனா சித்திரத்தை மக்கள் முன் வைத்து, "பாருங்கள் சகோதரர்களே, உம்முடன் பிறந்த சகோதரர் நிலையை" என்று காட்டினார்-ஆங்கில நாடகாசிரியர் ஷேக்ஸ்பியரின் தன்மையிலே! மக்கள் கவிஞனுக்குரிய பொலிவு அதுதான்!

தன் நாட்டு மக்களின் முட்டாள்தனத்தையும், குற்றம் குறைகளையும் சுட்டிக்காட்டத் தயங்கமாட்டான் மக்கள் கவிஞன். 'சிந்தையிலும், செயலிலும் அவர்கள் எவ்வளவு பிற்போக்கானவர்களாக இருக்கிறார்கள். அதே வேளையில் உலகின் ஏனைய நாடுகள் எவ்வளவு வேகமாக முன்னேறுகின்றன, எவ்வளவு சிறப்பாகச் செயல்புரிகின்றன, அங்கெல்லாம் வாழ்வு எப்படி வளம் பெறுகிறது?' என எடுத்துக் காட்ட அஞ்ச மாட்டான்.

வாழ்க்கை வசதிகள் பெற்று மேட்டுக் குடிகளாகத் திகழ்ந்தவர்களைக் கண்டு, தொடை நடுங்கவில்லை பாரதி! அவர்களுடைய தவறுகளையும் தயங்காமல் மக்கள் முன் வைத்தார்; வஞ்சகத்தையும், துரோகத்தையும், அவற்றின் உண்மை வடிவத்திலே கொணர்ந்து நிறுத்தினார்; ஒப்பற்ற தீரம்-அளவற்ற உற்சாகத்தோடு இத்தகைய பணி புரிந்தார் அவர்.

### தேசியச் சிமிழுக்குள் அடங்காதவர்

பாரதியை, 'தேசியக் கவி' என அளவுக்கு அதிகமாகப் பாராட்டுவதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள் ஒரு சாரார். கவிஞர் மீது உள்ள காதல் அல்ல காரணம்! இப்படி சித்திரித்துக் காட்டுவதன் மூலம் கவிஞரின் இன்னொரு தன்மையை-அஃதாவது பாரதி, 'மக்கள் கவிஞர்' என்னும் உண்மையை-மறைத்துவிடலாம் என்பது அவர்கள் எண்ணம்.

சுற்றி வேலி கட்டிக்கொண்டு, அந்த எல்லைக்குள் அடங்கி, ஒடுங்கி விடுபவை அல்ல பாரதியாரின் பாக்கள். வேதாந்த-தேசியச் சிமிழ்களில் அவற்றை அடக்கமுடியாது.

புராதனச் சம்பிரதாயங்களின் புராணக் கற்பனைகளின் ஊழல்களை அம்பலப்படுத்த அவர் அஞ்சவில்லை.

பழமைப் பாதுகாவலர்களாக-சம்பிரதாய உடும்புகளாக விளங்குபவர்களை நோக்கி ஆவேசமாக அள்ளி வீசுகிறார் சுடு சொற்களை.

"ஏ, முட்டாள்களே! நெடுங்காலமாக நிலவி வருகிறது என்ற ஒரே காரணத்திற்காகச் சில கருத்துக்கள் உன்னதமானவை-உண்மையானவை-என்று சாதிக்கவா வருகிறீர்கள்?

பொய்யும் புளுகுகளும் புராணக் கதைகளாக ஊழி ஊழிக் காலமாகத்தான் உலவி வருகின்றன. 'அவை உயர்ந்த பண்புகள்; ஆகவே கட்டாயமாக எல்லாராலும் கடைப் பிடிக்கப்பட வேண்டியவை' என ஒப்புக் கொள்ளத் தூண்டுவதற்கு முன்வருவீர்களா?

பண்டைக் காலத்தில் அறியாமையும், கொடிய கருத்துக்களும் இல்லவே இல்லை என்று எண்ணுகிறீர்களா, நீங்கள்? செத்த சிந்தனைகள் என்னும் பிணத்தை ஏன் இன்னும் நீங்கள் கட்டிக்கொண்டு அழவேண்டும்?

நிகழ் காலத்தில் வாழ்ந்து, எதிர்கால வாழ்விற்கு வகை செய்யுங்கள்! இறந்த கால இருட்டு வெளியிலே துழாவிக்கொண்டு அலைய வேண்டாம்! கடந்த காலம், கடந்து போனதுதான்; சென்றது இனி மீளாது!"

இங்கேதான் மக்கள் கவிஞரை நாம் சந்திக்கிறோம். வாழ்வோடு ஒட்டிய ஒழுக்க முறையை மக்கள் சமுதாயத்திற்காக அமைத்துக் கொடுத்துள்ளார் அவர்.

புராணக் கோட்பாடுகளைப் போல, மண்ணோடு ஒட்டாத சித்தாந்தம் அன்று அவர் காட்டும் வழி. மக்களுக்கு ஒரு புதிய விழிப்பு ஊட்டினார் அவர்.

'உலகம் மாயை' என்னும் சாக்குருவி வேதாந்தம்-பாழுலகம் பொய்யே; பரம பதம் போ! என்ற படுமட்டமான ஒரு கொள்கை-மக்களிடையே பரவுவதைத் தடுத்தார். அத்தகைய மூட நம்பிக்கையைக் கண்டு எள்ளி நகைத்தார்; காறி உமிழ்ந்தார்; ஆசிரம வாசிகளுக்கு ஆத்திரம் வரச் செய்தார். விளைவு என்னாகுமோ என்று வீண் பீதி கொள்ளவில்லை. அத்தகைய சோம்பேறி வேதாந்தங்களில் சொக்கி நிற்கும் மக்கள் உதவாக்கரை களாக-ஒன்றுக்கும் பயன்படாத பிற்போக்குப் பேர்வழிகளாக-ஆகிவிடுவார்கள் என்பது அவர் கணிப்பு.

### பணக்காரக் கொடுமையைச் சாடியவர்

பசி, வறுமை, அறியாமை முதலியவற்றை அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. எனவே, பணக்காரர்களின் கொடுமையை அவர் பலமாகச் சாடுகிறார்-

'தனி ஒருவனுக்கு உணவு இலையெனில் - இந்த சகத்தினை அழித்திடுவோம்'

- என முழங்குகிறார்.

"வாழ்க்கை வசதிகள் அனைத்தும் பெற்று, மக்கள் வாழ வேண்டும். வணிகம் வளமுடன் நடைபெற வேண்டும். இயந்திரத் தொழில்கள் பெருகிட வேண்டும். புதுமைக் காலத்தின் நலன்கள் எல்லாம் நாட்டிலே பொங்கிக் குவிய வேண்டும்!

- என்றெல்லாம் அவர் விரும்புகிறார்.

பூசாரித்தனமும், சுலோக உரையும் அவர்தம் கோட்பாடுகள் அல்ல; மக்களுக்குப் பணி புரிவதே- உடன் பிறப்பான உயிர்களுக்கு உழைத்தலே-அவரது மதம்.

எத்தகைய அபாயச் சூழலிலும், நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையுமாக நெஞ்சம் தளராமல் பாரதியார் நடந்துசெல்வதை நாம் காண்கிறோம்.

## இருவகை ஊழிகள் மோதிய காலம்

இரு ஊழிகள் (யுகங்கள்) மோதும் எல்லை-பாரதி தோன்றிய காலம். அவர் பிறந்த எட்டையபுரம் ஊரில் செல்வம் புரளும் சிற்றரசர் ஆட்சி! குடிசைகள் புடை சூழ ஊர் மையத்திலே நிமிர்ந்து நின்றது அரண்மனை மாளிகை! பழைய சாதிப் பாகுபாடுகளின் ஆதிக்கம் அப்போது குன்றவில்லை. அவரும் சாதியில் பிறப்பால் உயர்குலத்தவர். செல்வச் செருக்கிற்கும் வைதீகச் சனாதனத்திற்கும் ஊடே நவீன நாகரிகம் தலை நீட்ட முனைந்த சமயம் அது. புரட்சி எண்ணங்கள் பூக்கத் தொடங்கின. இயந்திர உலகால் எழும்பிய புதிய அமைப்பு முறை, பழைமையான முறைகளை ஊடுருவிக் கொண்டு பாய்ந்து நுழைவதை, வியப்பும் திகைப்பும் மின்னும் விழிகளுடன் சமுதாயம் பார்த்துக்கொண்டிருந்தது. புது ஊழியின் கண்களிலே பழைமைக்கு அறைகூவல் விடுக்கும் மிடுக்கு மிளிர்ந்தது.

அந்த வேளையில்தான் பாரதி தோன்றினார். பழைய ஊழிக்கும் புதிய ஊழிக்கும் நடக்கவிருக்கும் போராட்டத்தில் தானும் ஒரு வீரனாகப் பங்கு கொள்ளலாம் என்று அவர் கருதியிருக்கக் கூடும்! பழைய சமுதாய அமைப்பு முறையிலே அவரது இடம் பாதுகாப்பு நிறைந்தது; வசதிகள் மலிந்தது.

## முரண்பாடுகள் செறிந்த நாடு

பாரதி பிறந்த இந்த நாடு-முரண்பாடுகள் செறிந்த களம். அகந்தையும், அடக்குமுறையும் - கொடுமையும் அன்பும்-நாட்டிலே நெருங்கி அடுத்துக்கொண்டு இருந்தன. செயல் திறம் ததும்பிக்கொண்டு இருந்தது; அதே வேளையில், மக்களை மனம் தளையச் செய்து, செயல் அற்றவர்கள் ஆக்கும் அபத்தக் கற்பனைகளும் அளவு மீறி உலவின; பகட்டான கற்பனைகள் - பல்லாயிரக்கணக்கான ஊமை மக்கள்-அறிவு மயங்கி ஆழ்ந்த நிலை-அச்சமும் சூரத்தனமும் பக்கத்திலே பக்கத்திலே கொலுவிருந்த தன்மை - பக்தியும் பயமும் பாசறை கொண்டிருந்த காட்சி-அனைத்தின் உறைவிடமாகவும் திகழ்ந்தது நாடு.

பைரன், எட்மண்ட் பர்க்கு - ஆகியோர் இந்த நாட்டிலே அச்சமயத்தில்தான் கால் பாவினார்கள் - தங்கள் எழுத்தால், பேச்சால்! அவர்களை-அவர்களது எழுத்துக்களை, பேச்சுகளை வரவேற்க, நாட்டிலே இருந்தவை பாரதமும் பாகவதமும் தான்.

அப்போது, துப்பாக்கியும் பீரங்கியும் முழங்கி, நாட்டு மக்களின் காதுகளிலே ரீங்காரம் செய்தன! முரண்பாடுகள் நிரம்பிய இந்த நிலப்பரப்பிலே அவற்றோடு கோவில் மணியோசைகள்- நகராக்கள் - கலந்து முழங்கிய முழக்கமும் ஓயவில்லை.

பாரதி தோன்றினார். ஆனால் நாட்டின் இயல்பிற்கு இணங்க, வரலாறு ஆமை வேகத்தில்தான் நகர்ந்து கொண்டிருந்தது. வரலாற்றுப் பல்லக்கை விரைவான ஓட்டத்தில் செலுத்திடப் பலமாகத் தடிபோட்டு எழுப்ப வேண்டியிருந்தது. பாரதியின் சிறப்பு-அவர் அத்தகைய தடிபோட்டு எழுப்பும் பணியில் ஈடுபட்டதில்தான் இருக்கிறது. மக்களின் கவிஞராக மாறி, மகத்தான முறையில் அவர் அப்பணியைச் செய்தார்.

- பேரறிஞர் அண்ணா வானொலியில் **'People's Poet'** என்னும் தலைப்பில் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்
('அண்ணா போற்றிய பெருமக்கள்' நூலிலிருந்து)

### அட்டைப் படங்கள் விவரம்

**முதலாவது அட்டை:**

சென்னையில் நடைபெற்ற ஊனமுற்றோர் நாள் நிகழ்ச்சி.

ஊனமுற்றோர்க்கு மறுவாழ்வு அளித்திடும் வகையில் - 1.5.96 முதல் 31.3.97 வரை ரூ.11.28 கோடியும், 1.4.97 முதல் 31.10.97 வரை ரூ.6.16 கோடியும் ஆகமொத்தம் ரூ.17.44 கோடி **மாண்புமிகு முதலமைச்சர்** நிதிஒதுக்கீட்டின்படி செலவிடப்பட்டுள்ளது.


**இரண்டாவது அட்டை:**

**மகாகவி பாரதியார்** (பிறந்த நாள் - 11.12.97) நினைவில்லம், **மூதறிஞர் ராஜாஜி** (பிறந்த நாள் - 9.12.97) நினைவு மண்டபம்.

**கடைசிப்பக்க அட்டை:**

பூம்புகார் விற்பனை நிலையங்களுக்குப் புகழ்சேர்க்கும் தஞ்சாவூர் கலைத்தட்டுகள்.

# போலியோ சொட்டு மருந்து முகாம்- தமிழ்நாட்டில் குறியீட்டு இலக்கை விஞ்சி, சாதனை படைக்கப்பட்டது.



இளம்பிள்ளைவாத நோயை அடியோடு ஒழித்திடும் உயரிய நோக்கில், 7.12.97 அன்று தமிழ்நாட்டின் குக்கிராமங்கள் உட்பட அனைத்துப் பகுதிகளிலும் 'தீவிர போலியோ நோய் ஒழிப்புத்திட்டம்' மிகுந்த முனைப் புடன் செயல்படுத்தப்பட்டது.

சென்னை மாநகரில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால், கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் போலியோ சொட்டு மருந்து முகாம் தொடங்கி வைக்கப்பட்டது. இம்முகாமில், கலைஞர் அவர்கள் தன் திருக்கரங்களால் 3 குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து கொடுத்தார்.

இந்நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா.வீராசாமி அவர்களும், மருத்துவர்களும், அரசு உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். அன்று மட்டும், இங்கு 1000 குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து கொடுக்கப்பட்டது.

தமிழகமெங்கும் உள்ள அனைத்து மாநகர், நகராட்சி மற்றும் ஊரகப்பகுதிகளில், அன்றைய தினம் 62 இலட்சம் குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து கொடுக்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருந்தது; ஆனால், அதற்கும் மேலாக - 65.34 இலட்சம் குழந்தைகளுக்கு அன்று சொட்டு மருந்து வழங்கப்பட்டது. இதன் மூலம் 106 சதவிகிதம் எய்தப்பட்டு, குறியீட்டை விஞ்சிச் சாதனை படைக்கப்பட்டுள்ளது.


அன்றைய தினம் சொட்டு மருந்து கொடுக்கப்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும், 18.1.98ல் தமிழகமெங்கும் இரண்டாம் முறையாகச் சொட்டு மருந்து கொடுக்கப்படும். இவ்வாறான முயற்சிகளின் மூலம், போலியோ நோயை ஒழிக்கும் 'உலகச் சுகாதார நிறுவன'த்தின் உன்னத நோக்கம் நிறைவேறத் தமிழகம் தன் பங்கைச் சிறப்புற ஆற்றி வருகிறது.

எதிர்காலத் தமிழகத்தில் இளம்பிள்ளைவாதம் என்ற கொடிய நோய் ஒழிக்கப்பட்டுவிடும் என்பது உறுதியே.

# விவசாயிகளின் குறுகியகாலப் பயிர்க் கடனில் கூட்டுறவு வங்கியின் வட்டி ஒரு சதவிகிதம் குறைப்பு!

# அடுத்த ஆண்டு இறுதிக்குள் மண்ணெண்ணெய் வழங்கும் புதிய நிலையங்கள் 500 அமைப்பு!

**அனைத்திந்தியக் கூட்டுறவு வார நிறைவு விழாவில்**
முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் அறிவிப்புகள்!



"மிகுந்த சீரோடும் சிறப்போடும் எழிலோடும் எழுச்சியோடும் நடைபெறுகின்ற கூட்டுறவு சங்கங்களுடைய வார நிறைவு விழாவிலே கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் சந்திப்பதிலே நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். வள்ளுவர் கோட்டத்தில் இடம் இல்லை என்கின்ற அளவிற்கு நிரம்பி வழிகின்ற இந்தக் கூட்டத்தைக் கூட்டுறவு சங்கங்களைச் சார்ந்தவர்கள் மாத்திரம் பங்கு பெற்றுள்ள கூட்டமாக நான் எண்ணவில்லை. கடந்த ஒரு வார கால இடைவெளிக்குப் பிறகு எங்களையெல்லாம் சந்திக்க வேண்டுமென்று ஆர்வத்தோடு வள்ளுவர் கோட்டத்திலே நிரம்பியிருப்ப வர்களையும் எனக்குத் தெரியும்.

## காந்தியார்-நேரு கருத்துரைகள்

கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி இந்திய நாட்டின் மாபெரும் தலைவர்கள் எல்லாம் என்ன கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள் என்பதை இந்த அருமையான விழா நேரத்திலே நினைவிலே கொள்வது கூட்டுறவு இயக்கத்திற்கு நம்மாலும் பயன் விளையக் கூடிய நிலையை ஏற்படுத்தும் என்பதாலும் சிலவற்றைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

உத்தமர் காந்தியடிகள் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றிப் பேசும் போது - "சமூகத்தை நல்ல ஒழுங்கான முறையிலே வைத்திருப்பதற்கு ஒருவரையொருவர் சார்ந்திருப்பது அவசியமாகும்போது, அது சார்பு ஆகாது; கூட்டுறவு ஆகிவிடும்" என்று குறிப்பிடுகிறார்.

"காந்தியடிகள் மேலும் கூறுகிறார்; கூட்டுறவில் இனிமை இருக்கிறது. கூட்டுறவாக வாழ்பவர்களில் யாரும் பலமானவர்கள், பலவீனமானவர்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை'' என்ற இந்தக் கருத்தையும் உத்தமர் காந்தியடிகள் உரைத்திருக்கின்றார்.

பண்டித நேரு அவர்கள் ''கூட்டுறவு என்பது பொருளாதார மற்றும் சமுதாயச் சிந்தனைக்கு ஏற்ற ஒன்றாகும். சமத்துவ நிலையை அடையப் பயன்படுத்தும் முதல் படியே கூட்டுறவாகும்'' என்று குறிப்பிடுவதோடு ''உலகம் சுரண்டலற்ற சமுதாயமாகத் திகழ கூட்டுறவு இன்றியமையாதது. உலகம் ஒரு பெரிய கூட்டுறவுச் சங்கமாக ஒரு நாள் மாறும் என்பதிலே எனக்குச் சந்தேகமில்லை'' என்றும் குறிப்பிடுகிறார்.

''கூட்டுறவுச் சங்கங்கள் மிகப் பெரியதாக இருப்பதன் மூலம், மிக வெற்றிகரமாகச் செயல்பட முடியாது. ஒரு கிராமம் அல்லது இரண்டு கிராமங்களுக்கு ஒரு சங்கம் என அமைவதை நான் விரும்புகிறேன்'' என்றும் நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

தந்தை பெரியார் அவர்கள் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது "கூட்டுறவு என்கிற உயரிய சரியான நிலையானது நம்முடைய நாட்டில் ஏற்பட்டுப் போனால் ஜன சமூகமானது கவலையற்று, சஞ்சலமற்று, நாளைக்கு என்ன செய்வோம் என்று ஏங்கித் தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலைமையற்று, நிம்மதியாக, சுகமாக, குதூகலமாக வாழ வழி ஏற்படும்'' என்று உரைப்பதோடு மேலும் அழுத்தந் திருத்தமாகப் பெரியார் கூறுகிறார்; "நமது உடலிலே உள்ள பழைய 'தனித் தத்துவ' இரத்தத்தை எடுத்துவிட்டுக் கூட்டுறவுத் தன்மை என்ற இரத்தத்தைப் பாய்ச்ச வேண்டும். இது நம்மால் முடியுமா என்றிருக்கக் கூடாது. கண்டிப்பாக இது முடியாமல் போகாது" என்று குறிப்பிடுகிறார்.

கொடி தகுதியான கொடி என்றாய்ந்து அறிவிக்கவே பல ஆண்டுக் காலம் தேவைப்பட்டு 1923-ஆம் ஆண்டுதான் அந்தக் கொடி எப்படி இருக்க வேண்டும் என்ற ஒரு முடிவுக்கு வந்து 'கெண்ட்' என்ற இடத்தில் சர்வதேசக் கூட்டுறவு மாநாட்டில் 1924-ஆம் ஆண்டு அந்தக் கொடியை ஏற்றுகிறார்கள். அதுதான் இன்று பறந்து கொண்டிருக்கின்ற வானவில்லின் நிறம் பெற்ற அந்தக் கொடியாகும்.

அது கூட நான் பிறந்த 1924-ஆம் ஆண்டிலேதான் முதன் முதலாக ஏற்றப்பட்டிருக்கிறது என்பதை எண்ணி நான் பெருமையடைகிறேன்.

எனவே, பல விஷயங்களில் நான் பிறந்த ஆண்டிற்கும்

## ஊழியர்கள் குடும்பப் பாதுகாப்புத் திட்ட உதவித் தொகை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்வு!

**கூட்டுறவுக்கான முதல் வித்து**

பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, ''அரசியல் கட்சிகளின் செல்வாக்கைக் கூட்டுறவுத் துறை பெற்றால், அதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் அரசியல் செல்வாக்கைக் கூட்டுறவாளர்கள் தங்கள் சொந்த நலனுக்குப் பயன்படுத்தக் கூடாது; கூட்டுறவில் தங்கள் தவறுகளை மறைக்க அரசியல் செல்வாக்கை எவரும் பயன்படுத்தவே கூடாது; அரசியலுக்கு அப்பாற்பட்டதாகக் கூட்டுறவு இயக்கம் விளங்கவேண்டும். இதில் இருப்போர் தமது சொந்த நலத்தை முன்வைக்காமல் பிறர் நலம் கருதிப் பாடுபட வேண்டும்'' என்று குறிப்பிடுகிறார்.

இந்த அற்புதமான தத்துவத்தை உருவாக்குவதற்கான காலகட்டமாக இருந்தது 1895-ஆம் ஆண்டாகும். அந்த ஆண்டிலேதான், இலண்டன் மாநகரத்திலே, 'இண்டர் நேஷனல் கோவாப்பரேடிவ் அலையன்ஸ்' என்ற சர்வ தேச அளவிலே ஒரு மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிலேதான் இந்த அமைப்புக்கான வித்து ஊன்றப்பட்டது.

அந்த வித்து ஊன்றப்பட்ட போதே அந்த மாநாட்டிலே சிலர் பேசினார்கள், கூட்டுறவு இயக்கத்திற்கு ஒரு கொடி வேண்டும் என்று! 1895-இல் கொடி வேண்டும் என்று தீர்மானம் அங்கே வெளியிடப்படுகிறது. அதற்குப் பிறகு 1923-ஆம் ஆண்டிலேதான் அந்தக் கொடி எப்படியிருக்க வேண்டுமென்று யோசிக்கப்படுகிறது. 1895-இல் சொல்லப்பட்டு, இடையிலே பல ஆண்டுக் காலம் உருண்டோடிய பிறகு அந்தக் கொடி எப்படியிருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**என் பிறந்த ஆண்டிலேதான்**
**முதல் கூட்டுறவுக் கொடி**

கொடியைத் தீர்மானித்துக் கொண்டு கட்சியை ஆரம்பிக்கின்ற காலக் கட்டம் இது. ஆனால் அன்றைக்கு ஒரு தத்துவத்தை, ஒரு கொள்கையை, ஒரு எண்ணத்தை வெளிப்படுத்தி அதை உருவகப்படுத்திவிட்டு அதற்கு எந்தக்

எனக்கும் சம்பந்தம் இருக்கின்றது. காவிரிப் பிரச்சினை ஆரம்பமானதே, அதற்கு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதே 1924-ஆம் ஆண்டுதான். அந்த ஆண்டில்தான் நான் பிறந்தேன்.

கூட்டுறவு சங்கத்திற்கான கொடி உயர்த்தப்பட்டதும் 1924-ஆம் ஆண்டுதான்! அப்போதுதான் நானும் பிறந்திருக்கிறேன். எனவே, கூட்டுறவு இயக்க மாநாடுகளில் கலந்து கொள்வதில் எனக்கொரு தனித் தகுதி உண்டு என்பதற்கு இந்தச் சரித்திரச் சான்றும் ஒரு காரணமாகவே அமைந்திருக்கின்றது.

இன்னொன்றை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு, திருவாரூர் கமலாம்பிகா கோவாப்பரேடிவ் அர்பன் வங்கியிலேயிருந்து 216 ரூபாய்க்கான காசோலை எனக்கு வந்தது. உதவியாளர் சண்முகநாதன் அதை என்னிடத்திலே கொடுத்து - "அய்யா, இது திருவாரூர் வங்கியிலேயிருந்து வந்திருக்கிறது" என்று சொன்னார். என்னவென்று கேட்டால் - நான் அந்த வங்கியிலே ஒரு பங்குதாரர், அதற்கான 'டிவிடெண்ட்' ஈவுத்தொகை எனக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. நான் அந்த

இங்கிலாந்துதான் கிரிக்கெட்டின் பிறப்பிடம்; ஆங்கிலேயரின் குறிப்பிடத்தக்க ஆட்டங்களில் முதலாவதான இதற்கு இந்தப்




பெயர் எப்படி வந்தது தெரியுமா? CRIC என்கிற நார்ட்டிக் சொல்லி லிருந்துதான் CRICKET என்கிற ஆங்கிலச் சொல் பிறந்தது!

வங்கியிலே ஏறத்தாழ ஐம்பதாண்டு காலமாக உறுப்பினராக இருக்கிறேன். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது.

## கூட்டுறவில் எனக்குள்ள தொடர்பு

இந்த மலரிலே கூட, அந்தச் செய்தியை வெளியிட்டிருக்கின்றார்கள். 'கலைஞரும், கமலாம்பிகா கூட்டுறவு நகர வங்கியும்' என்று ஒரு கட்டுரை. அந்தக் கமலாம்பிகா கூட்டுறவு நகர வங்கியின் செயலாளராக இருந்த திரு.கல்யாணசுந்தரம் எழுதி, நீண்ட நாட்களுக்கு முன்பு அது வெளியிடப்பட்டிருக்கின்றது. அதிலே அவர் நிலையை இன்றைக்குத் தமிழகத்திலே உருவாக்கியிருக்கிறார் என்பதை நான் எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

## தங்கபாண்டியன் தொண்டு

அந்த மகிழ்ச்சியோடு என் உள்ளத்திலே ஒரு துன்ப இழை ஓடாமல் இல்லை. இந்தத் துறைக்கு முதலிலே அமைச்சராக இருந்தவர் மறைந்த என்னுடைய தம்பி தங்கபாண்டியன் என்பதை, இந்த நேரத்திலே என்னால் மறக்க இயலவில்லை. அவர் இந்தத் துறையிலே ஆற்றிய பணியின் தொடர்ச்சிதான் தம்பி நேரு அவர்கள் இன்றைக்கு

# மாநிலத் தலைமைச் சங்கங்களுக்கு விரைவில் தேர்தல் நடத்தப்படும்!

சொல்கிறார். அவர் என்னைப் பற்றிப் பாராட்டியெல்லாம் சொல்லி, புகழ்ந்து, என்னுடைய பெயரைக் குறிப்பிடுகிறார். அவைகளையெல்லாம் அவையடக்கம் கருதி விட்டுவிட்டு செய்தியை மாத்திரம் கூறுகிறேன்--


''இன்றைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கும் திருவாரூர் கமலாம்பிகா நகர கூட்டுறவு வங்கிக்கும் சென்ற நாற்பதாண்டுகளாகத் தொடர்புண்டு. கலைஞருக்கு இப்போது வயது 50 ஆகிறது. (என்னுடைய ஐம்பதாவது வயதிலே அவர் எழுதிய கட்டுரை இது) நாற்பதாண்டு காலத் தொடர்பு எப்படியிருக்க முடியுமென்று கேட்கலாம். 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்தானே வங்கியிலே வரவு, செலவு வைத்துக் கொள்ளமுடியுமென்று கேட்கலாம். சுறுசுறுப்பும் ஆர்வமும் உள்ள மாணவர் என்று கண்டுகொண்டு வங்கி, அவருடைய படிப்புக்கு உதவி புரிந்தது. அந்தத் தொடர்பைத்தான் குறிப்பிட்டோம். அவர் ஆறாவது வகுப்பு - அதாவது முதல் படிவம் படிக்கும் போதே இந்தத் தொடர்பு ஏற்பட்டது. அதை நினைத்து வங்கி மகிழ்ச்சியடைகிறது. பிறகு வயது வந்தவுடன், அவர், தந்தையின் பங்குத் தொகையைத் தன் பெயருக்கு மாற்றிக் கொண்டு வங்கியில் 1946 முதல் அங்கத்தினராகச் சேர்ந்து கடன் வரவு செலவுகளும் டெபாசிட் வரவு செலவுகளும் வைத்துக் கொண்டிருந்தார். இன்றுவரை அவர் அங்கத்தினர்தான்'' என்று அன்றைக்கு எழுதியிருக்கிறார். ஆமாம், இன்று வரையிலும், நான் அதிலே அங்கத்தினர்தான். எனவே 216 ரூபாய் ஈவுத்தொகையை இப்போது நான் பெற முடிந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தமிழக அரசின் கூட்டுறவுத் துறைக்கு அமைச்சராக இருப்பவர் தம்பி நேரு. அவர் உணவுத் துறைக்கும் அமைச்சராக இருக்கிறார். இதிலே ஒரு பொருத்தம் இருக்கிறது. உணவிலே கூட்டுறவு இருந்தால் சுவைக்கும், சமையலிலே கூட்டுறவு இல்லாமல் உப்பு ஒரு பக்கம், புளி ஒரு பக்கம், உறைப்பு ஒரு பக்கம் - எல்லாம் ஒற்றுமையாக, கூட்டாக இல்லாவிட்டால் உணவு நன்றாக இருக்காது. சமையல் நன்றாக இருக்காது. எனவே உணவிலே எல்லாம் எந்த விகிதாச்சாரத்தோடு இருக்க வேண்டுமோ அந்த அளவிற்குக் கலந்து அருமையான உணவைத் தாய்மார்கள் வழங்குவார்களே, அதைப் போல உணவுத் துறை அமைச்சராக இருக்கின்ற தம்பி நேரு அவர்கள் கூட்டுறவுத் துறையிலும் ஒரு அருமையான ஆற்றிவருகின்ற இந்தப் பணியின் நேர்த்தி என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்தக் கூட்டுறவு இயக்கத்தின் சார்பாக மறைந்த தங்கபாண்டியன், தமிழக அரசிலே ஆற்றிய தொண்டும், இன்றைக்குத் தம்பி நேரு ஆற்றி வருகின்ற தொண்டும் அனைவராலும் பாராட்டத்தக்க வகையிலே அமைந்திருக்கின்றது.

எனக்கு முன்னால் இங்கே பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். கூட்டுறவு இயக்கத்திற்குத் தேர்தலை நடத்தியவர்களே இந்த ஆட்சியினர்தான் என்றார்கள். இந்த மண்டபத்தில் கூட்டுறவாளர்கள் அனைவரும் அமர்ந்திருக்கிறீர்கள். இதிலே எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் அமர்ந்திருக்கிறீர்கள். அரசியல் சாயம் இல்லாமல், அரசியல் கருத்துக்களை எடுத்துக் கூறாமல் நான் அனைவரையும் வரவேற்கின்ற-பாராட்டுகின்ற-வாழ்த்துகின்ற முறையில், அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப் போல், இந்தக் கூட்டுறவு இயக்கத்திலே அரசியல்வாதிகள் இருக்கலாம்; ஆனால் அரசியலைக் கலக்காமல் இந்தக் கூட்டுறவு இயக்கத்தை நடத்த வேண்டும் என்ற, அந்த அன்பான அழைப்பை இந்த மன்றத்திலே வீற்றிருக்கின்ற உங்கள் அனைவருக்கும் நான் விடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தம்பி நேரு அவர்களைப் போல இந்தத் துறையின்






*உலகம் முழுவதுமாக 3 கோடிப் பேர் உடலில் எய்ட்ஸ் நோய்க்கான எச்.ஐ.வி. வைரஸ் இருக்கின்றது; ஒவ்வொரு நாளும் புதிதாக 16,000 பேருக்கு இந்த வைரஸ் பரவுகிறது.*

*இதனை, ஐக்கிய நாடுகள் சபையின் எய்ட்ஸ் திட்ட அமைப்பு தெரிவிக்கின்றது.*

---

செயலாளராக இருப்பவர், அதிகாரிகளாக இருப்பவர்கள், ராமு போன்றவர்கள், ஏற்கெனவே இந்தத் துறையை நிர்வகித்த சந்தானம் போன்றவர்கள், இன்றைக்கு இருக்கின்ற ஸ்ரீதர் போன்றவர்கள் எல்லாம் மிக அருமையாக, மிக விறுவிறுப்பாக இந்தத் துறையிலே பணியினை ஆற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

இங்கே ரெங்கநாதன் பேசும்போது அதிகாரிகளுக்கு மேலும் சுறுசுறுப்பு வேண்டுமென்றார். இப்போதெல்லாம் இது அவர்களுடைய வேதமாக இருக்கின்றது. இதைச் சொல்லாமல் அவர்களுடைய பேச்சை முடிக்க முடியாது. என்னதான் கருணாநிதியைப் பாராட்டினாலும், கடைசியாக ஒரு வார்த்தை "இன்னும் அதிகாரிகள் வேகமாகச் செயல்பட வேண்டும்" என்பதாகும். அந்த ''இன்னும்'' என்பதைக் கோடிட்டு வைத்துக் கொள்ள வேண்டும்.

**கூட்டுறவுத்துறை அதிகாரிகள்:**

"இன்னும்" வேகமாகச் செயல்பட வேண்டுமென்றால், இப்போதே வேகமாகத்தான் செயல்படுகிறார்கள், இன்னும் வேகமாகச் செயல்பட வேண்டும் என்பதைத்தான் ரெங்கநாதன் அவர்கள் வெள்ளை உள்ளத்தோடு, தூய உள்ளத்தோடு இங்கே குறிப்பிட்டிருப்பார் என்று நான் கருதுகிறேன். எப்படிச் செயல்பட வேண்டும் அதிகாரிகள் என்பதற்கு அடையாளமாகக் கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற இந்த அதிகாரிகள் செயல்பட்டு வருகிறார்கள் என்பதை நான் பெருமகிழ்ச்சியோடு, பெருமிதத்தோடு ரெங்கநாதனுக்கு மட்டுமல்ல, உங்கள் அனைவருக்கும் எடுத்துக்காட்ட வேண்டியவனாக இருக்கின்றேன்.

**தீர்மானங்கள் விவரம்**

இந்தத் துறையின் அமைச்சர் நேரு அவர்கள் நீங்கள் காலை முதல் வடித்தெடுத்த 15 தீர்மானங்களைப் படித்தார். ஒவ்வொரு தீர்மானத்தையும் படிக்கும்போது-ஏதோ தீர்மானம் நிறைவேறிவிட்டதாகவும், நான் அதற்கான வாக்குறுதியை அளித்து விட்டதாகவும் எண்ணிக் கொண்டு, நீங்கள் எல்லாம் கையொலி செய்தீர்கள். அந்தத் தீர்மானங்களை யெல்லாம் பரிசீலித்து அவற்றிலே சிலவற்றை நிறைவேற்றுகிறேன் என்ற அந்த முடிவைத்தான் உங்கள் முன்னிலையிலே இப்போது நான் அறிவிக்கின்றேன்.

* ஊழியர்கள் பாதுகாப்புத் திட்ட உதவித் தொகை ஒரு லட்சம் ரூபாயாக உயர்வு!

* மாநிலத் தலைமைச் சங்கங்களுக்கு விரைவில் தேர்தல் நடத்தப்படும்!

முதலில், மாநிலத்தில் செய்யப்பட்டுவரும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த நோக்கங்களுக்கு மட்டுமல்லாமல், சமுதாயத்தில் அனைத்துத் தரப்பினருக்கும் சேவை புரியும் நோக்குடன் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இணையாகத் தொழில் முனைவோர், மருத்துவர், பொறியாளர் போன்றவர்களுக்குக் கடன் வழங்குவதோடு, உத்தரவாதம் அளித்தல், அதிகப் பற்று அளித்தல், வரைவோலை வழங்குதல் போன்ற அனைத்து வங்கியியல் பணிகளையும் நவீனமயமாக்கப்பட்ட முறையில் மேற்கொள்ள நடவடிக்கைகள் முடுக்கி விடப்படும் என்பதை இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பணி புரியும் பணியாளர்கள் இறந்து விட்டாலோ, ஓய்வு பெற்றாலோ, அல்லது அவர்களாகப் பதவி விலகினாலோ ஏற்படும் காலிப் பணி இடங்களைத் தகுதி வாய்ந்த பணியாளர்களைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களே வேலை வாய்ப்பகத்திலிருந்து பதவி உயர்வு மூலமாக நிரப்பிக் கொள்ளலாம் என்ற அந்தக் கோரிக்கையையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.

இதே போன்று, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், நகர வங்கிகள், வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் ஆகியவற்றில் ஒரு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகங்களே நேரடிப் பணி நியமனம் மூலம் காலி இடங்களை நிரப்பிக் கொள்ளலாம் என்பதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.

இந்த அரசு பதவியேற்றவுடன் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்களை நடத்தியுள்ளது. இதன் தொடர்ச்சியாக மத்திய மற்றும் மாநிலத் தலைமைக் கூட்டுறவு சங்கங்களுக்கும் விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்காவிட்டாலும், அது நிச்சயமாக நடைபெற்றே தீரும் என்பதை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

**ஆக்க பூர்வ ஏற்பாடுகள்:**

அத்தியாவசியப் பொருளான மண்ணெண்ணெய் கலப்படம் ஆகாமல், அளவு குறையாமல், நவீன முறையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுவரும் மண்ணெண்ணெய் விநியோகத்தைச் சீரமைக்கும் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு 120 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் கூட்டுறவுத் துறை மூலம் திறக்க உத்தேசிக்கப்பட்டு, ஏற்கெனவே 12 நிலையங்கள் செயல்படத் தொடங்கியுள்ளன. அடுத்த ஆண்டு முடிவுக்குள் மொத்தமாக 500 நிலையங்கள் அமைக்க பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.


தெரிவு செய்யப்பட்ட தொடக்கக் கூட்டுறவுகளில் கட்டடம் கட்டும் பணியை மேற்கொள்ளத் தேர்ந்தெடுக்கப் பட்ட நிர்வாகத்திற்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட உள்ளது

என்பதையும், அதற்கான அரசாணை விரைவிலே வெளி வரும் என்பதையும், அதற்கான கோப்பு தம்பி துரைமுருகனுடைய பொதுப்பணித் துறையிலே இருக்கிறது என்பதையும் இங்கே நான் தெரிவித்து, இதுவும் ஏற்கப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நேரு மாத்திரமல்ல, வீராசாமியும் குறிப்பிட்டார் என்று கருதுகிறேன். இந்தத் துறையிலே பணியாற்றும் அலுவலர்கள் இறந்துவிட்டால், அவர்களுக்குத் தரப் படுகின்ற அறுபதாயிரம் ரூபாய் குடும்பப் பாதுகாப்புத் திட்ட உதவியை ஒரு இலட்சமாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதுவும் உரிய முறைப்படி கவனிக்கப்பட்டு - ஒரு இலட்சமாக ஆக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக ஒரு முக்கியமான அறிவிப்பு. வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி, மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு வழங்கிவரும் குறுகிய காலக் கடன்களுக்கு வட்டி விகிதத்தை 5 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக அதனையொட்டி குறைத்துள்ளது. விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெறத் தக்க வகையில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு வழங்கும் குறுகிய காலப் பயிர்க் கடன்களுக்கான வட்டி விகிதத்தில் ஒரு விழுக்காடு குறைக்கப்படுகிறது. அதாவது தற்போது வசூலிக்கப்பட்டு வரும் 13 விழுக்காடு வட்டி விகிதத்திற்குப் பதிலாக 12 விழுக்காடு வட்டி விகிதத்தில் பயிர்க் கடன்கள் வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ❑

## தெரிந்து கொள்வோம்!



### தமிழ்நாட்டிலுள்ள உள்ளாட்சி அமைப்புகள் - மக்கள் பிரதிநிதிகள்

| | | |
|---|---|---|
| மாநகராட்சி மேயர்கள் | - | 6 |
| மாநகராட்சி உறுப்பினர்கள் | - | 474 |
| நகராட்சித் தலைவர்கள் | - | 104 |
| மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | - | 28 |
| மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் | - | 649 |
| ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் | - | 384 |
| ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் | - | 6,496 |
| பேரூராட்சித் தலைவர்கள் | - | 635 |
| பேரூராட்சி உறுப்பினர்கள் | - | 10,173 |
| கிராம ஊராட்சித் தலைவர்கள் | - | 12,584 |
| கிராம ஊராட்சி உறுப்பினர்கள் | - | 95,657 |



# தியாகச் சிறகுகள்!

கவிஞர் இரவி பாரதி

கண்ணை 'இமை'
காப்பதுபோல் காத்து,
என்னை மேடையில்
ஏற்றுவித்த
அன்னைத் தமிழே
உன்னை வணங்குகிறேன்!

கற்கண்டு சொற்கொண்டு
கன்னித்தமிழ் வளர்ப்பதில்
முதல்வராய்த் திகழுகின்ற
முதல்வருக்கு முதல்
வணக்கம்!

இக்கவியரங்க நிகழ்விற்கு
இனிதாகத் தலைமை
ஏற்கின்ற
இந்தியத் தமிழ்க்
குடிமகனுக்கும்
வணக்கத்திற்குரிய
மேயருக்கும்
வருகைதந்துள்ள
ஆன்றோர்க்கும்,
சான்றோர்க்கும்...



அவையோர் அனைவருக்கும்
அன்பான வணக்கங்கள்...

சிறகு விரிக்கின்ற
சிந்தனைக் கவியரங்கில்-என்
கவிதைச் சிறகின்
கதையைச் சொல்வேன்...

வெண்மை படர்ந்து...ஒளி வீசும்
வெள்ளிச் சிறகு...என் சிறகு
நன்மை பல கொண்டு
நாட்டிற்கே சுதந்திரம் பெற்றுத் தந்த
திண்மையுடன் திகழும்
"தீரச் சிறகு..."
வெற்றி பல குவித்திட்ட
"வீரச் சிறகு..."
தேசமெனும்
தேகத்தில் பூத்த
"தியாகச் சிறகு..."

இந்திய தேசத்தின்
இனிய விடுதலைக்காக

சிந்திய செங்குருதி
சித்திரித்த தோற்றமே...

மூவண்ணக் கொடியின்
முதல்வண்ணம் என்பேன்...
அந்தத்
தீயின் சிகப்பு
தியாகச் செழிப்பு...

பாரத நாட்டின்
பைந்தமிழ்க் கவிஞன்
'பாரதி' மொழியில்
பகர்வது என்றால்
அது... ஓர்
'அக்கினிக் குஞ்சு'...!

குத்தீட்டி ஒருபுறம்
குத்திக் கிழித்தாலும்
குருதி வெள்ளத்தில்
குடல்வந்து விழுந்தாலும்

பள்ளத்தை நோக்கிப்
பாதகர்கள் தள்ளினாலும்
உள்ளத்து உறுதியை
ஒருபோதும் இழக்காமல்

கொண்ட கொள்கையில்
கோபுரமாய் நிற்பதுதான்...இந்தத்
தேசம் கண்ட
தியாகத்தின் இலக்கணம்!

தெருவிலே மிதித்து
தேகமெலாம் உதைத்து
தடியாலே அடித்து
தரதரவென இழுத்து

கொடியை விடுகிறாயா...இல்லை
உயிரை விடுகிறாயா...எனக்
கோபம் கொப்பளிக்க
கொடியவர்கள் கொக்கரித்தபோது...

உயிரை விடுவேனே ஒழிய
உயர்த்திப் பிடித்த
கொடியை விடமாட்டேனென்று
குருதி வெள்ளத்திலும்
உறுதி குலையாமல்
கொள்கை முழக்கமிட்டானே
நெருப்பிலே பூத்த
"திருப்பூர்க்குமரன்"
அந்தத்
தேசியப் பறவையின்
திருமேனி கொண்டிருந்த
"தியாகச் சிறகுகளை" - அத்
திசைநோக்கி வணங்குகிறேன்!...

துண்டு துண்டாய்
வெட்டுங்கள் பரவாயில்லை...
தூக்கிலே போடுங்கள் கவலையில்லை...
கறுப்புத் துணியால் மூடி - என்னை
களங்கப்படுத்த வேண்டாம்...
என்னை ஈன்றெடுத்த
அன்னையாம்...
பாரத மண்ணைப்
பார்த்துக் கொண்டேதான்
என்
இறப்பு இங்கே
ஏற்பட வேண்டும்...



அதுவே எனக்குச்
சிறப்பு என்று
சீறி... எழுந்தானே
'பகத்சிங்' என்னும்
பட்டாளச் சிங்கம்...

அந்தச்...
சிங்கத்தோடு
சேர்ந்து நின்று
பொங்கிப் பாய்ந்த
புலியாம் "சுகதேவ்"

இளைய வயதில்
இந்திய அன்னைக்கு
இன்னுயிர் ஈந்த

இரும்பு இதயங்களை
எண்ணிப் பார்க்கிறேன்
கண்ணீர் முத்தால்
கவிதை சேர்க்கிறேன்!...

வெள்ளைக்காரன்
வெடிகுண்டுகளை

வீசிக்கொண்டிருந்த நேரத்தில்
அண்ணல் காந்தியடிகளோ...
அகிம்சையின் ஆற்றலைப்பற்றிப்
பேசிக்கொண்டிருந்தார்...

இரும்புக் கோட்டைகளை...அன்பு
இதயத்தால் வீழ்த்தமுடியும் என்பதை

உலகுக்கே
உணர்த்திக் காட்டினார்...
நாட்டு விடுதலையைக்
கேட்டதற்காக
கொள்ளையடிக்க வந்த
வெள்ளை அரசாங்கம்

அகிம்சை நாயகன்
அண்ணல் காந்தியைக்
கோர்ட்டுக்கு வரவழைத்து
கூண்டிலே ஏற்றியது...
காந்தியைக் கூண்டிலே
கண்ட நீதிபதியோ
தன்னையும் அறியாமல்
தானாய் எழுந்து
அண்ணலை நோக்கி
அன்புடன் வணங்கினார்...

கூண்டிலே நின்ற - ஒரு
குற்றவாளியைப் பார்த்து
நீதிபதி எழுந்து
நின்றதொரு காட்சி...
உலக வரலாற்றில்
உன்னதக் காட்சி
பூமியின் வரலாற்றில்
புதுமைக் காட்சி...!

இதிலே இன்னொரு
அதிசயம் என்னவெனில்
அதிகபட்ச தண்டனையை
அண்ணல் 'காந்தி' கேட்டது!...

அதைவிட அதிசயம்
அற்புதம் என்னவெனில்
தண்டனை வழங்கிய
தர்மதுரை நீதிபதியோ
"இந்த அரசாங்கம்
இந்தத் தண்டனையை
இரத்து செய்தாலோ...
அல்லது.... குறைத்தாலோ...
மகிழ்ச்சி யடைகிற...முதல்
மனிதன் நான்தானென்று"
தீர்ப்பினை அஞ்சாமல்
தெளிவாக எழுதியது...

இன்னல்கள் நிறைந்த
அண்ணலின் வரலாற்றில்

இன்னொரு காட்சியை
இப்போது பார்ப்போம்...

சிறைச்சாலைக் கொடுமைகளை
சிரித்தபடி ஏற்று
அண்ணல் காந்தி
அமைதியாய் இருந்தார்...

சிறையின் அதிகாரி
"ஸ்நட்ஸ்" என்பவன்
எத்தனைக் கொடுமைகள்
இழைத்திட முடியுமோ
அத்தனை கொடுமைகளையும்
அடுக்கடுக்காய்க் கொடுத்தான்...

பொன்முகம் காட்டிடும்
புன்னகை காந்தியோ
இன்முகத் தோடு
ஏற்றார் அனைத்தையும்...

விடுதலை ஆகி
வெளியே வருகையில்
அதிகாரி "ஸ்நட்சுக்கு"
அண்ணல் காந்திஜி
பாசத்தோடு...இனிய
பரிசொன்று வழங்கினார்...

பரிசினைப் பிரித்துப்
பார்த்த 'ஸ்நட்சின்'
கண்களில் இருந்து
கங்கை புரண்டது...

சித்ரவதை நிறைந்த
சிறைச்சாலைக் குள்ளே
....காந்திஜி...தன்
கைப்படச் செய்திட்ட
"காலணி" அதுவே!...

இரும்பாய் இருந்த
"ஸ்நட்சின்" இதயம்
இலவம் பஞ்சாய்
இளகிப் போனது...

அன்பின் உருவம்
பண்பின் வடிவம்
காந்திஜி வழங்கிய
காலணி தன்னை
அணிவதற்குச் சிறிதும்-நான்
அருகதை அற்றவன்...
எனவே... அதனை... எனது
பூஜை அறையில் வைத்து
பூஜிக்கிறேன் என்று
அதிகாரி ஸ்நட்ஸ்
தனது...
நாட்குறிப்பேட்டில்
நயம்பட எழுதினான்...

கருணா மூர்த்தி
காந்திஜி வாழ்க்கையில்



இதுபோல் சம்பவம்
எத்தனை எத்தனை...

அன்றைய சம்பவம்
இன்றைய சரித்திரம்!
அதனால்தானே அகன்றது
அடிமைத் தரித்திரம்!

வக்கீலுக்குப் படித்த கையோடு
வழக்காடியிருந்தால்
வ.உ.சி.
வசதியாய் வாழ்ந்திருப்பார்!

இலட்சங்களை எண்ணாமல்-சுதந்திர
இலட்சியங்களை எண்ணியதால்
வறுமையால் உதைபட்டார்
வெஞ்சிறையில் வதைபட்டார்!
செக்கிழுத்தார்! கல்லுடைத்தார்!!
சித்திரவதை பல...பட்டார்!
இந்தியர்கள்...
காரோட்டுதற்குக் கூட
கற்றுக்கொள்ளாத நாளில்



கப்பலோட்டினார் - சுதேசிக்
கப்பலோட்டினார்...

சுதேசிக் கப்பலை
சுயமாய் ஓட்டி
விதேசிகள் நெஞ்சில்
வேலைப் பாய்ச்சினார்!

வ.உ.சி.யும் பாரதியும்
உ.வே.சு. ஐயரும் சேர்ந்து
மூட்டிய தீக்கனல்
மூண்டு எழுந்தது...

ஊட்டிய வீரமும்
உண்மைத் தீரமும்
ஒன்று சேர்ந்ததால்
ஒளியும் பிறந்தது...

பெற்ற அன்னைக்கு
பிரியத்தை மட்டும் கொடுத்துவிட்டு
இந்திய அன்னைக்கு
இதயத்தையே கொடுத்திட்ட
பெருந்தலைவர் "காமராஜ்"
முதல்வராய் இருந்தபோது

அன்னை சிவகாமி
அன்பு மகனுக்கு
ஆசையாய் ஒரு கடிதம் எழுதினார்...
கோடைவெயில்
கொளுத்துகிற போது - இந்தத்
தள்ளாத மேனி
தாங்கவில்லை...மகனே...
எனவே
எனக்கொரு 'மின்விசிறி'
வாங்கி அனுப்புவாயா - என
வாஞ்சையுடன் கேட்டிருந்தார்...

கடிதத்தைப் படித்த காமராஜரோ
என்ன பதில் எழுதினார் தெரியுமா?
'பனை ஓலை விசிறி'
உடம்புக்கு நல்லதெனப்
பதில் எழுதினார்...

காமராஜர்
முதல்வராய் இருந்த போது
அன்னை சிவகாமிக்கு
அன்புடன் அனுப்பியது
மாதம் ஒன்றுக்கு
நூற்றி இருபத்தைந்து ரூபாய் - அதை
ஏற்றி
நூற்றி ஐம்பதாய்



அனுப்பக் கேட்டது
அன்னை சிவகாமியின்

அடுத்த கடிதம...

காமராஜர்
இதற்கு என்ன பதில்
எழுதினார் தெரியுமா?
ஏங்கி நிற்கின்ற
ஏழைக் குழந்தைகட்கு - நான்
வாங்குகிற சம்பளத்தை...அப்படியே
வழங்குவதுதான் உனக்குத் தெரியுமே...

பாலமந்திர்
பள்ளிக்கு அனுப்பும் பணத்தில்
பங்கு கேட்காதே 'அம்மா' என்று
பதில் எழுதினார்...

பெற்ற அன்னையைக் காட்டிலும்
பெற்றெடுத்த தாய் நாட்டைத்தான்
பெருந்தலைவர்
பெரிதாய் நேசித்தார்...

பெருந்தலைவர் மறைந்தபோது
பெருக்கெடுத்த கண்ணீர்
வெள்ளத்திற்கிடையே
வீட்டிலே என்ன இருக்கிறதென்று
வேட்கையுடன் தேடிப் பார்த்தார்கள்...
நூற்றி எழுபத்தெட்டு ரூபாய் ரொக்கம்...
சில வேட்டி சட்டைகள்...
அலமாரி நிறையப் புத்தகங்கள்
அணிந்திருந்த ஒரு ஜோடி செருப்பு-

இவைதான் அங்கே
அவரது
சொத்துக்களாய்
சொந்தம் கொண்டாடிக்
கொண்டிருந்தன...

சுதந்திரக் காற்றை
சுவாசிப்பதற்காக
பத்தாண்டு காலம் சிறைவாசம் இருந்த
பத்தரை மாற்றுத் தங்கம்
'காமராஜரை' - அந்தக் கர்மவீரரை...
எண்ணிப் பார்க்கிறேன்...
எத்தனை எளிமை
எத்தனை நேர்மை
எல்லாவற்றையும்-நான்
எண்ணிப் பார்க்கிறேன்...

சுதந்திரப் பொன்விழா நாளில்...
தேசத்திற்குத் தொண்டு செய்த
தியாகிகளை எண்ணிப் பார்க்க
வாய்ப்பளித்த மேயருக்கு -
வணக்கம் கூறி விடைபெறுவேன்...

நன்றி!

*- சுதந்திரத் திருநாள் பொன்விழா நாளையொட்டி சென்னை மாநகராட்சி 23-8-1997 அன்று நடத்திய "சிறகுகள் விரிப்போம்" கவியரங்கக் கவிதை.*

# ஊராட்சி ஒன்றியங்களில், வளர்ச்சிப் பணிகளை விரைவுபடுத்திடும் வகையில்,

# மூன்றாவது காலாண்டுத் தொகையாக ரூ.34.81 கோடி ஒதுக்கீடுசெய்து,

# முதலமைச்சர் கலைஞர் ஆணை !

மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளை ஏற்று, ஊராட்சி ஒன்றியங்களுக்கு 1997-98ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத் தொகையிலிருந்து ரூ.139.27 கோடியினை அரசு ஒதுக்கியுள்ளது. இந்த நிதி காலாண்டு அடிப்படையில் வழங்கப்படுகிறது. இதுவரை முதல் மற்றும் இரண்டாவது காலாண்டுக்கு ரூ.69.62 கோடி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.



தற்பொழுது, மூன்றாவது காலாண்டுக்கு (அக்டோபர் 97 முதல் டிசம்பர் 97 வரை) ரூ.34.81 கோடி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படுகிறது.

மாவட்ட வாரியான ஒதுக்கீட்டு விவரம் கீழ்க்கண்டவாறு:

| மாவட்டம் | ஊராட்சி ஒன்றியங்கள் | மூன்றாவது காலாண்டுக்கு வழங்கப்பட்ட தொகை (ரூ.) | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியங்கள் | மூன்றாவது காலாண்டுக்கு வழங்கப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| திருவள்ளூர் மாவட்டம் | 14 | 1,47,57,1,94 | திண்டுக்கல் மாவட்டம் | 14 | 1,20,41,302 |
| வேலூர் மாவட்டம் | 20 | 2,15,99,185 | இராமநாதபுரம் மாவட்டம் | 11 | 89,18,892 |
| திருவண்ணாமலை மாவட்டம் | 18 | 1,86,89,879 | சிவகங்கை மாவட்டம் | 12 | 77,61,159 |
| விழுப்புரம் மாவட்டம் | 22 | 2,75,17,143 | விருதுநகர் மாவட்டம் | 11 | 1,03,50,149 |
| கடலூர் மாவட்டம் | 13 | 1,70,97,453 | திருநெல்வேலி மாவட்டம் | 19 | 1,34,29,726 |
| தருமபுரி மாவட்டம் | 18 | 1,97,21,711 | தூத்துக்குடி மாவட்டம் | 12 | 95,41,769 |
| சேலம் மாவட்டம் | 19 | 1,44,64,593 | கன்னியாகுமரி மாவட்டம் | 9 | 32,43,130 |
| ஈரோடு மாவட்டம் | 20 | 1,26,46,411 | காஞ்சிபுரம் மாவட்டம் | 13 | 1,71,47,517 |
| கோயம்புத்தூர் மாவட்டம் | 19 | 1,37,61,427 | நாமக்கல் மாவட்டம் | 15 | 96,06,712 |
| நீலகிரி மாவட்டம் | 4 | 19,00,116 | திருவாரூர் மாவட்டம் | 10 | 1,07,14,852 |
| தஞ்சாவூர் மாவட்டம் | 14 | 1,42,61,694 | கரூர் மாவட்டம் | 8 | 60,27,791 |
| நாகப்பட்டினம் மாவட்டம் | 11 | 1,28,20,278 | பெரம்பலூர் மாவட்டம் | 10 | 1,04,11,676 |
| திருச்சிராப்பள்ளி மாவட்டம் | 14 | 1,24,038,63 | தேனி மாவட்டம் | 8 | 50,60,230 |
| புதுக்கோட்டை மாவட்டம் | 13 | 1,09,36,819 | | | |
| மதுரை மாவட்டம் | 13 | 1,13,39,379 | | | |

**மொத்த ஊராட்சி ஒன்றியங்கள் 384. மூன்றாவது காலாண்டுக்கு வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.34,81,75,050 ஆகும்.**




**நகராட்சி என்பதை ஆங்கிலத்தில் 'முனிசிபாலிடி' என்கிறோம்; இந்த ஆங்கிலச் சொல் 'முனிசிபியம்' என்னும் இலத்தின் சொல்லிலிருந்து வந்தது. இச்சொல் ரோமாபுரிக்கும் அதற்கு உட்பட்ட சிற்றூர்களுக்கும் இடையே இருந்த ஆட்சியைக் குறிப்பதாக இருந்தது!**

'பூம்புகார்' விற்பனைக்கூடம்; அல்ல - ஒரு அரிய கலைக்கூடமே!





# நெஞ்சையள்ளும் தஞ்சாவூர் கலைத்தட்டு

கலைப் படைப்பாளியானவன் உலகியல் பொருட்களைப் பாராட்டும் வகையில் பல்வேறு கலைப்படைப்புகளை உருவாக்குவதன் மூலம் தனது உவகையினை வெளிப்படுத்தி வருகிறான். அவனது இச்செயலால், அக் கைவினைஞனின், உள்ளார்ந்த கலைவேட்கை வெளிப்படுத்தப் படுகிறது என்பதோடல்லாமல், அவனது கலை விருப்பமும் பூர்த்தி செய்யப்படுகிறது; இறுதியில் மனித வர்க்கத்தினையும் உவகைக்கு உள்ளாக்குகிறது.

தொழிலாளர் உழைப்பு முனைப்பின் தன்மையால், கைவினைப் பொருட்கள் இப்பரந்த நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் முக்கியப் பங்காற்றுவதுடன் சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு இலாபகரமானதொரு வேலைவாய்ப்பினை வழங்கிவருகிறது.

தேர்ந்த கைவினைஞர்களால் நேர்த்தியுடன் உருவாக்கப்பட்ட அற்புதமான கோயில்கள், விநோதமான கற்சிற்பங்கள் பண்டைய நாகரிகத்திற்கு எடுத்துக்காட்டாக உருவாக்கப்பட்ட உலோகச் சிற்ப வடிவங்கள், மரச்சிற்பங்கள் மற்றும் மனதைக் கவரும் சுவர்ச் சித்திரங்கள் ஆகியவை நமது பண்டைய சமூக வாழ்க்கையினைப் பிரதிபலிப்பதோடு, வாழ்க்கைப் பாரம்பரியத்திற்குப் புதிய பரிமாணத்தினைத் தோற்றுவித்துள்ளன. இந்தியத் துணைக்கண்டத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள தமிழகம் திராவிடர் கலை மற்றும் பாரம்பரியத்திற்குப் பலநூறு ஆண்டுகளாக ஒரு முன்னோடியாக விளங்கிவருகிறது. ஒருவகையில், கைவினைப் பொருட்கள் நம் தமிழ் மண்ணின் செழிப்பான கலாச்சாரப் பண்பாட்டினை நிலைநிறுத்துவதில் மிக முக்கியப் பங்கினை ஆற்றி வருகின்றன என்றே கருதலாம்.


### முன்னோர் வழிவந்த கலை

கைவினைஞர்கள், நமது பண்பாட்டிற்கும் பாரம்பரியத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் கலைப்படைப்புகளை உருவாக்கும் திறனைத் தங்களது முன்னோர்களிடமிருந்து வழி வழியாகவே கற்றுவந்துள்ளனர். அக்காலத்தில், தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டிய மற்றும் பல்லவ மன்னர்கள் இக்கைவினைஞர்களை ஆதரித்துவந்தார்கள். அக்கால மன்னர்களின் தகைமைசால் ஆதரவினால், கைவினைஞர்கள், உகந்த வாழ்வு வாழ்ந்திட உரிய உதவிகளை நல்கியுள்ளனர். அத்தகு கைவினைஞர்கள், தங்களது முன்னோர்களிடமிருந்து வழிவழியாகப் பயின்ற கலை அழியாமல் பாதுகாத்துவந்துள்ளனர்.

பண்டைய சோழ மன்னர்களின் தலைநகராக விளங்கிய தஞ்சாவூர், பல்வேறு கலைப்படைப்புகளை உருவாக்குவதில் இன்றளவும் பெரும்பங்கு வகிக்கிறது. உலோகத் தகட்டில் பல்வேறு உருவங்களில் பிரத்தியேகமான கலைப்படைப்புக்ளை உருவாக்குவதில் தஞ்சைப்பகுதி தலைசிறந்து விளங்குகிறது. இங்கு உருவாக்கப்படும் இத்தகைய கலைப்படைப்புகள், கலை விற்பன்னர்களின் பாராட்டுதல்களையும்,உலக அளவில் நன்மதிப்பையும் பெற்று விளங்கிவருகின்றன.

தஞ்சாவூரில் உருவாக்கப்படும் இந்தக் கலைத்தட்டுகள், தஞ்சைப் பகுதிக் கைவினைஞர்களின் படைப்புகளுள் ஒரு நேர்த்தியான எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. இக் கலைத் தட்டுகள், நவ நாகரீக இல்லங்களின் வரவேற்பறைகளில் இடம் பெறும் அலங்காரப் பொருட்களுள் ஒரு முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன. செம்பு மற்றும் வெள்ளி போன்ற உலோகங்களில் பல்வேறு உருவகங்களை வெவ்வேறு அளவுகளிலும், வடிவங்களிலும் செதுக்கி, அவற்றினைப் பித்தளைத் தகட்டில் பொருத்தும் கலைநுணுக்கம் புதுமையானதும், தஞ்சாவூருக்கே உரித்தானதுமாகும்.

இன்றைக்கும் இக் கலையினைப் பொற்கொல்லர் இனத்தைச் சார்ந்த ஒருசில குடும்பத்தினர் மட்டுமே தந்தையிடமிருந்து மகனுக்கு என்று வம்சாவழியாக இத் திறமையைப் பயிற்றுவித்து வருகின்றனர். கைவினைஞர்கள் ஒரு சுத்தி மற்றும் உளியின் உதவியுடன் கலைத்தட்டுகளை நிதானமாக உருவாக்குவதைப் பார்ப்பதே ஒரு கலை அனுபவமாகும். இக் கைவினைஞர்கள் நேர்த்தியான வேலைத் திறனுக்குப் பெயர் பெற்றவர்கள். கலை அவர்களது வாழ்க்கையின் தவிர்க்க இயலா ஒரு அங்கமாகவே விளங்குகிறது.




இந்தியாவிற்குக் கோதுமை வருவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நெல் வந்து விட்டது. தென்மேற்கு ஆசியாவில்தான் - அதிலும் குறிப்பாக தென்னிந்தியாவில்தான் முதன்முதலில் நெல் சாகுபடி செய்யப்பட்டது!

தஞ்சைத் தரணியை ஆண்ட மராத்திய மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் இக்கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்ட பேராதரவே இக் கலை பெரிதும் செழிப்புறக் காரணமாயிற்று. கடந்த நூற்றாண்டில், அரசியல் மற்றும் சமூக அடிப்படையில் ஏற்பட்ட பெரும் மாற்றங்களினால் இக்கைவினைஞர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாயினர். பெரும்பாலான அரச பரம்பரையின் ஆதரவு குறுகிவிட்ட நிலையில், இக்கைவினைஞர்கள் தங்களது வாழ்க்கைச் சக்கரத்தை ஒட்டியாக வேண்டிய நிலையில் தங்கம், வெள்ளி மற்றும் ஆபரணங்களை உருவாக்கும் பணிக்கு மாறினர். இதனால் இக் கலை சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது.

**தஞ்சாவூர் கலைத்தட்டுகள் கலையின் தோற்றம்**

எகிப்திய அரசன் ஒருவன், சரபோஜி அரசருக்கு ஒரு செப்புக்கலசத்தினை அன்பளிப்பாக வழங்கியதாகவும், அதன் பின்னர் தஞ்சை அரண்மனையைச் சார்ந்த சிற்பிகள் அதனை மூலமாகக் கொண்டு தமது கலை வழியில் உருவாக்கத் தொடங்கியதாகவும் அனுபவம் வாய்ந்த அவ்வழித் திறனாளர்கள் நம்புகிறார்கள்.

இதன் துவக்கம் 250 ஆண்டுகளுக்கு முந்திய காலத்தில் தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர்கள் காலத்தில் ஏற்பட்டதாம்! மொரதாபாத் பகுதியிலிருந்து தஞ்சாவூர் வந்த மூவகை உலோகப்பொருள் உற்பத்தியிலும் திறமை பெற்ற சில கைவினைஞர்கள், உள்ளூர்வாசிகளுக்கு 3 உலோகக் கலவையின் ரகசியத்தினைப் பயிற்றுவித்ததாகவும் கூறப்படுகிறது.


மற்றொரு தகவலின்படி சரபோஜி மன்னர் பிரயாகை, காசி, கங்கா போன்ற புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை சென்றபோது பித்ரி தட்டுகளின் மாதிரிகளைக் கொண்டுவந்து உள்ளூர் கம்மாளர் வகுப்பினைச் சார்ந்த கைவினைஞர்களிடம் அதனைப்போன்று உருவாக்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க, அரச குடும்பத்தின் எதிர்பார்ப்புக்கேற்ப அதேபோன்ற தட்டுகள் உருவாக்கியதாகவும் இதுவே தஞ்சாவூர் கலைத்தட்டின் தோற்றமாக இருக்கலாம் எனவும் தெரியவருகிறது. தஞ்சை மாவட்டத்தில் கலைகளை வளர்ப்பதில் சரபோஜி மன்னரும் அவருக்குப் பின்னால் வந்த மராத்திய மன்னர்களும் பெரும்பங்காற்றி வந்துள்ளனர். உள்ளூர் விஸ்வகர்மா வகுப்பினர்களுக்கு அவர்கள் அளித்துவந்த நல்ல ஆதரவே இம்மாதிரியான கலைப்பொருட்கள் உருவாகுவதற்கும் கலைத்திறன் முன்னேற்றமடைவதற்கும் வழிவகுத்தன. இந்த ஆதரவின் அடிப்படையிலேயே தஞ்சாவூர் கலைத்தட்டுகள் உருவாகக் காரணமாக இருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.


அடிப்படையில் பித்ரி கலைத்தட்டுகளிலிருந்து உள்ளூர்க் கைவினைஞர்களால் கலை மேம்பாட்டுடன் உருவாக்கப்பட்டதே தஞ்சாவூர் கலைத்தட்டுகள் ஆகும். பித்ரி கலைத்தட்டுகள், ஆதாரமான பித்தளைத் தகட்டினில், அதன் மேற்பரப்பினில் குடைந்து அலங்கார வேலைப்பாடுகளுடன் பதிப்பு வேலையுடன் கூடியதாக இருக்கும். ஆனால் தஞ்சாவூர் கலைத்தட்டுகளிலோ ஆதாரத் தகட்டில் அச்சின் மூலம் தயார் செய்யப்பட்ட அலங்கார வேலைப்பாடுகள் அல்லது கடவுள் திருவுருவங்கள் பொருத்தப்படுவதாகும். இந்தச் செயல்முறை முப்பரிமான உருவங்களை ஒருங்கிணைத்து, விரிவான வேலைப்பாடுகள் செய்வதற்கு வழிவகை செய்துள்ளது.

அந்தக் காலங்களில் இக் கலைத்தட்டுகளில் பூவேலைப்பாடுகள் மட்டுமே உருவாக்கப்பட்டன. பின்னர் பூவேலைப்பாடுகளுக்கு மத்தியில் புராதனகாலச் சித்திரங்கள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு வெளியிலிருந்து தருவிக்கப்பட்ட கலையை மையமாகக்கொண்டு; உள்ளூர் கலைஞர்களின் முயற்சியின் பயனாக இக் கலைத்தட்டுகள் நேர்த்தியாகப் பொருத்தி அமைக்கப்பட்ட நல்ல கலைத்திறன் மதிப்புடன் கூடிய அக் கலைப் பொருட்களாக இவைகள் உருவாக்கப்பட்டன.

**தயாரிப்பும் சந்தைவாய்ப்பும்**

தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர் காலத்தில், கலைத்தட்டுகள் உருவாக்கும் பணி தஞ்சாவூரில் வாழ்ந்துவந்த நான்கே நான்கு குடும்பங்களிலேயே பயிற்றுவிக்கப்பட்டு வந்தது. பின்னர், கம்மாள வகுப்பினைச் சார்ந்த பெரும்பாலானவர்கள் இக்கலையினைப் போற்றிக்காக்க முன்வந்துள்ளனர். முன்பெல்லாம், இந்தக் கலை, இந்த வகுப்பினைச் சார்ந்த ஒருசில குடும்பங்களுக்காகவே பயிற்றுவிக்கப்பட்டு வந்தது. ஒருபோதும் தஞ்சாவூர் எல்லையினைத் தாண்டிச் சென்றதில்லை!.





பெரும்பாலான கைவினைஞர்கள் தஞ்சாவூரில் உள்ள தெற்குப் பிரதான சாலை, அதன் கிளைச் சாலைகளான நாணயக்காரர் சாலை, எல்லையம்மன் கோயில் சாலை, ஜவுளிச் சாலை போன்ற பகுதிகளிலேயே குடிபுகுந்து உற்பத்தியினைச் செய்துவருகின்றனர். சில நூற்றாண்டுகளாகவே இந்தக் கலை இந்தச் சமூகத்தினைச் சார்ந்த உறுப்பினர்களின் தனியுடைமை போலவே கருதப்பட்டு வந்தது. இந்தக் கலையினைப் பற்றிய ஆற்றல், நுணுக்கம் போன்ற செய்திகளை மற்ற சமூகத்தினருக்குப் பயிற்றுவிக்காமல் இருப்பதை ஒரு கொள்கையாகவே இவர்கள் கொண்டுள்ளனர்.

அக்காலத்தில் மற்ற சமூகத்தினர் இக்கலையினைப் பயிலும் வாய்ப்பு மறுக்கப்பட்டு வந்தது. ஆனால் நிலைமை படிப்படியாக மாறி இந்தக் கைவினைஞர்கள், தங்களது ஆற்றலைப் பெருவாரியானவர்களின் நன்மைக்காகப் பல்வேறு சமூகத்தினருடனும் பகிர்ந்துகொள்ளத்தக்க இணக்கத்தினை ஏற்படுத்தியது.

கலைத்தட்டுகளுக்கான சந்தைவாய்ப்பும் கூட, குறிப்பிட்ட கலை ஆர்வமிக்கவர்களிடம் மட்டுமே இருந்துவந்தது. இதனை உருவாக்கும் கைவினைஞர்கள் பொருளாதார ஸ்திரமற்ற நிலையிலேயே இருந்தனர். இதனாலேயே இடைத்தரக வர்க்கத்தினர் இவ்வகைத் தட்டுகளைக் கொள்முதல் செய்து சென்னை, மும்பை போன்ற இடங்களில் விற்பனை செய்து பெருத்த இலாபம் ஈட்டிவந்தனர். இடையில் இக்கலை நலிவுற்ற நிலையிலிருந்தாலும், நாடு விடுதலையான பிறகு, கைவினைப் பொருட்களுக்கும் ஊரக மற்றும் சிறிய தொழிலமைப்புகளுக்கும் அரசு அளித்த ஆதரவினால் மீண்டும் இக்கலை புத்துயிர் பெற்றது. பூம்புகார் விற்பனை நிலையங்களின் மூலம் இக்கலைத்தட்டுகளுக்கு விற்பனை வாய்ப்பிற்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**கலைத்தட்டுகளின் அமைப்பு**

கண்கவரும் **தஞ்சாவூர் கலைத்தட்டுகள்**, மூன்று முக்கிய உலோகத்தினால் உருவாக்கப்படுகின்றன. வட்டப் பித்தளைத் தகடு ஆதாரத் தகடாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதன் மீது, செம்பு மற்றும் வெள்ளியிலான அச்சின் மூலம் தயாரிக்கப்பட்ட வடிவங்கள் பொருத்தப்படுகின்றன. வெள்ளியிலான அடிப்படை அல்லது பிரதான உருவங்கள் தகட்டின் குழிவான மையப்பகுதியில் பொருத்தப்படுகின்றன. இதற்குத் துணையான செம்பு மற்றும் வெள்ளியினாலான பூவேலைப்பாட்டுடன் கூடிய வடிவமைப்புகள் பித்தளைத் தகட்டின் ஓரங்களில் வட்ட வடிவத்தில் முக்கிய உருவத்தினைச் சுற்றிலும் மாறிமாறிப் பொருத்தப்படுகின்றன.

கலைத்தட்டுகள் உருவாக்குவதற்குத் தேவையான மூலப் பொருட்கள் ஆதாரத் தகட்டிற்குத் தேவையான பித்தளைத் தகடுகள் மற்றும் அந்தத் தகட்டின் மேல் பொருத்துவதற்குத் தேவையான செம்பு மற்றும் வெள்ளியிலான மெல்லிய தகடுகளேயாகும். அச்சு வார்ப்படம் உருவாக்குவதற்குத் தேவையான காரீயம் மற்றும் குங்கிலியம் என்ற ஒருவகை மெழுகு போன்றவைகள் இதற்குத் தேவையான மற்ற மூலப்பொருட்களாகும்.

இம் மூலப்பொருட்களைத் தவிர, உளி, சுத்தியல் மற்றும் துளையிடும் கருவி போன்ற உபகரணங்களும் கலைத்தட்டுகள் உருவாக்கத்தில் முக்கிய இடம்பெறுகின்றன.

இந்தக் கலைத்தட்டுகளுக்கு முக்கியத் தேவையான பித்தளைத் தகடுகள், வேண்டிய அளவுகளிலும் வடிவங்களிலும் வெட்டப்பட்டுச் சீர்செய்யப்படுகின்றன. பின்னர், அதன் மீது பொருத்துவதற்குத் தேவையான வடிவமைப்புகள், உருவங்கள், மெல்லிய வெள்ளி, செம்புத் தகடுகளில் வார்ப்படம் அல்லது அச்சின் மூலம் உருவாக்கப்பட்டு, அவை பித்தளைத் தகட்டில் உளி மற்றும் சுத்தியின் துணைகொண்டு மிகக் கவனமாகப் பொருத்தப்படுகின்றன.

பித்தளைத் தகட்டிற்கும் வெள்ளி மற்றும் செம்பினால் மெல்லிய தகடுகளில் பொருத்தப்படும் வடிவமைப்புகளுக்கும் இடையிலுள்ள வெற்றிடத்தில் குங்கிலியம் என்ற ஒருவகை மெழுகு கெட்டியான ஆதாரப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. இம்மாதிரியான

★ ★ ★ ★ ★




திருக்குறளில், 'குறிப்பறிதல்' என்கிற அதிகாரம் பொருட்பாலிலும் வருகிறது; காமத்துப் பாலிலும் வருகிறது; இப்படி வேறெந்த அதிகாரமும் இரண்டாம் முறை இடம்பெறவில்லை!

★ ★ ★ ★ ★

பித்தளைத் தகட்டில், உளி மற்றும் சுத்தியின் துணை கொண்டு வெள்ளி மற்றும் செம்பினாலான வடிவங்களைப் பொருத்துவதே இக்கலையின் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும்.

இந்த முறையில் தஞ்சாவூரில் மட்டும்தான் இம்மாதிரி நெஞ்சையள்ளும் கலைத்தட்டுகள் உருவாக்கப்படுகின்றன என்பது தஞ்சைக்கே பெருமை சேர்ப்பதாகும்.

இவ்வகையான கலைத்தட்டுகள் பெரும்பாலும் இல்லங்களிலும், அலுவலகங்களிலும், பயணியர் விடுதிகளிலும் அலங்காரப் பொருளாகவும், விழாக்காலப் பரிசுப் பொருட்களாகவும் பயன்பட்டுவருகின்றன. இக் கலையில் கலைத்தட்டுகள் தவிர, கலைநயம் மிகுந்த குடம், நகைப்பெட்டி, சாவி வளையம் போன்றவைகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

**கூட்டுறவுச் சங்கம் மூலம் உதவி**




இக்கலையின் வளர்ச்சியில் தனிப்பட்ட கைவினைஞர்கள் தவிர, கைவினைஞர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, கூட்டுறவு சங்கம் மற்றும் கைவினைப்பொருட்களின் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்ட **தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி இணையகமும்** ஈடுபட்டுவந்துள்ளன. இப்போது பெரும்பாலான கைவினைஞர்கள் கலைத்தட்டுக் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றனர். சங்கத்திலிருந்து, கைவினைஞர்களுக்குத் தேவைப்படும் மூலப்பொருட்கள் வழங்கப்பட்டு, அவர்களின் உற்பத்திப் பொருட்களைத் திரும்பப் பெற்று சங்கமே விற்பனை செய்தும் வருகிறது.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், தனது சொந்தப் பொறுப்பில் கலைத்தட்டுகளுக்கெனத் தஞ்சாவூரில் ஒரு உற்பத்தி நிலையத்தினை நிறுவியுள்ளது. இந்த நிலையத்தில் இப்போது 23 கலைப்பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் கலைத்தட்டுகள் 'பூம்புகார் விற்பனை நிலையங்கள்' மூலம், நகரங்கள் தோறும் நன்முறையில் விற்பனை செய்யப்பட்டுவருகின்றன. இந்நிறுவனத்திற்கு இதன் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் கலைத் தட்டுகள், போதுமானதாக இல்லாததால், தனது தேவைகளுக்குக் கலைத்தட்டு கூட்டுறவு சங்கத்திடமிருந்தும் கொள்முதல் செய்து கொள்கிறது. கூட்டுறவு சங்கத்திடமிருந்து கலைத்தட்டுகளைப் பெருவாரியான அளவிற்குக் கொள்முதல் செய்துவருவதில் 'பூம்புகார்' நிறுவனம் முதன்மை வகிக்கிறது. இந்நிறுவன உற்பத்தி நிலையத்திலும் உற்பத்தி பெருமளவில் முன்னேற்றமடைந்து வருகிறது.

1993-94 ல் ரூ.3.80 இலட்சமாக இருந்த தஞ்சாவூர் கலைத்தட்டு உற்பத்தி 1996-97ல் ரூ.13.81 இலட்சம் என்ற அளவில் முன்னேற்றமடைந்துள்ளது. இந்த ஆண்டில், அதாவது அக்டோபர் இறுதி வரையிலான காலத்தில் உற்பத்தி நிலையத்தின் உற்பத்தி ரூ.14.79 இலட்சத்தை எட்டியுள்ளது. இங்கு உற்பத்தியாளர்கள் தவிர, இக்கலையில் மேலும் பலவகைக் கைவினைஞர்களுக்கு உருவாக்கப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றது. மாறிவரும் மக்களின் விருப்பத்திற்கேற்ப, இக்கலையில் பல புதிய வகையான வடிவமைப்புகளும் உருவாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இக் கலையினைப் போற்றிப் பாதுகாத்திடவும் முன்னேற்றமடையச் செய்யவும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி நிறுவனம் தொடர்ந்து பாடுபடும் என உறுதியாக நம்பலாம். ★



*கஷ்டங்களை நாம்*
*அனுபவித்தால் தான்,*
*பின்னர் நாம் சுகத்தின்*
*அருமை தெரிந்து*
*நடந்துகொள்ள முடியும்!*
*- மூதறிஞர் ராஜாஜி*

# முதலமைச்சர் கலைஞரால் காவல்துறைக்குப் புதிய வாகனங்கள் வழங்கப்பட்டன !

ஒரு மாநிலத்தின் அமைதி மற்றும் சட்டம் ஒழுங்கைக் காக்கும் காவல்துறையினர் திறமையாகப் பணியாற்ற, அவர்களுக்குப் பல்வேறு திட்டங்களைத் தமிழக அரசு அறிமுகப்படுத்தி வருகிறது. காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ், அரசு 1996-97ஆம் ஆண்டிற்கு ரூ. 8.33 கோடியும், 1997-98ஆம் ஆண்டிற்கு ரூ. 10 கோடியும் ஒதுக்கீடு செய்துள்ளது.


தமிழகத்தில் 1170 காவல் நிலையங்களும் 117 புறக்காவல் நிலையங்களும் உள்ளன. எல்லாக் காவல் நிலையங்களுக்கும் ஜீப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், புறக்காவல் நிலையங்களுக்கு வாகன வசதி இல்லை. புறக்காவல் நிலையங்களின் தலைமைக் காவலர்கள் திறமையாகப் பணியாற்றும் பொருட்டு, அனைத்துப் புறக்காவல் நிலையங்களுக்கும் மோட்டார் சைக்கிள் வழங்க முடிவு செய்யப்பட்டு, முதல் கட்டமாக 77 மோட்டார் சைக்கிள்கள் புறக்காவல் நிலையங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் வழங்கப்படுகின்றது.

காவல் துறையின் பணியைச் செம்மைப்படுத்தும் பொருட்டு, சேலம், திருநெல்வேலி, திருச்சி ஆகிய இடங்களில் புதிதாக காவல் ஆணையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேலும் திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய காவல் சரகமும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட காவல் ஆணையங்களுக்காக 45 மகேந்திரா ஜீப்புகள் வழங்கப்படுகின்றன.

மேலும் மாவட்டங்களுக்குச் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக வாகன வசதிகளைப்பெருக்க முடிவு செய்யப்பட்டு 20 மகேந்திரா ஜீப்புகளும், 6 பஸ் சேஸிஸ்களும், விபத்தில் காயமடைந்தவர்களுக்கு அவசரச் சிகிச்சை தரும்பொருட்டு 2 ஆம்புலன்ஸ் வண்டிகளும், கலவரப்பகுதிகளுக்கு விரைவாகச் செல்ல, காவலர்களை ஏற்றிச்செல்வதற்காக 15 மினி வேன்களும், மற்றும் 17 புறக்காவல் நிலையங்களை புதிய காவல் நிலையங்களுக்கு மாற்றி ஆணை பிறப்பித்து முதல் கட்டமாக அவற்றிற்காக, 5 மாருதி ஜீப்புகளும் வழங்கப்படுகின்றன. இவ் வாகனங்களின் மொத்த மதிப்பு ரூ. 3.5 கோடியாகும்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு.ஆர்க்காடு நா.வீராசாமி, திரு.துரைமுருகன், முனைவர் மு.தமிழ்க்குடிமகன், திரு.அ.ரகுமான்கான், திரு. வ. முல்லைவேந்தன் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

அன்றைய தினம் வழங்கப்பட்ட புதிய வாகனங்கள் பகிர்மான விபரம் வருமாறு:



| | | |
|---|---|---|
| **மோட்டார் சைக்கிள் - 77** | | |
| புறக்காவல் நிலையங்கள் - மாவட்டங்கள் | - | 72 |
| சென்னை மாநகரம் | - | 4 |
| மதுரை மாநகரம் | - | 1 |
| **மகேந்திரா ஜீப்புகள்(எம்.எம்.540) - 65** | | |
| காவல் ஆணையகங்கள் | - | 45 |
| மாவட்டக் காவல் நிலையங்கள் | - | 20 |
| **மாருதி ஜிப்ஸி - 5** | | |
| மாவட்டக் காவல் நிலையங்கள் | - | 5 |
| **ஆம்புலன்ஸ் - 2** | | |
| பெரம்பலூர் மாவட்டம் | - | 1 |
| நாமக்கல் மாவட்டம் | - | 1 |
| **மினி வேன்கள் - 15** | | |
| மாவட்டங்கள் (கலவரங்களைத் தடுப்பதற்கு) | - | 15 |
| **பஸ் (சேஸிஸ்) - 6** | | |
| சென்னை மாநகரம் | - | 1 |
| மாவட்டங்கள் | - | 5 |
| **ஆக மொத்தம்** | | **170** |

# மகாகவி பாரதி

நெருப்புக்குத் தீவைக்கும் கண்கள், பார்ப்பார்
நெஞ்சுக்குள் சுழல்காந்தச் சக்கரங்கள்!
கருப்பாக, படுத்திருக்கும் கேள்வி போன்ற
கனமான இருமீசை! மெலிந்த மார்பு!
சிரிப்பொலியைச் சிந்திவரும் இதழ்கள்! என்றும்
சிந்தனையைக் கிளறிவிடும் சொற்கள்! தாயின்
கருப்பத்தில் தோன்றிவிட்ட மேதைத் தன்மை
கவியரசர் பாரதியின் தோற்ற மாகும்!

★★★

பாவுலகை ஆளவந்த வேந்தன் - இவன்
பார்முழுதுக் கும்உரிய மாந்தன் - திகழ்
மூவுலகைப் பாடலுக்கு முற்றும் விலை பேசுகின்ற
வேந்தன்! - சக்தி காந்தன்!

தேன் வழிந்து கொண்டிருக்கும் பாட்டில் - அவன்
சீர்பெருகிக் கொண்டிருக்கும் நாட்டில் - இங்கு
நானறிந்த பாரதியின் நல்லுருவம் என்னிதய
வீட்டில்! - மனக் கூட்டில்!

செந்தமிழைச் செங்குருதி ஆக்கி - சுடர்
செங்கதிரைக் கண்களிலே தேக்கி - இங்கு
வந்தமகள் வாழ்ந்ததெலாம் வாழ்க்கைதனைக் காவியமாய்
ஆக்கி! - நமை ஊக்கி!

கண்ணிரண்டும் தீப்பறக்கும் வேல்கள்! - பொய்யைக்
கண்டுவிட்டா லோநெருப்புக் கோள்கள்! - எங்கள்
காவியத்து நாயகனைக் கண்டவுடன் ஆடும் எமன்
தோள்கள்! - ஓடும் கால்கள்!

மேகமதைக் குத்துமவன் மீசை! - அந்த
மீசைமகன் தேடவில்லை காசை! - இந்தத்
தேகமெனும் ஆலயத்தில் தேவிபரா சக்திதொழ
ஆசை! - தொண்டு பூசை!

கச்சணிந்த மாதருக்கும் அஞ்சான் - அவன்
கச்சணியா மாதருக்கும் அஞ்சான்! - உயிர்
துச்சமெனத் தான்மதித்துத் துன்பமதைத் தூள்படுத்த
அஞ்சான்! - வைர நெஞ்சான்!
அச்சமதைக் கொன்றுவிடப் பார்ப்பான்! - இவன்
ஆணவத்தைக் கொன்றுவிட்ட பார்ப்பான் -
மண்ணில்
இச் சகத்தில் பிச்சைபெறும் ஈனர்களைக் கண்டுமனம்
வேர்ப்பான்! - பின்பு ஆர்ப்பான்!

பெண்ணடிமை தீர்க்க வந்த தீரன்! - எங்கள்
பேதைமையைப் போக்க வந்த வீரன்! - சாதிப்
பேயிருந்து ஆட்டிவந்த பேருலகைக் காக்கவந்த
சூரன்! - புரட்சிக்காரன்!

பட்டிதொட்டி எங்குமிவன் பேச்சு! - இவன்
பாடலெலாம் உண்மையொளி வீச்சு! - எங்கள்
கட்டழகன் வாழ்க்கையிலே கண்டதெலாம்
என்னவெறும்
ஏச்சு! - எதிர் நீச்சு!

சாதியிலே இல்லை யவன் நாட்டம்! - இந்தச்
சக்திமகன் காண்பதவள் ஆட்டம்! - இந்த
மேதினியில் காக்கைகளும் மேவுபுகழ்ப் பாரதியின்
கூட்டம்! - உயிர்த் தோட்டம்!

வானகத்தை வையமுடன் இணைப்பான் - தேவ
வாழ்க்கையுடன் மானுடத்தைப் பிணைப்பான் - அந்த
மோனமகள் வெண்ணிலவை முத்தமிடப் பாட்டினிலே
அழைப்பான்! - அமுதைக் குழைப்பான்!

வெண்ணிலவின் நல்லமுதைக் குடிப்பான் - அந்த
விண்முகட்டில் ஓட்டைவிழ இடிப்பான் - எழிற்
கண்ணனவன் தன்னையவன் காதலியாய்
கண்டுமனம்
துடிப்பான்! - பா வடிப்பான்!

காற்றுவெளிப் பந்தலிலே நடப்பான் - வானக்
காட்டினிலே மின்மினியைப் பிடிப்பான் - கால
ஆற்றிலெதிர் நீந்துகின்ற ஆசைகளி லேகவிதை
படிப்பான்! - தேன் குடிப்பான்!

பாரிருக்கும் நாள்வரைக்கும் இருப்பான் - அவன்
பைந்தமிழின் பாடல்களில் இருப்பான் - வானக்
காரிருக்கும் நாள்வரைக்கும் கற்பனையின்
அற்புதத்தில்
சிரிப்பான்! - புகழ் விரிப்பான்!

**- கவியரசர் இளந்தேவன்**



## உலக எய்ட்ஸ் நாள் நிகழ்ச்சி:

# கலைஞர் பங்கேற்ற மனிதச் சங்கிலி !

உலக எய்ட்ஸ் நாளையொட்டி (1.12.97) சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் பங்கேற்றார். மேலும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு என்.வீராசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.ரகுமான்கான், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு.சமயநல்லூர் எஸ். செல்வராஜ், சென்னை மாநகரத் துணை மேயர் திருமதி. ஜெயசந்திரவதனா மற்றும் உயர் அதிகாரிகளும் பங்கேற்றார்கள்.

காமராசர் சிலையருகே நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்த முதலமைச்சரிடம் - எய்ட்ஸ் விழிப்புணர்வுச் சுடரை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வழங்கினார்.

அங்கே திரண்டிருந்த மாணவ மாணவிகளிடையே பேசுகையில் - ''இன்று உலக எய்ட்ஸ் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது; மனித சமுதாயத்திற்குச் சவாலாக இருக்கும் எய்ட்ஸ் என்கிற உயிர்க்கொல்லி நோய்க்கு எதிராக உறுதிமொழி ஏற்போம்" என்று பேசிய முதலமைச்சர் அவர்கள் - 'எய்ட்ஸ் இல்லா உலகம்-என் பங்கு நிச்சயம்' என்ற உறுதிமொழியைப் படிக்க - அதை அனைவரும் திரும்பச் சொல்லி உறுதிமொழி ஏற்றார்கள்.

அதன்பின் நடைபெற்ற மாணவ - மாணவிகள் மனிதச் சங்கிலி நிகழ்ச்சியிலும் கலைஞர் அவர்கள் பங்கேற்றார்; எய்ட்ஸ் நோயாளிச் சிறுமிகள் இருவர் உட்பட ஏறத்தாழ 5000 பேர் இதில் கலந்துகொண்டு கைகோத்து நின்றனர். எய்ட்ஸ் நோய் பாதிப்பிற்கு ஆளான சிறுமியைத் தன் அருகிலேயே முதலமைச்சர் அவர்கள் நிறுத்திக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

இதே நாளில், சென்னை மாநகராட்சி சார்பில், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 'எய்ட்ஸ்' பற்றிய பட்டிமன்றம் நடைபெற்றது.

## பட்டம் பெறாத குடும்பங்களைச் சேர்ந்த முதல்நிலை மதிப்பெண்கள் பெறும்

# மாணவ, மாணவியர்க்கு முழுக் கல்விச் செலவையும் அரசே ஏற்கும் புதிய திட்டம் !

## முதலமைச்சர் கலைஞர் ஆணையில் செயலாக்கம்

இதுவரை பட்டதாரி இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த கல்வித் திறமுடைய மாணவ, மாணவியர்களை ஊக்கப்படுத்தும் வகையில், **முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டப் புதிய 'புரட்சிகரத் திட்டம் தான், முழுக்கல்விச் செலவையும் அரசே ஏற்கும் வழிகாட்டும் திட்டமாகும்.

இதன்படி, மருத்துவம், பல் மருத்துவம், பொறியியல், வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவம் ஆகிய தொழிற் பட்டப் படிப்புகளில் அனுமதிக்கப்படும் மாணவ, மாணவியரில் தங்களது நுழைவுத் தேர்வின் மொத்த மதிப்பெண்ணான 300இல் முதல் 10 நிலை பெற்றிருப்போர்க்கு, அவர்களது கல்விக்கான அனைத்துச் செலவு களையும் அரசே ஏற்கிறது. ஒவ்வொரு தொழில் பட்டப் படிப்பிலும் 10 பேர், ஆக, 5 தொழிற் பட்டப்படிப்புகளிலும் ஆண்டுக்கு மொத்தம் 50 பேர் இந்தச் சிறப்புத் திட்டத்தின் கீழ் முழுச்செலவு உதவித்தொகை பெற்று வருகிறார்கள். அவர்களின் கல்விக் காலமாகிய நான்கு ஆண்டுகளுக்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால், தற்பொழுது 100 மாணவ - மாணவியர் பயனடைந்து வருகின்றனர்.


இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி, சட்டப்படிப்பு மற்றும் சித்த மருத்துவம் பயிலும் இத்தகைய மாணவ, மாணவியருக்கும் இந்த உதவித் தொகை அளிக்கப்படுமென்று மாண்புமிகு **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் அறிவித்துள்ளார். இதன் மூலம், மேலும் ஆண்டொன்றிற்கு 20 இத்தகு மாணவ, மாணவியர் பயனடைவார்கள்.

**மருத்துவம்:**

# பூந்தளிரின் இதயராகம்!

டாக்டர். மு. தனபால்






பருவ காலங்கள் மாறுகின்றன; இரவும் பகலும் மாறி மாறி வருகின்றன. நிலவு கூட தேய்ந்து ஒரு நாள் மறைந்து விடுகிறது; ஆனால், கருவறையிலே தோன்றும் பூந்தளிரின் இதயம் வாழ்நாள் பூராவும் துடித்துக் கொண்டுதான் இருக்கும். பிஞ்சுகளின் இதயத் துடிப்பையும், அந்த இதயத் தோற்றத்தின் அமைப்பையும், அதன் இரத்த ஓட்டத்தையும் பிறவியிலேயே ஏற்படுகின்ற இதயக் கோளாறு களையும் காண்பதுதான் Fetal Echo-Cardiography எனும் மிக விநோத மான விஞ்ஞானக் கண்டு பிடிப்பு.

'அத்தை மகனே போய் வரவா? அம்மான் மகனே போய் வரவா?' - என்று கவியரசுவின் பாடலை முணுமுணுத்துக் கொண்டு கவிதா எனும் இளம் பெண் தாய் வீடு சென்றார். கனவுகளோடும், கற்பனை களோடும் தன் தாய் மாமனின் பிள்ளை தன் வயிற்றில் வளரும் பூரிப்போடும் இருந்த அவருக்கு ஓரிடத்தில் ஸ்கேன் எடுக்கப்பட்டது. அந்த ஸ்கேனை எடுத்த டாக்டர் முகம் சற்று அதிர்ந்து ஓய்ந்தது. பின் Fetal Echo Cardiography எனும் புதிய கருவியின் மூலம் விசேஷ scan எடுக்கப்பட்டது. அந்தப் பிஞ்சு இதயத்தில் 8mm அளவு இதயத்தின் இடது கீழ் அறைக்கும், வலது அறைக்கும் நடுவில் 8 மி.மீ. அளவு சிறு ஓட்டையும் அதன் வழியே இரத்த ஓட்டம் சிதறித் தெறித்தோடுவதும் தெரிந்தது.

கவிதாவின் கர்ப்பப்பையில் சுற்றி இருந்த Amniotic Fluid எனும் பனிக்குடத்தின் நீரும், Chromosome abnormally எனும் சோதனைக்கு அனுப்பப்பட்டது. முடிவுகள் இதயக் கோளாறை உறுதி செய்தன.

கவிதாவின் தாய் ஒரு சிறந்த நாவலாசிரியை. எழுத்து வடிவத்தில் அத்தை மகனைப் பற்றியும், மாமன் மகளைப் பற்றியும் கற்பனைக் கவிதைகளை எழுதிய அவர் மனம் வாடியது. இரத்த சொந்தமுள்ள திருமண உறவுகள் (Consanguity marriage) தவிர்க்கப்பட வேண்டும் எனும் கால மாற்றம் அவர் கருத்தில் படவில்லை.

இந்தத் திருமண உறவில் ஏற்படும் குழந்தைகளுக்கு இதயக் கோளாறுகள் அதிகம் காணப்படுவது கண்டறியப் பட்டுள்ளது.





கருவறையில் உள்ள குழந்தை இதயத்தின் இயல்பான தோற்றம்

### கருவறையில் இதயக் கோளாறுகள் - காரணங்கள்:

கருவுற்றிருக்கும் இளந்தாய்மார்கள் முதல் மூன்று மாதங்கள் மிகமிகக் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். காய்ச்சல், தலைவலி என்றாலும் கூட மாத்திரைகளைத் தவிர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்ட தாய்மார்களின் நிலை வேதனைக்குரியது என்றாலும், பின் விளைவுகளைக் கருதி மிகவும் கவனமாக இருத்தல் அவசியமாகிறது.

**1. தட்டம்மை (Measles)**

ஜுரம், தலைவலி, கைகால் குடைச்சல், தட்டையான அம்மைத் தழும்புகள் - முகம் தவிர்த்து உடலின் பல பாகங்களில் காணப்படுதல்.



**2. ரூபல்லா ஜுரம்** (Rubella Infection)

ஜுரம், தலைவலி, கைகால் குடைச்சல், வேர்க்குறு அம்மை.

மேற்குறிப்பிட்ட ஒருவித விஷக் காய்ச்சல் வீரியத் தன்மையுடனோ அல்லது சாதாரண காய்ச்சல் போன்றோ பேறுகாலத்தின் முதல் மூன்று மாதங்களில் (Early pregnency period) ஏற்பட்டால், பின் இதயக் கோளாறுகள் கொண்ட குழந்தைகள் பிறக்க. வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படும்.

**இவற்றைத் தவிர்க்கமுடியுமா ?**

மேற்கூறப்பட்ட ஜுரவகை 'வைரஸ்' (Virus) எனும் கண்ணிற்குத் தெரியாத கிருமிகள் தாக்கப்படுவதினால் ஏற்படுகின்றது. இதைத் தவிர்க்க சுகாதாரத்தோடு கூடிய சுற்றுப்புறச் சூழல், ஆரோக்கிய வாழ்க்கை முறை இவைகளைக் கடைப்பிடிப்போர்கள் இந்த விஷக் கிருமிகள் தாக்கினாலும், அதிலிருந்து தப்புவார்கள்.

**தடுப்பு மருந்து உண்டா ?**

இளமை வயதின் முகப்பில் இருப்பவர்கள் (Adolesent period) மேலை நாடுகளில் திருணத்திற்கு முன் இந்த vaccine எடுத்துக் கொள்கிறார்கள். இந்தியாவில் இன்னும் இந்த விழிப்புணர்ச்சி ஏற்படாததால் இதய நோய்கள் இங்கு இதிகமாகக் காணப்படுகின்றன.

**3. மருந்துகளின் வினோத விளைவுகள்** (DRUGS)

இளம்பேறு காலத்தில் உட்கொள்ளப்படும் சில மருந்துகள், குழந்தைகளின் கரு வளர்ச்சியில் பாதிப்புகள் ஏற்படுத்தி, இதய நோய்கள் உண்டாகக் காரணமாகிறது.

1. மனநலம் பாதிக்கப்பட்டோர்க்கு கொடுக்கப்படும் 'லித்தியம்' (Lithium) எனும் மருந்து.
2. வலிப்பு நோய்களுக்காகக் கொடுக்கப்படும் 'எப்டாயின்' (Eptoin) எனும் மருந்து.
3. தாம் கருவுற்றிருக்கிறோமா ? என்ற சோதனை கொடுக்கப்படும் ஹார்மோன் (Hormonal pills) மருந்துகள்.
4. இளங்கருவைக் கலைக்கப் போடப்பட்ட ஊசி மருந்துகள் பயனளிக்காமல் போனால், போனால் போகட்டும் என்று விட்டுவிடும் பிரசவம், பின் இதய நோயுள்ள குழந்தைகள் பிறக்கக் காரணமாகி விடும்.
5. இதய நோயால் பாதிக்கப்பட்ட தாய்மார்கள் இரத்த உறைவைத் தடுக்க எடுக்கும் warfarin எனும் மருந்து வகை இளம் பிரசவ காலத்தில் முதல் மூன்று மாதங்களீ தவிர்க்கப் பட வேண்டும்.
6. 'ஆஸ்பிரின்' (Asprin) எனும் மிகவும் எளிதாகக் கிடைக்கக் கூடிய மிக முக்கியமான மாத்திரை இது முதல் மூன்று மாதங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.
7. மதுவகை (Alcohol)

பெண்மை என்றால் மென்மை பொங்கி வரும். இந்தத் திரவத்தைத் தீண்டுவார்களா பெண்கள் ? அதிலும் இந்தியாவில் ? இருக்கிறார்கள் இங்கும் ! என்ற வேதனையான விஷயத்தை எடுத்த புள்ளி விவரங்கள் சொல்லுகிறதே !

இந்தக் கொடிய வழக்கத்திலிருந்து ஆண்களை மீட்கப் போராடும் தாயுள்ளங்களே உங்கள் பிஞ்சுகளின் எதிர்காலத்தையும் சிந்தியுங்கள்.

**பிஞ்சுகளின் இதய ராகம்**

`Fetal Echo cardiogram' என்பது கருவறையில் இருக்கும் சிசுக்களின் இதயக் கோளாறுகளைக் கண்டறியும் முறை. கருவுற்ற தாய்மார்கள் எப்பொழுதும் எடுக்கும் Normal Scan இல் இதயக் கோளாறுகள் கண்டு பிடிக்கப்பட்டால் அதை உறுதி செய்யும் புதிய கண்டுபிடிப்பு.

இதன் மூலம்,

1. இதயத்தின் சீரான அமைப்பு
2. இதயத்திலிருந்து இரத்தத்தை எடுத்துச் செல்லும் இரத்தக் குழாய்களின் தன்மை
3. இதயத்தில் ஓட்டைகள்
4. பிஞ்சு இதயத்தின் அதிகப் படியான துடிப்புகள்
5. இதயத்திற்கும், நுரையீரலுக்கும் பாலமாக அமைந்துள்ள இரத்த நாளத்தின் தன்மை.

**இந்தப் புதிய முறையினால் பாதிப்புள்ளதா ?**

அதிகப்படியான கதிர்வீச்சு, சிசுக்களின் வளர்ச்சியைப் பாதிக்கும் என்பதால்தான் எக்ஸ்ரே (X -ray) கதிர் வீச்சு கருவுற்றிருக்கும் தாய்மார்




*மூவேந்தர்கள் வைத்திருந்த குதிரைகள் அக்காலத்தில் தனித் தனிப் பெயரால் குறிப்பிடப் பட்டன; சேரனின் குதிரை 'பாடலம்' எனப்பட்டது. சோழனின் குதிரை 'கோரம்' எனப்பட்டது. பாண்டிய னின் குதிரை 'கனவட்டம்' எனப் பட்டது!*

---

களுக்கு எடுப்பதில்லை. ஆனால் இந்தப் புதிய முறையினால் எந்த விதப் பாதிப்புமில்லை. மிகவேகமாகச் செய்து முடித்துவிடுவதாலும், இதன் கதிரி யக்கத்தில் வீரியமில்லை என்பதாலும் இதனால் எந்த பாதகமும் இல்லை.

14 வாரத்திலிருந்து 18 வாரத் திற்குள் இதய அறைகளின் தோற் றத்தைச் சரிவர அறிந்து கொள்ள முடியும்.

சர்க்கரை நோயுள்ள தாய்மார்கள், ஏற்கெனவே குறைபாடுகள் கொண்ட குழந்தைகளை ஈன்றெடுத்த தாய் மார்கள், இதயநோயால் பாதிக்கப்பட்ட தாய்மார்கள், சூழ்நிலையால் இரத்த சம்பந்தமுள்ள திருமணம் செய்து கொண்ட பேதைகள்--இவர்கள் அனைவரும் பேறுகாலத்தில் முதல் மூன்று மாதங்கள் மிகவும் கவனமாக இருப்பதுடன் சிசுக்களின் இதயத் தையும் சரிபார்த்தல் நல்லது.

தலைப்பிரசவத்தில் இதயக் கோளாறுள்ள குழந்தையைப் பெற்று அவதிப் பட்ட ஒரு தாய், அடுத்தக் குழந்தையின் இதய அமைப்பைச் சரிபார்த்து எந்தவிதப் பாதிப்பின்றிக் குழந்தை நான்றாக இருக்கிறது என்று கேட்டவுடன் அந்தத் தாயிள்ளத்தில் ஏற்படும் ஆனந்த அலையும், அந்தப் பூந்தளிரின் இதய இராகமும், விஞ்ஞான வளர்ச்சியின் வேகத்தைக் கீதங்களாக இழைக்கின்றன. ❑

# சாதனைச் சரித்திரம் படைத்த 'பாரத ரத்னா' அப்துல் கலாம்!

புகழ்பெற்ற விஞ்ஞானி திரு ஏ.பி.ஜே.அப்துல் கலாமுக்கு - நம் இந்திய நாட்டின் இணையற்ற விருதான 'பாரத ரத்னா' விருது வழங்கிப் பெருமைப் படுத்தப் பட்டுள்ளது.

இந்தியப் பாதுகாப்பு அமைச் சகத்தின் ஆலோசகராகவும், பாதுகாப்புத்துறை ஆராய்ச்சி வளர்ச்சி அமைப்பின் தலைவ ராகவும் பதவி வகிப்பவர் திரு.கலாம்; ஏவுகணைத் தொழில் நுட்பத்தில் சிறந்த நிபுணரான அவருக்கு, அவரது சீரிய பணியின் பொருட்டே இந்த விருது வழங்கப்பட்டிருக்கிறது.

பொறியாளர்களைப் பொறுத்த மட்டில், மறைந்த டாக்டர் விசுவேசுவரய்யா வுக்குப் பிறகு, இவருக்குத் தான் 'பாரத ரத்னா' விருது கிடைத்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. நம் நாட்டில் மிகக் குறுகிய காலத்திலேயே ஏவுகணைத் தொழில் நுட்பத்தை



மேம்படுத்தி. அது தொடர்பான வளர்ச்சித் திட்டம் வெற்றியடைந் ததில் பெரும்பங்கு இவருடைய தாகும்.

திரு.கலாமைப் பொறுத்தவரை, நாம் நெஞ்சு நிமிர்த்திப் பெருமைப் பட வேண்டிய செய்தி, அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். ஆம்; ராமேஸ்வரம் அவருக்குச் சொந்த ஊர்!.

மிக வறிய குடும்பத்தில் பிறந்த திரு.கலாம், ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் மீடியம்தான்; தனது பட்டப்படிப்பினை திருச்சி தூய வளனார்கல்லூரியில் முடித்தார். அதன் பின்னர், அவர் சென்னை எம்.ஐ.டி.யில் சேர்ந்து விமானப் பொறியியல் துறையில் தம் மேற் படிப்பைத் தொடர, அவருடைய சகோதரி தம்மிடமிருந்த நகையை யெல்லாம் விற்றுப் பொருளுதவி செய்திருக்கிறார்.

இன்றைக்கும் கட்டைப் பிரம்மச் சாரியாகவே உள்ள திரு.அப்துல் கலாமுக்குத் தமிழ் இலக்கியம், நாலாயிரத் திவ்யப்பிரபந்தம், கீதையெல்லாம் தெரியும்; கவிதை இயற்றுதல், வீணை வாசித்தல் ஆகியவற்றில் மிகுந்த ஆர்வம் காட்டும் இவருக்கு அசைவமும், அதேபோன்று மது, சிகரெட்டும் அறவே பிடிக்காது.

இதையெல்லாம்விட முக்கியமான ஒன்று, அவர் தம் உயர் கல்வி முடிந்ததும் மேற்படிப்புக்கோ பொருள் திரட்டவோ, எந்த ஒரு வெளிநாட்டிற்கும் சென்றதில்லை.

திரு.அப்துல் கலாம் தனது படிப்பும், தான் பெற்ற அறிவியல் நுட்பமும், தான் பிறந்த பொன்நாட்டின் பாதுகாப்புக் கருதியும், உலக அரங்கில் நம் நாட்டின் மதிப்பும், மரியாதையும் உயர்ந்து நிற்க வேண்டும் என்ற இலட்சிய நோக்கில், தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு அவர் ஆற்றிய பணிக ளுக்குக் கிடைத்த இந்திய நாட்டின் ஒட்டுமொத்த அங்கீகாரத்தின் அடையாளமாகவே இத்தலை சிறந்த விருது வழங்கப்பட்டுள்ளது என்பதில் தமிழ்கூறும் நல்லுலகமே பெருமை பெற்றது என்பது குறிப்பிடத்தகுந்தது.


## முதலமைச்சர் வாழ்த்து

திரு ஏ.பி.ஜே.அப்துல் கலாமுக்குப் 'பாரத ரத்னா' விருது கிடைத்தது பற்றி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழ்த் திருநாட்டின் ஒட்டுமொத்த வாழ்த்தாகப் பெருமையுடன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

***'நமது நாட்டில் வழங்கப்படும் மிக உயர்ந்த விருது எனப் போற்றப்படும் 'பாரத ரத்னா விருது' இந்தியாவின் தொழில்நுட்பச் சாதனையில் சரித்திரம் படைத்து வரும் விஞ்ஞான வித்தகர் டாக்டர் அப்துல் கலாமுக்கு அளிக்கப் பட்டிருப்பதும், அதுவும் ஒரு தமிழருக்கு அளிக்கப்பட்டிருப்பதும், அதுவும் சிறுபான்மைச் சமுதா யத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அளித்திருப்பதும் பெருமைக்குரியதும், பெருமகிழ்ச்சிக்குரியதுமாகும். அவருக்கு என் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரியதாகுக'.***

- பி.எல்.ஆர்.

சென்ற இதழ் தொடர்ச்சி:




அடுத்த நிலையில் ஏழாம் சிலம்பில் கடவுள் வணக்கத் தேவாரப் பாடல் ஒன்றேயாயில்லாமல் ஒவ்வோர் இதழிலும் ஒன்றுக்கு மேற்பட்ட பல பாடல்கள் உரையுடன் விளங்குகின்றன. ஆறாம் ஆண்டில் வெளிவந்த அகப்பொருட் கருத்துக்களுக்கு இனமான புறப்பொருட் கருத்துக்கள் இவ்வாண்டில் அவை தம்மின் 12 விளக்கப்படங்களோடும் (Half-Tone) பன்னிரண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளாக இதழ்தோறும் வெளிவந்துள்ளது.

சமயத் தொடர்பாகவும் மொழித் தொடர்பாகவும் பிற உண்மைத் தொடர்பாகவும் மேனாட்டு மக்கள் காணும் அரிய புதுக் கருத்துக்களிலும், ஒராசிரியன் கருத்தெடுத்துப் பன்னிரண்டு பகுதிகளாக்கிப் பன்னீரிதழ்களிலும் ஆங்கிலத்தினின்றும் மொழிபெயர்த்து வெளியிடப் பெற்றுள்ளது. அவ்வாண்டில் (1929-1930) புதுக்கதை (Novel) என்னும் புதினம், கதையிலக்கியத்துக்குக் காட்டான முறையில் வெளிவந்துள்ளது. இந்தச் சிலம்பிலே குறியீட்டுச் சொற்கள் நீங்கலாக ஏனைப் பிறமொழிச் சொற்கள் தமிழில் விரவாதவாறு கருத்தூன்றப் பெற்றமையை வளர்ச்சிப்படி நிலையாகவே கொள்ளலாம்.

பத்தாண்டுத் தொகுதிகளைக் காணும் போது, அதன்கண் அரும் பெருந்தமிழ்ப் புலவர்களால் எழுதப்பட்ட தமிழ் இலக்கணம், இலக்கியம், மொழியாராய்ச்சி, சைவ சமயம், திருமுறை, பிறசமயங்கள், புராணம், இதிகாசம், நுணூல் எனப்படும் அறிவியல்களின் சாரம், வியப்பு மொழிகள் (Wits & Humours) உவகை மொழிகள், சீர்திருத்த அறிவுரைகள், அறவுரைகள் முதலியன வளர்ச்சி நிலைகளாக, பொருளமைதியாகக் காணக் கிடைக்கின்றன.

1977ஆம் ஆண்டுப் பொன்விழாக் கண்டாள் ‘செந்தமிழ்ச் செல்வி’; 1987ஆம் ஆண்டுச் செப்டம்பர்த் திங்கள் இவ்விதழ் மணி விழா மலராக வெளிவந்தது. அறுபதாண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் செந்தமிழ்ச் செல்வியின் அறுபது தொகுதிகளும் விழாவிற்கு வலிமை சேர்க்கும் வகையில் பொலிவுடன் அடுக்கிவைக்கப்பட்டன. அமெரிக்க நாட்டிலுள்ள சிகாகோ பல்கலைக் கழகம் செந்தமிழ்ச்செல்வி இதழ்கள் முழுவதையும் தொடக்கம் முதல் நுண்படச் சுருளில் (Microfilm) பதிந்து வைத்துள்ளது. மணி விழா மலரில் புலவர் இரா.இளங்குமரனின் ‘சேற்றிலே செந்தாமரை’, பேராசிரியர் மா.சண்முக சுப்பிரமணியத்தின் ‘பக்திநெறிப் பண்பாடு’, டாக்டர் சொ.சிங்காரவேலனின் ‘நக்கீரர் காட்டும் நன்னெறி’, தி.இராசமாணிக்கத்தின் ‘மகா சதாசிவத் திருவுரு’, கு.சு.இராமகிருட்டினனின் ‘அடிகளாரும் ஒரு பல்பொருட் பெயரும்’, டாக்டர் இரா.கலைக்கோவனின் ‘கரணக் குழப்பங்கள்’ ஆகிய ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்று மலர் நனி மலர்ந்துள்ளமை சிறப்பாகும்.


தமிழ் இதழ்களின் தொடக்க காலமான 1831 முதல் 1925 வரை தோன்றிய தமிழ் இதழ்களில் இன்று வரை நீடித்து நிற்பவற்றை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

இடையறவு: இரண்டாம் உலகப் போரினால் 1943இல் தான் கட்டுப் பாட்டுச் சட்டம் வந்தது. அதனால், வெள்ளைத் தாள்களில் (அச்சுத் தாள்கள்) செய்தித்தாள்களை அச்சிடக் கூடாத நெருக்கடி ஏற்பட்டது. அப்போது செய்தி அச்சுத் தாளில் ‘செந்தமிழ்ச் செல்வி’யை அச்சிட்டு வெளியிட விரும்பாமல் 1944 மேத் திங்கள் முதல் 1947 ஆகஸ்டுத் திங்கள் முடிய நிறுத்திவைக்கப் பெற்றது. 1947 செப்டம்பர்த் திங்கள் முதல் மீண்டும் மறுமலர்ச்சி நடையிட்டது. இவ்வோர் இடையறவு அன்றிச் ‘செல்வி’ இடையறவு பட்டதில்லை.

நோக்கையும் போக்கையும் வரையறுத்துவிட்டுப் புனல் சாயப் புல் சாயுமாறு போலவோ, சுழற்காற்றில் அலை சருகு போலவோ தான்தோன்றிப் போக்கில் ‘செல்வி’ சென்றது இல்லை. “கண்டதே காட்சி கொண்டதே கோலம்” என்பதோ, காலையிலே ஒரு நோக்கம், கடும்பகலில் ஒரு நோக்கம், மாலையிலே ஒரு நோக்கம், மறுநாளில் ஒரு நோக்கம் எனப் பல திறங்காட்டிப் பறை யறைதலையோ ‘செல்வி’ என்றும்



பேராசிரியை **வெ.கனகசுந்தரம்**



**கம்ப்யூட்டர் கண்டுபிடிக்கப்பட்டது 1946ல் தான். இதை உருவாக்கியவர் புகழ்பெற்ற கணித மேதை ஜான்வான் நியூமன் ஆவார். அமெரிக்காவிலுள்ள பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில்தான் இது முதன்முதல் வடிவமைக்கப்பட்டது!**

அறியாள். ''வாரேன் என்னான் அவர்வரையன்னே'' என்ற சங்கச் சான்றார் வாய்மொழி (புறம் 108 வரையறை கடவாப் பாரிக்குப் பொருந்துமாறு போலவே பைந்தமிழ்ச் 'செந்தமிழ்ச் செல்வி'க்கும் பொருந் துவதாம். அரசியல் நன்மை கருதி ஆரவாரம் காட்டாமல் அமைந்த கொள்கைப் பணியால் சிறந்து விளங்குதல் 'செல்வி'க்கு என்றும் இயல் பாம் என்பர் புலவர் இரா.இளங்குமரன்.

அவள் சிலம்பில் ''பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய மாமலை பயந்த காமரு மணியும்''(புறம் 218) உள்ளிடு பரல்களாகக் கிடந்து இசையொலி எழுப்பி இன்புறுத்து கின்றன. அவ்விசையின் சீர்மையும் செம்மையும் செறிவும் நிறைவும் திங்கள் அளவில் வாழ்வு தராமல், போற்றுவார் போற்றும் காலமெல்லாம் பொலியும் பொன்னென நிலைத்த வாழ்வு அவளுக்குத் தருகின்றன. கலைக் களஞ்சியம் எனக் காலமெல்லாம் காத்துக் கற்கவும் செய்கின்றன. ஆராய்ச்சியாளர்க்கு வித்தாய், அரும் பெரும் புதையலாய் விளங்குகின்றன. கூற்றையும் ஆடல் கொண்ட ஆற்றல் இது! கால வெள்ளத்தையும் கடந்த கவின் இது! ஊழிஊழி வாழும் உயர்வு இது! ''கூற்றம் குதித்தலும் கைகூடும் தோற்றலின்! ஆற்றலும் தலைப் பட்டவர்க்கு'' என்பதை மெய்ப் பிக்கும் மெய்ம்மையும் இது! ... அகவை முதிர முதிர அணிநலஞ் சிறந்து விளங்கு கின்றாள் 'செந்தமிழ்ச் செல்வி!'

### 'செந்தமிழ்ச் செல்வி'யின் பங்களிப்பு

'செல்வி'யின் எழுபத்தோராண்டு காலத் தொண்டுகளைக் கணக்கெடுக்கும் போது பல்துறைப் பங்களிப்புகளும் பளிங்கெனத் தோற்றம் தருகின்றன. சமயப் பணி, இலக்கியப் பணி, வரலாற்றுப் பணி, சொல்லாராய்ச்சி, நாடகப் பணி, இசைப்பணி, மொழி பெயர்ப்பு, கலைச் சொல்லாக்கம், தமிழ் முழக்கம், அறிவியல் ஆய்வு முதலானவற்றை எடுத்துக்காட்டலாம்.

### சமயத்திற்குப் பங்களிப்பு

தமிழகத்தில் தமிழ்ப்பணிக்கும், சமயப் பணிக்கும் எனத் தொடங்கப்பட்ட இதழ்களுள் தொடர்ந்து நடைபெறுவதும் தொடக்க காலம் முதல் ஆண்டு தோறும் வளர்ச்சியும், எழுச்சியும் பெற்றுச் சிறந்து விளங்குவதும் 'செந்தமிழ்ச் செல்வி'யின் சிறப்புக்களுள் ஒன்றாகக் குறிப்பிடலாம். தொடக்கம் முதல் இன்றளவும் அமைந்த இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள் இதற்குக் காரணமானவர்கள் எனலாம். தென்னிந்தியத் தமிழ்ச்சங்கம், சைவ சித்தாந்த சங்கம் என்னும் இரண்டு அறநிலையங்களின் பணியினை மக்களிடையே பரப்புவதும், மக்களை இவ்வற நிலையங்களுக்கு ஈர்ப்பதும், ஈடுபடுத்துவதும் ஆகிய தலையாய தூதுவனாகச் செயல்பட்டதும் காரணமெனலாம்.

'செல்வி' சைவ மக்களுக்கு ஒரு விளக்க அறிவிப்பினைத் தந்தது. சைவ மக்கள் இல்லந்தோறும் சமயச் செய்திகளை எடுத்துச்சென்று அறிவித்தது. (சிலம்பு-3) அரிய நூல்கள் சிலவற்றை வெளியிட்டது. ஒன்று காழிக் கண்ணுடைய வள்ளலார் இயற்றிய 'மாய பிரளயம்' (சிலம்பு 11) இரண்டாவதாக, திருவாசகம் திருப்படையாட்சி முதற்பாடலுக்குத் திருத்தணிகை விசாகப் பெருமாள் ஐயர் எழுதிய அழகிய உரையினை 'செந்தமிழ்ச் செல்வி'யே கண்டு வெளியிட்டுச் (சிலம்பு 4) சைவ உலகிற்கு அறிமுகப்படுத்தியதைக் கூறலாம். திலகவதியார் (சிலம்பு 4-பரல் 5) கட்டுரை, பிரதோஷ விதி (கா.முத்துக்கருப்பபிள்ளை சிலம்பு 4, பக்கம் 224-232, திருவள்ளுவர் சிந்தாந்த சைவர் ஸ்ரீலஸ்ரீ வாலையானந்த சுவாமிகள் சிலம்பு 4) பக்.449-507 போன்ற கட்டுரைகளையும் சிறப்பு நிலைப் பொருளமைதிக்குச் சான்றாக்கலாம்.

ஞான நூலினை ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட் பித்தல், சிந்தித்தல் ஆகிய ஐந்தினையும் சிறந்த ஞான பூசையெனச் சாத்திரம் கூறும். இத்தகைய ஞான பூசை தமிழகம் எங்ஙனும் தமிழ் நெறியில் நடை பெறுவதற்கு ஓவாது பணிபு ரிந்து வருகின்றது 'செந் தமிழ்ச் செல்வி'.



### தமிழ்ப்பணி

தமிழ் வளர்ச்சியென்பது இரு வகைப்படும். ஒன்று, அவரவரும் தமிழ் மொழியை நன்கு பயின்று நுகர்ந்து இன்புறுதல்; இரண்டு, அங்ஙனம் இன்புறுவோர் தொகை வரவரப் பெரு குதற்கு ஆவனவெல்லாம் செய்தல். கல்வி அவ்வறச் செயற் கேற்ற கருவியாகும். அது தமிழ்மொழி வாயிலாக நடைபெறவேண்டுமென்று, அதற்காவனவெல்லாம்

## உலக வங்கியின் நிதி உதவியில் ரூ.807.49 கோடியில், தமிழ்நாட்டில் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்-மேற்கொள்ளப்பட்ட மேம்பாட்டுப் பணிகள் குறித்து உலக வங்கிக்குழு திருப்தி தெரிவித்தது.

உலகவங்கி உதவியுடன் தமிழ்நாட்டில் நீர்வள ஆதார அமைப்புகளைக் (காவிரி டெல்டா பகுதி நீங்கலாக) மேம்படுத்தவும், புனரமைக்கவும் ரூ.807.49 கோடி செலவில் துவக்கிச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இது சம்பந்தமான பணிகளின் முன்னேற்றத்தை, உலக வங்கியின் 5வது ஆய்வுக்குழு தமிழ்நாட்டில் நவம்பர் 24 முதல் 28 முடிய ஆய்வு செய்தது. இதுவரை சுமார் 8/96க்கு முன்னால் ரூ.220 கோடிக்கும், 8/96க்குப் பிறகு ரூ.400 கோடிக்கும் மொத்தம் ரூ.620 கோடி மதிப்பீட்டிற்குத் தமிழ்நாடு அரசுப் பணிகள் மேற்கொள்வதற்கான அங்கீகாரம் அளித்து அதில் ரூ.72 கோடிக்குப் பணிகள் துவக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியாண்டிற்குள் (மார்ச்'98) சுமார் ரூ.300 கோடிக்கான ஒப்பந்தங்கள் நிறைவேற்றிப் பணிகளைத் துவக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ள நிலையை ஆய்வு செய்தபின்னர், தமது திருப்தியை உலக வங்கியினர் தெரிவித்துள்ளனர்.

இத்திட்டத்தின் ஒரு அங்கமாகப் பொதுப்பணித்துறையின் பொறியியல் மேலாண்மை மேம்பாடு பயிற்சி நவீன யுக்திகளைக் கையாளும் பொருட்டு சுமார் ரூ.27.00 கோடி மதிப்பீட்டில் பன்னாட்டு வல்லுநர்கள் பங்கேற்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்ட காலம் முழுவதுமாக இவர்களுடைய பங்குப்பணி தொடரும். இதனால், இத்திட்டம் மட்டுமல்லாமல் எதிர்கால மேம்பாட்டுத் திட்டங்கட்கும் நவீனமய யுக்திகளைக் கையாண்டு, பாசன அபிவிருத்தி செய்யவும், தொடர்ந்து விவசாயம் மேம்பாடு அடையவும் வழிகோலப்படுகிறது.

தளப்பொறியாளர்களுக்குக் கணிப்பொறிகள், வாகனங்கள், தொலைத்தொடர்பு வசதிகள் மேலும் தற்கால நவீன கனரக இயந்திரங்கள் அளிக்கப்பட்டு, பணிகளைத் துரிதமாகவும் உடனுக்குடனும் செயல்படுத்த ஆவன செய்யப்படுகிறது. சராசரியாக அரசு ஒப்புதல் வழங்கும் முறையில் ஏற்படும் சிறு கால தாமதத்தையும் தவிர்க்கும் பொருட்டு, திட்டங்களுக்கு உடனுக்குடன் ஒப்புதல் வழங்க, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரைத் தலைவராகக் கொண்ட உயர்மட்ட ஒப்பந்த ஒப்புதல் குழு அமைத்து, இதுவரை சுமார் ரூ.115 கோடிக்கான ஒப்பந்தங்களுக்கு ஏற்பளித்துள்ளது.

மற்றொரு சிறப்பம்சமாக, ஆயக்கட்டுதாரர்களிடமே பாசன மேலாண்மையை ஒப்படைக்க வகை செய்யும் பொருட்டு, பாசனக் குழுக்கள் / சங்கங்கள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சாத்தனூர் ஆயக்கட்டில் அமைக்கப்பட்டுவரும் இதுபோன்ற சங்கங்களைச் சந்திக்க உலக வங்கியினர் இதுகுறித்துத் தமது திருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

உலக வங்கிக் குழுவில் - திரு.என்.கே.பண்டோபாத்யா, திரு ஆர்.கே. மல்கோத்ரா, திரு. ஈ.வி.ஜெகந்நாதன் ஆகியோரும் உள்ளனர். இக்குழு அரசு பொதுப்பணித்துறைச் செயலாளருடன், தலைமைச்செயலர் மற்றும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் ஆகியோருடனும் கலந்துரையாடிப் பணிகளின் முன்னேற்றம் குறித்துத் திருப்தி தெரிவித்துள்ளனர்.

---

'செல்வி' செய்து வருகின்றனள்.

'தமிழை வளர்ப்பதெப்படி?' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை, மூன்று பரல்களில் மூன்று நிலைகளில் ஒன்பதாஞ் சிலம்பில் D.N.ஆறுமுகம் பிள்ளையவர்களால் எழுதப் பெற்றது. தமிழ்ப் பல்கலைக் கழகம் வேண்டுமென அன்றே குரலெழுப்பியவள் செல்வி. 'தமிழ் மக்கள் நெஞ்சப் பாங்கும் இலக்கியப் போக்கும்' என்னுந் தலைப்பில் கா.சு. பிள்ளையவர்கள் சிலம்பு ஆறாம் தொகுதி 2, 3ஆம் பரல்களில் சிறந்ததொரு கட்டுரை யாத்துள்ளார். தமிழ் இலக்கிய வரலாற்றின் பிழிவாக அது விளங்கு கின்றது.

"பொதுமக்களுக்கு இலக்கியத்தைப் பயன்படுத்த வேண்டுமென்ற கொள்கை நிலைபெற்ற காலம் நூற்றாண்டிலே தானென்று தோன்றுகிறது. செயற்கைச் சொன்னயத்தைப் பொருட்படுத்தாது இயற்கைப் பொருணயங் கருதிப் பண்டைச் சங்க நூல்களுக்குச் செல்லும் ஆர்வமும் பொய்புனைந்த கதைகளைத் தொலைத்து மெய்யுணரக்கருதி வரலாற்றாராய்ச்சியினை மேற்கொள்ளும் ஊக்கமும், விழுமிய விரிந்த பண்டைத் தமிழ் நாகரிக முறைக்கேற்பத் தமிழர் குடிவாழ்க்கையைச் சீர்திருத்திச் செம்மை செய்யும் நோக்கமும் எம்மொழிப் பொருளையும் தனித் தமிழிலே வெளிப்படுத்திப் பயன்றுய்க்க வேண்டுமென்ற உறுதியும் இற்றை ஞான்றின் நூற்றாண்டின் சிறப்பியல்புகளாம்'' என்று அவர் தம் ஆராய்ச்சிக் கட்டுரையினை முடித்திருப்பதை நோக்கலாம்.

இந்திய நாட்டு நாணயத்தில் தமிழ் மொழி எழுத்தும் இடம்பெற வேண்டுமென விடுதலை பெறுதற்குக் கால் நூற்றாண்டின் முன்னமே வலியுறுத்தியவள் 'செல்வி'. தமிழர் மணவினைச் சடங்குகள்-வழிபாடுகள்-இறுதிக்கடன் முறைகள் ஆயனவெல்லாம் தமிழாகவே இருக்க வேண்டுமெனத் தொடர்ந்து உணர்த்தியவள் செல்வி. தமிழ் நூல்களைக் கற்றுத் தெளியும் வகையில் நூன்முறை வகுத்துக் காட்டியவள் அவள். 'தமிழ் நாட்டின் ஊர்ப் பெயர்கள்' என்னும் ஒரு கட்டுரையே சான்றுக்குப் போதுமானது (சிலம்பு 22, பக்.113)

தமிழ் இலக்கியத்திற்கு ஓவிய உருக்கொடுக்க முற்பட்டவள் 'செல்வி'. இலக்கிய ஓவியக் கலைகளை இணைத்தலில் ஈடற்ற பெருமை பெற்றவள். 'செல்வி'யால் அன்றிப் பிறவகையால் அறியப் பெறாத பெருமக்கள் ஓவியங்கள் பலபல உண்மை 'செல்வி'க்கு வாய்த்த தனிச் சிறப்பாகும்.

மாகறல் கார்த்திகேய முதலியார், மறைமலையடிகளார், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் ஆகியோர் படைப்புக்கள் சொல்லாராய்ச்சி எல்லையை

விரித்துக் காட்டிய விழுமிய சொத்தாகும். 'தமிழ்ப் புலவர் வரிசை' என முப்பது நூல்கள் 'செல்வி'யில் வெளிவந்த கட்டுரைத் தாங்கல்களாகும். அவற்றுள் 770 புலவர்களின் வரலாறுகள் செறிந்துள்ளன. பொருநை நாட்டுப் புலவரென இருபத்தெண்மர் வரலாறு தனியாகக் குறிப்பிடத்தக்கது. பல்வேறு நாட்டுப் புலவர்கள் வரலாற்று வரிசை வெளிவர வித்தாயிற்று அது. 'செல்வி'யில் அடங்கும் நாட்டு வரலாறு, மொழி வரலாறு ' கட்டுரைகள் செம்மையானவை. முதல் சிலம்பின் முதல் கட்டுரையே 'தமிழகம்' பற்றிப் பண்டிதர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் எழுதிய கட்டுரைதான் அடுத்த நிலையில் 'திருநான்மறை விளக்கம்' என்னுந் தலைப்பில் கா.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் வரைந்தது. இவை மொழியும், சமயமும் இரு கண்கள் என வரையறுத்துக் கொண்ட கொள்கையின் தடங்களாம்.



## பயிற்சி மருத்துவர்கள் - பட்ட, பட்டய மேற்படிப்பு மாணவர்களுக்கு உதவித் தொகை உயர்த்தப்படுகிறது - முதலமைச்சர் ஆணை.

தமிழகத்திலுள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரிகளில் பயின்று வரும் பயிறசி மருத்துவர்கள், மருத்துவ பட்ட மற்றும் பட்டய மேற்படிப்பு மாணவர்கள் ஆகியோர், தங்களுக்கு வழங்கப்பட்டுவரும் மாத உதவித் தொகையை உயர்த்தி வழங்குமாறு, தமிழ்நாடு அரசைக் கோரி வந்தனர். அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிவுடன் ஏற்று முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள், பல்வேறு மருத்துவக் கல்வி மாணவர்களுக்கும் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகையினைப் பின்வருமாறு **உயர்த்தி வழங்கிட** ஆணையிட்டுள்ளார்.

அதாவது, பயிற்சி மருத்துவர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் மாத **உதவித் தொகை 1,550 ரூபாய் ஆகும். அதை 2,250 ரூபாய்** எனவும், அரசுப் பணியில் **இல்லாத** பட்டமேற்படிப்பு மற்றும் பட்டய மேற்படிப்பு மாணவர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் மாத உதவித் தொகை **1,600** ரூபாய் என்பதை, **2,500 ரூபாய் எனவும்,** அரசுப் பணியில் இருந்து கொண்டே மருத்துவப் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் அரை மாதச் சம்பளம் மற்றும் 72 விழுக்காடு அகவிலைப்படி என்பதை, இனி முழு மாதச் சம்பளத்துடன், முழு அகவிலைப்படியையும் சேர்த்து வழங்கிடவும் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**



இந்த ஆணையின் காரணமாக **அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 6.34 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.** இதனால் ஆண்டு தோறும் ஏறத்தாழ 1950 மாணவர்கள் பயன்பெறுவார்கள்.

மொழிபெயர்ப்பு பணி குறிக்கத்தக்கது. அப்பணி ஆத்திசூடியில் தொடங்கியது. அறிஞர் டி.பி.கிருட்டிணசாமி ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, உலகநீதி, இனியவை நாற்பது, இன்னா நாற்பது எனத் தொடர்ந்து தமிழ்நூல்களை உலக மொழியாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அதேபோல, ஆங்கில மொழிக் கருத்துக்களைத் தமிழ் வளர்ச்சிக்குத் துணையாம் வகையில் அறிஞர் பேக்கன், ஜேம்சு ஆலன், கோல்டுசிமித் ஆகியோர் கட்டுரைகளைக் கவினுறப் பெயர்த்துத் தந்தாள் செல்வி. தாகூர் பாடல்கள், கிரேக்க மெய்ப்பொருள்கள் தமிழாக்கம் செய்யப்பெற்றன. கலைச் சொல்லாக்கப் பணியும் அருமையான பங்களிப்பாகும்.

'செல்வி' தந்த 'அறிவியல் ஆய்வு' ஆழங்காற்பட்டது. 'திருவள்ளுவர் ஒரு மர நூல் பேராசிரியர்' என்னும் ஆராய்ச்சி சிறப்புடையது. சங்க இலக்கியத்தில் செடி, கொடி விளக்கம், விலங்கின விளக்கம், புள்ளின விளக்கம் வரை ஒளிகான்றது. பொருளியல் கட்டுரைகள் பொன்போற் போற்றத் தக்கவை.

'செந்தமிழ்ச்செல்வி'யின் இலக்கணத் தொண்டு ஈடு இணையற்றது.

### முத்தான மூன்று கருத்துகள்

இதழ்களின் நோக்கங்கள் பல. அவற்றுள் ஒன்று பொது மக்கள் உணர்வைப் புரிந்து அதற்குச் செய்தி வடிவம் கொடுப்பது. மற்றொரு நோக்கம் சில விரும்பத்தக்க உணர்வுகளை மக்களிடையே தோன்றச் செய்வது. மூன்றாவது பொதுமக்கள் குறைகளை அச்சமின்றி வெளியிடுவது. இந்த மூன்று முத்தான கருத்துக்களையும் 'செல்வி', திங்கள் இதழின் வழிகாட்டும் ஒளி விளக்காகக் கொண்டாள் என்பதைப் படித்துணரலாம். அவ் வகையில் 'மாணாக்கர்களுடைய வாழ்க்கையின் குறிக்கோள்' என்னுந் தலைப்பில் (The ideal of a students' life) சிந்து பூந்துறை மா.வே.நெல்லை யப்ப பிள்ளை எழுதிய கட்டுரை மாணாக்கரின் உடற்பயிற்சி, மனப் பயிற்சி, ஒழுக்கப்பயிற்சி, சமயப்பயிற்சி ஒவ்வொன்றிலும் மாணவர் அறிய வேண்டிய சில பொருள்களைத் தெளிவிப்பது இன்றைக்கும் பொருந்தும்.

'செந்தமிழ்ச் செல்வி'யின் கடந்தகால எழுபத்தொரு சிலம்புத் தொகுப்புக் களையும் ஒரு சேரப் படித்தறியும் வாய்ப்புப் பெற்றோர் பல்துறைப் பேரறிஞ ராகலாம்; வரலாற்றை-தமிழக, தமிழிலக்கிய வரலாற்றை நுணித்தறி யலாம். தமிழர்கள் வரலாற்றைத் தெளிவாக உணரமுடியும்.

காலங்காட்டும் இயல்பிற்கேற்பப் பரந்த நோக்கோடு நன்னெறி நின்றுழைத்தல் ஒன்றே நமது கடமை. அவ்வுழைப்பின் பயனைக் குறித்தா ராய்தலும் சாலும். செல்வி யினாற் பெறும் பயன் பெரிது, நிறைவுகள் நிறையவுள; குறைகள் சிலவே, அதைக் குறித்துப் பேசும் அளவிற்கு அந்த ஆழ்கடலில் மூச்சுப் பிடித்து முத் தெடுக்கவில்லை. கடலின் பரப்பைக் கண்டு களிக்கவே இயன்றது. 'கருமஞ் செய்தல் நம் கடமை, அதன் பயனைக் கோரும் பேரவாவன்று' (only actions are our duty, not the greed there of) என்னும் ரவீந்திரநாத தாகூரின் கருத்தினையும் சைவ சமயக் கருத்தின் தற்கால முடிவாக நினைவுபடுத்தியதும் 'செல்வி'தான்.

சமுதாய வளர்ச்சிக்கு, மாற்றத்திற்கு இதழியல் துணைபுரிந்து வருகின்றது.

*"காரிருள் அகத்தில் நல்ல*
*கதிரொளி நீதான், இந்தப்*
*பாரிடைத் துயில்வோர் கண்ணில்*
*பாய்ந்திடும் எழுச்சி நீதான்!*
*ஊரினை நாட்டை இந்த*
*உலகினை ஒன்று சேர்க்கப்*
*பேரறி வாளர் நெஞ்சில்*
*பிறந்த பத்திரிகைப் பெண்ணே!"*

- எனப் பாவேந்தர் பாடியிருப்பது 'செந்தமிழ்ச் செல்வி'க்கும் பொருந்து கின்றதைத் தொட்டுக்காட்டி இதனை நிறைவு செய்யலாம். ★



# "ஊனமுற்றோருக்கு உற்றுழி உதவிடப் பொதுமக்கள் தாராளமாக முன்வரவேண்டும்"

- ஊனமுற்றோர் நாளை முன்னிட்டுக் **கலைஞர்** செய்தி.

**ஊ**னமுற்றோரின் மறுவாழ்வு குறித்துச் சமுதாயத்தில் விழிப்புணர்வையும், பொறுப்புணர்வையும் வளர்க்கும் நோக்கத்துடன், ஆண்டுதோறும் டிசம்பர் 3-ஆம் நாள் உலக ஊனமுற்றோர் நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

தமிழக மக்கள் தொகையில் ஏறத்தாழ 2 விழுக்காட்டினர் பல்வேறு வகையில் உடல் ஊனம் உள்ளவர்களாக வாழ்கிறார்கள். அவர்களின் நலன் பேண வேண்டிய மிகப்பெரிய பொறுப்பும் கடமையும் நமக்கு உண்டு.

இந்த உணர்வோடு, கழக அரசு ஊனமுற்றவர் நலனில் பெரிதும் அக்கறை கொண்டு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

"முடமானோர் முன்னேற வேண்டும்; கூனர்களும் நிமிர்ந்து நடக்க வேண்டும்; செவிடர்களும் செவிப்புலன் பெற வேண்டும்'' என்ற இலட்சியத்துடன் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டத்தினை **3.6.1974** அன்று நடைமுறைப்படுத்தி-ஊனமுற்றவர்களுக்குச் சக்கர நாற்காலிகள், மூன்று சக்கர சைக்கிள்கள்-காது கேட்கும் கருவிகள், அலுமினிய ஊன்றுகோல்கள் ஆகியவற்றை வழங்கியது கழக அரசு.

மேலும் ஊனமுற்றோர்க்குத் தொழிற் பயிற்சி அளிக்கும் திட்டம், 1989-ஆம் ஆண்டில் இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்பட்டோருக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம், பார்வையற்றோரை மணக்கும் பார்வையுடையோர்க்கு வழங்கப்பட்ட உதவித் தொகை **6,000/-** ரூபாயை **10,000/-** ரூபாயாக உயர்த்தும் திட்டம், ஒரு கை அல்லது கால் இழந்தோரைத் திருமணம் செய்துகொள்வோருக்கு ரூ.5,000/- நிதி வழங்கும் திட்டம், இலவசப் பேருந்துப் பயணச் சலுகை 30 கி.மீ. என்பதை 100 கி.மீ. வரை நீட்டித்ததுடன், விரைவுப் பேருந்திலும் இலவசப் பயணச் சலுகை வழங்கும் திட்டம், கடும் உடல் ஊனமுற்றோரின் பராமரிப்புத் தொகையை உயர்த்தும் திட்டம், செயற்கை உறுப்புகள் பொருத்துவதற்கு ரூபாய் **10,000/-** வரை நிதியுதவி வழங்கும் திட்டம், **ரூ.1.38 கோடி** செலவில் மாவட்டங்கள் அனைத்திலும் ஊனமுற்றோர் மறுவாழ்வு மையம் அமைக்கும் திட்டம் - முதலிய பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி, அவற்றின் மூலம் ஊனமுற்றோர் நலனைப் பேணி வருகிறது கழக அரசு.

இப்படி அரசு வழங்கும் அளவற்ற உதவிகளுடன்-மக்களும் தம் பங்காக ஊனமுற்றோர்க்கு உற்றுழி உதவிட வேண்டும் என்பதை வலியுறுத்தும் நாள்தான் இந்த ஊனமுற்றோர் நாள். நாடு முழுவதிலும் வாழும் உடல் ஊனமுற்றோர் தம் உள்ளங்களில் நம்பிக்கையொளியூட்டும் வண்ணம் இந்த ஆண்டின் உலக ஊனமுற்றோர் நாள் நிகழ்ச்சிகள் தமிழகம் முழுவதிலும்-தமிழக மக்களின் பரிவு உணர்வைப் புலப்படுத்தும் வகையில் நிகழ்ந்திட உளமார வாழ்த்துகிறேன்.

*உலக ஊனமுற்றோர் நாளை முன்னிட்டு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் விடுத்த வாழ்த்துச் செய்தி.★*

# வாசகர் இதயம்

'குடியரசு' இதழ் பற்றிய செய்திகள் அருமையிலும் அருமை. இப்படிப்பட்ட கட்டுரைகளை அடிக்கடி வெளியிட்டால் பெரிதும் பயன்தரும்.

*- வெ.சென்றாயன்,*
*சுருப்பூர்*

இதய நோயாளிகளுக்கு 'ஆஞ்சியோகிராம்' செய்வது பற்றிய மருத்துவக் கட்டுரை, பல அரிய அறிவுரைகளை வழங்குவதாக இருந்தது. இப்படிப்பட்ட மருத்துவக் கட்டுரைகள் அடிக்கடி வரட்டும்.

*- மு.வேதபுரி,*
*கோட்டுப்பாக்கம்*

இந்திய சுதந்திரத் திருநாள் பொன்விழாவைச் சிறப்பிக்கின்ற வகையில், தமிழ்நாட்டுச் சுதந்திர வீரர்கள் பட்டியலை மாவட்ட வாரியாக அளித்துவரும் தமிழரசுக்குத் தலை வணங்குகிறேன்.

*- கா.ராஜசேகர்,*
*மங்களபுரம்*

இசைஞானி இளையராஜா, தம்முடைய 'சூரியக் குழந்தைகள்' கட்டுரையின் மூலம், தான் ஒரு கலைஞானி என்பதையும் மெய்ப்பித்திருந்தார்.

*- பூபாளம் முருகேச பாண்டியன்,*
*கரப்பாடி*

நூல்நயம் பகுதி - புத்தகம் பற்றிய மதிப்புரையாக மட்டுமல்லாமல், அப்புத்தகத்தில் என்னவெல்லாம் அடங்கியிருக்கிறது என்பதன் விளக்கவுரை போலவும் ரத்தினச் சுருக்கமாக இருக்கிறது. தொடரட்டும் இந்தப் பணி.

*- என்.சந்திரன்,*
*பரிக்கல்*

அரசின் திட்டங்களையும், அதற்கான விதிமுறைகளையும் பாமர மக்களும் அறியும்படி தந்திடும் 'தமிழரசு' வெல்க.

*-சி.சிவகோபால்,*
*இராமநாயக்கன்பாளையம்*

கடலூர் மாவட்டச் சுதந்திரப் போராட்ட வீரர்கள் பற்றிய கட்டுரையைப் படித்து மகிழ்ந்தேன். நானும் அதே கடலூரைச் சேர்ந்தவன்தான். மிகுந்த தேசபக்தி காரணமாக அப்போதெல்லாம் - தாங்கள் குறிப்பிட்டிருப்பவர்களோடு சேர்ந்து பல போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறேன். 1930ல் உலக யுத்தம் தொடங்கியபோது--யுத்த எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தேன். ரகசிய வெளியீடுகளை விநியோகித்தேன்.

இதன் காரணமாகவே, நான் என் 20ஆம் வயதில், அதாவது 1940 டிசம்பர் மாதம் 17ஆம் தேதியன்று, வாரண்ட் ஏதும் இல்லாமல், கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் ஒன்றரை யாண்டுக்காலம் பாதுகாப்புக் கைதியாக வைக்கப்பட்டிருந்தேன் என்பதை அறியவும்.

எந்த மாவட்டத் தியாகிகள் பற்றி எழுதினாலும், அதில் என் போன்ற யார் பெயரும் விடுபடாமல் பார்த்துக்கொண்டால் நல்லது.

*- எஸ்.இராதாகிருஷ்ணன்,*
*சுதந்திரப் போராட்டத் தியாகி,*
*153, வன்னியர் தெரு,*
*சூளைமேடு, சென்னை-600 094*

(அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அனுப்பப்படும் தியாகிகள் பற்றிய குறிப்புகள்தான் வெளியிடப்படுகின்றன என்பதை அறியவும் - *ஆசிரியர்*)

**'கலைஞர் இசை நாற்பது'**

ஆசிரியர் : வலசை ப.கணேசன் -
வெளியீடு : சியாமளா பதிப்பகம்,
71, தருமராஜா கோயில் தெரு,
ஆர்க்காடு-632 503

பக்கம் : 71 விலை ரூ.15.00

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** புகழ்பாடும் **கனிநிகர்** கவிதைகளின் தொகுப்பு நூல் இது.

**'மறுமலர்ச்சிக் கவிதைகள்'**

ஆசிரியர் : வலசை ப.கணேசன் -
வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், 41, பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை-600 098

பக்கம் : 69 விலை ரூ.18.00

சமுதாய நலமும் வளமும் வேண்டிப் பாடப்பட்ட பொதுக் கவிதைகளின் பெட்டகமாகத்திகழ்கிறது.

**'சமகாலத் தமிழர்களின் உறவுமுறை அமைப்பும் உறவுமுறைச் சொற்களும்'**

ஆசிரியர் : முனைவர் தா. இராபர்ட் சத்திய சோசப்

பக்கம் : 296 விலை ரூ.60.00

தமிழக உறவுமுறை அமைப்பை ஆராய்ச்சிப் பொருளாக்கி எழுதப் பட்டுள்ள அரிய நூல் இது.

**'நாட்டுப் புறவியல் : ஓர் அறிமுகம்'**

ஆசிரியர் : சு.சக்திவேல்

பக்கம் : 232 விலை ரூ.60.00

இவ்விரு நூல்களையும் வெளியிட்டோர் : தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

நாட்டுப்புறவியலைப் பற்றிய உண்மைகளை எல்லாருக்கும் விளக்கிடும் அரிய நூல்.

**'பாவேந்தர் தோட்டத்துப் பூங்குயில்கள்'**

தொகுப்பாசிரியர் : கவிஞர் இளமாறன்
வெளியீடு: மலர்க்கொடி பதிப்பகம்
ஜெ.43, பாரதிதாசன் சாலை, திருநகர்,
சென்னை-600 083

பக்கம் : 64 விலை ரூ.12.00

புரட்சிக் கவிஞரிடம் இலக்கணம் பயின்ற-அவர் வழி நடக்கின்ற கவிஞர்களின் இரும்புக் கவிதைகளின் தொகுப்பு நூலாகும் இது.




**தேவதைக் கனவு**

ஆசிரியர் : கெக்கிராவ சஹானா,
வெளியிட்டோர் : குமரன் பதிப்பகம்,
79, முதல் தெரு, குமரன் காலனி,
வடபழனி, சென்னை-600 026

பக்கம் : 208 விலை-ரூ.50.00

பதினைந்து சிறுகதைகள் அடங்கியுள்ள இந்த நூலின் ஆசிரியை யாழ்ப்பாணத்தவர் எனினும் - அங்குள்ள தமிழும், இங்குள்ள தமிழும் அவர் நடையில் கைகோத்துள்ளன. கதைகளின் கருவோ இரு சார்பு மண் வாசத்தோடும் இருக்கின்றது.

**'வணக்கத்திற்குரிய...'**

ஆசிரியர் :
கவிஞர் இராம. இராகவேந்திரன்
வெளியீடு : ஸ்ரீ சக்ரா பதிப்பகம்
8/1, கங்கையம்மன் கோயில் தெரு,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
பக்கம் : 112 விலை : ரூ.25.00

எளிய தமிழில் இயற்றப்பட்டுள்ள மரபு-சந்தக் கவிதைகள்.

**'தேமாங்கனி'**

ஆசிரியர் : வாழியூர் வே.இராசவேலன்
வெளியீடு : பேரரசு பதிப்பகம்,
வழி ஒண்ணுபுரம், தி.ச.மாவட்டம்,
பக்கம் : 112 விலை ரூ.30.00

கம்பராமாயணத்துடன் - சீவக சிந்தாமணி, நளவெண்பா, தேம்பாவணி ஆகியவற்றை ஒப்பீடு செய்கிறது இந்நூல்.

**'விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு'**

ஆசிரியர் : டாக்டர் ம.பொ.சிவஞானம்
பக்கம் : 334 விலை ரூ.85.00

அரசியல் விருப்பு வெறுப்பின்றி, விடுதலைப் போராட்ட காலத்திலும் தமிழ்த் தொண்டாற்றியோர் பலரைக் குறித்த நூல் இது.

**'தெய்வ சங்கல்பம்'**

ஆசிரியர் : ஆருத்ராபாலன்

பக்கம் : 163 விலை ரூ.30

பழங்கால வரலாறு அல்லது இதிகாசங்கள், இக்காலத்திற்கேற்றபடி இதில் எளிமைப்படுத்தி எழுதப் பட்டுள்ளன.

**'தமிழ்ப்புலவர் மரபும் பாரதி மரபும்'**

ஆசிரியர் : பெ.சு.மணி

பக்கம் : 296- விலை ரூ.55


இம் மூன்று நூல்களையும்
வெளியிட்டோர் : பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.

தமிழ்ப்புலவர் மரபிற்கும், பாரதியாரின் மரபிற்கும் இடையிலான செயற்பாடுகள் பற்றியது இந்த நூல்.

. *'இந்திரன்'*

முத்துக் குளிப்பதற்கும், கடற்பஞ்சு சேகரிப்பதற்கும், மகிழ்ச்சியாகக் கடலில் மூழ்கிப் பொழுது போக்குவதற்கும், பண்டைப் பொருட்களைத் தேடி வெளிக்கொணர்ந்து அதன் பொருட்டு மிகுந்த பொருள் ஈட்டலாம் என்ற தீய ஆசையில் கடலில் மூழ்குவதற்குப் பழகிப்போனவர்கள், கடலால் கொள்ளப்பட்ட நகரப் பகுதிகளையும் மற்றும் தரைதட்டிய கப்பல் பகுதிகளையும் கண்டறிந்து தொல்லியல் ஆய்வாளர்களிடம் தெரிவிக்கவேண்டும் என்ற எண்ணத்தை இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதற்கு முன்பாகத் தாங்கள் கடலுக்கடியில் கண்டுபிடித்த கப்பல் அழிவுகளிலிருந்தும் நகரங்களிலிருந்தும் பல விலைமதிப்பற்ற சிற்பங்கள், கலைப்பொருட்கள், மரக்கலங்கள், உலோகப்பொருட்கள் ஆகியவற்றைத் திருட்டுத்தனமாகக் கலைப்பொருட்களை வாங்கும் வணிகர்களிடம் விற்பனை செய்து, பெரும் பொருள் ஈட்டிவந்தனர்.

கடந்த 20 ஆண்டுகளில் பிரான்சில் மட்டும் கிரேக்க-ரோமானிய காலத்து கப்பல்கள் 400 கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மூன்றைத் தவிர மற்ற அனைத்தும் தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டுபிடிப்பதற்கு முன்னரே முத்துக் குளிப்போராலும், கலைப்பொருள் கொள்ளைக்காரர்களாலும் முன்னமேயே கொள்ளையடிக்கப்பட்டுவிட்டன!.



# ஆழ்கடல் அகழாய்வும் மறைந்த மாநகர் பூம்புகாரும்

- நடன. காசிநாதன்
இயக்குநர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
தமிழ்நாடு அரசு.

## அருங்காட்சியகத்தில் கப்பல்கள்

சுமார் ஒரு நூற்றாண்டுக் காலமாகத்தான் கடலடி மரபுச் சின்னங்களின் முக்கியத்துவம் உணரப்பட்டு வருகிறது. 1907ஆம் ஆண்டில் கடற்பாசியெடுப்பதற்காகக் கடலுள் சென்ற கிரேக்கர் சிலர், துனிசியக் கடற்கரையில் மாதியா என்னுமிடத்திற்கருகில் நீருக்குள் 40 மீட்டர் ஆழத்தில் மூழ்கியிருந்த கி.மு.முதல் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கப்பலைக் கண்டனர். அக் கப்பல் கி.மு.85ஆம் ஆண்டில் சல்லாபுள் தலைமையில் சென்று ஏதென்ஸ் நகரைப் பிடித்த ரோமானியக் கப்பற்படையைச் சேர்ந்ததென்பது பின்பு தெரியவந்தது. போரில் கைப்பற்றிய கோயில் தூண்கள், வெண்கலச் சிலைகள் முதலிய பொருட்களைச் சுமந்துகொண்டு ஏதென்சு நகரிலிருந்து திரும்பி வரும்போது பெரும் சூறாவளிக் காற்றில் சிக்கி நீரில் மூழ்கிவிட்டது. தொல்லியல் ஆய்வாளர்கள் பலமுறை நீருள் மூழ்கி அக்கப்பலை ஆய்ந்து பல அரிய கலைச் செல்வங்களை மீட்டு வந்தனர். அக் கலைப்பொருட்கள் துனிஸ் நகரிலுள்ள பார்டோ அரும் பொருட்காட்சிச் சாலையில் ஆறு அறைகளில் காட்சிக்கு வைக்கப்பெற்றுள்ளன. இன்னமும் ஏராளமான பொருள்கள் மீட்கப்படாமல் அக் கப்பலிலேயே உள்ளன.

தொடக்கக் காலத்தில் அஞ்சாநெஞ்சம் வாய்ந்த ஒருசில தொல்லியல் ஆய்வாளர்கள் தலைக் கவசமணிந்து முக்குளிக்கும் முறையையோ அல்லது கடற்பஞ்சு முறையையோ பயன்படுத்தி ஆழ்கடலில் மூழ்கிக் கிடக்கும் அரிய தொல்பொருட்களையும், கப்பல் அழிவுகளையும் கண்டுபிடித்தனர். இரண்டாம் உலகப்போரின் இறுதிவரை மேற்காணும் முறைகளைப் பயன்படுத்தி சுமார் பன்னிரண்டு இடங்களில் கடலில் தொல்பொருட்களைக் கண்டறிந்தனர். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஜேக்-ஒய்லவஸ் கஸ்டோ என்ற பிரெஞ்சுப் பொறியியல் வல்லுநர் ஆழ்கடலில் சுவாசிப்பதற்கு உயிர்ப்புக் குழாய்க்கலம் (*SCUBA*) கண்டுபிடித்தார். இக்கருவியின் உதவியால் கடலில் 50 மீட்டர் ஆழம் வரை மூழ்கி ஆய்வுகளை நடத்த முடிந்தது. மேலும் புரோட்டான் காந்தப் புலக்கருவி (*Proton Magneto Meter*) ஒளி, ஒலி ஊடுருவிக்கருவி (*Side Scan Sonar*) ஓசைத் துடிப்புக்கருவி (*Eco Sounder*) உலோகம் அறியும் கருவி (*Metal Detector*) ஆகிய கருவிகளும் படிப்படியாகக் கடலகழாய்வில் பயன்படுத்தப்பட்டன.

முதற்கருவியால் பூமியில் காந்தப் புலத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டறிய இயலும். இரண்டாம் கருவியால் கடல்தளத்தில் புடைத்து நிற்கும் பொருள்களைப் பக்க ஆய்வு ஒலியால் கண்டறிய முடியும். மூன்றாம் கருவியால் கடலின் அடித்தளத்துக்கு ஓசைத் துடிப்புகளை அனுப்பி மூழ்கியுள்ள பொருட்கள் மீது பட்டுத்திரும்பி வரும். நான்காம் கருவியால் கடல் தளத்தில் காணப்பெறும் உலோகப் பொருட்களை உணர இயலும்.


## வரலாற்றுச் செய்திகள்

கடந்த 50 ஆண்டுகளில் ஆழ்கடலகழாய்வு காட்டுத்தீ போல் நாட்டுக்கு நாடு பரவத் தொடங்கி விட்டது. இன்றைய நிலையில் உலகெங்கிலும் பல்லாயிரக் கணக்கான தொல்லியல் சான்றுகளும், கப்பலழிவுகளும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் சில 45,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. வேறு சில இருநூறு அல்லது முன்னூறு ஆண்டுகளுக்கு முந்தியவை. ராஸ்மோனியாவில் கற்காலத்துக் கற்சுரங்கங்களும் அமெரிக்க விடுதலைப் போரின் போது மூழ்கிய கப்பல்களும் கண்டறியப்பட்டுள்ளன.

1950களில் கண்டுபிடிக்கப்பட்ட மிகத் தொன்மையான கப்பலழிவு ஜெலிடோனியாவில் கி.மு.1200க்கு முந்தைய வெண்கலக் காலத்தில் நிகழ்ந்தது. அக்காலத்தில் கடலுக்கடியில் அறியப்பட்டுள்ள மிகத் தொன்மையான துறைமுகம் கி.மு.600ஐச் சார்ந்தது. 1960களில் வெண்கலக் காலத்துத் (கி.மு.1500) துறைமுகங்கள் கிரீஸிலும், இஸ்ரேலிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பால்டிக் கடலிலும், கிரீஸ், துருக்கி, இஸ்ரேல், அமெரிக்கா கடலோரங்களிலும் 5,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட புதிய கற்காலத்தையும் 10,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இடைக் கற்காலத்தையும் சார்ந்த வாழ்விடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. 1982ல் தென் துருக்கிக் கடலோரமுள்ள காஸ் அருகே கி.மு.14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கப்பல் கண்டுபிடிக்கப்பட்டது.

அண்மைக் காலத்தில் பழைய கற்காலத்தைச் (10,000 முதல் 45,000 ஆண்டுகள் முடிய) சார்ந்த தொல்பொருட்கள் கடலிலிருந்து வெளிக் கொணரப்பட்டுள்ளன. நில அகழாய்வு மூலம் (*Land Excavation*) தெரிய வராத பல அரிய வரலாற்றுச் செய்திகள் கடலடி கண்டுபிடிப்புகளின் மூலம் தெரிய வந்துள்ளது.. கடந்த 45,000 ஆண்டுகளில் நிகழ்ந்த மனித இனத்தின் நாகரிக வளர்ச்சியையும் பண்பாட்டு மாற்றங்களையும் நாம் அறிந்துகொள்ள மேற்காணும் கண்டுபிடிப்புகள் பெரிதும் உதவியுள்ளன. உலக அளவில் நிகழ்ந்துள்ள சில முக்கியக் கண்டுபிடிப்புகளை அறிந்துகொள்வது மிகவும் இன்றியமையாததாகும்.

1972ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் தென் இத்தாலியக் கரீபியக் கடலில் ரியாஸ் அருகில் இரு வெண்கலச் சிலைகளை ரோமானிய நீர்மூழ்குவோர் ஒருவர் கண்டுபிடித்தார். இரண்டு மீட்டர் நீளமும் 150 கிலோ எடையுமுள்ள இச்சிலைகள் ஏதென்ஸ் கலைப் பாணியின் எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. இச்சிலைகள் டெல்ஃபி ஆலயத்தை அலங் கரித்த பதினொரு சிலைகளுள் இரண்டாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. இவை கி.மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந் தவை என்று கணிக்கப் பட்டுள்ளன.



பூம்புகார்க் கடற்பகுதியில் கி.பி.18ஆம் நூற்றாண்டில், தரைதட்டிய கப்பலிலிருந்து வெளிக்கொணரப்பட்ட ஈயக்கட்டிகள், பூம்புகார் ஆழ்கடல் தொல்லியல் அகழ்வைப்பகத்தில் காட்சியில் உள்ளன.

### வெண்கல காலக் கப்பல்கள்

கடற்பஞ்சு தேடி நீருள் மூழ்கிய ஒரு இளைஞர் 1982ல் காரிப் கடற்பகுதியில் கடல்தளத்தில் தாம் கண்டறிந்த தொல்பொருட்கள் பற்றித் தொல்லியல் ஆய்வறிஞர் களிடம் தெரிவித்தார். அமெ ரிக்கத் தொல்பொருளாய்வாளர்கள் ஜார்ஜ் பாஸும், டெக்ஸாஸ் ஏ.எம்.பல்கலைக்கழகத் தொல்பொருளாய்வு நிலையத்தைச் சார்ந்த அவருடைய குழுவினரும் அப்பகுதியை உடனே ஆய்வு செய்தனர். அப்பகுதி பண்டைய வெண்கலக் காலக் கப்பல் அழிபாட்டைக் காட்டியது.

அவ் வழிபாட்டில் கிடைத்த செப்புக்கட்டிகள், கி.மு.1350ஐச் சேர்ந்த தீப்ஸிலுள்ள எகிப்திய கல்லறையில் உள்ள செப்புக் கட்டிகளைப் போன்றிருக்கின்றன. ஒரு பொத்தான் அளவுள்ள சிறு முத்திரையிலுள்ள குறிகள் பண்டைய கிரேக்க வணிகர்கள் பயன்படுத்திய குறிகள் போன்றவை. இச் சிறு முத்திரைமூலம் அக் கப்பல் எந்த நாட்டைச் சார்ந்தது என்பதை எளிதாக அறிய முடிந்தது. இக்கப்பலில் கானான், மைசீனி, சைப்ரஸ் பகுதிகளைச் சேர்ந்த பொன், மட்பாண்டக் கலங்கள், நீலவண்ணக் கண்ணாடிக் கட்டிகள் போன்றவை கிடைத்துள்ளன. இதுவரை கிடைத்துள்ள கண்ணாடிக் கட்டிகளுள் இவையே மிகத் தொன்மையானவை என்று கருதப்படுகின்றன.

சைப்ரஸில் கிரேனியா என்னும் துறைமுக நகரின் அருகில் 30 மீட்டர் ஆழத்தில் கி.மு.4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த, பொருட்கள் ஏற்றிச் செல்லும் கப்பல் தரைதட்டியிருப்பதைக் கடற்பஞ்சுக்காகக் கடலில் மூழ்குவோர் கண்டுபிடித்தனர். அக்கப்பலைப் பென்சில்வேனியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மைக்கில் எல்.காட்சேவ் தலைமையில் சென்ற குழுவினர் 1968ல் அகழ்ந்தாய்ந்தனர். இருபது ஆண்டுகள் நடைபெற்ற இவ்வாய்வின் இறுதியில் அக்கப்பல் பண்டைய கிரேக்கக் கப்பலைப் போலுள்ளது என்று அறிந்துள்ளனர். இக்கப்பலில் 400 மட்பாண்டங்கள், பிற உலோகங்கள், 10,000 பாதாம் பருப்புகள் இருந்தன என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மத்திய தரைக்கடல் பகுதியில் கி.மு.7,000 அளவிலேயே கடல் கடந்திட இயலாத பெருந்தடங்கலாக இருந்திடவில்லை என்பதை கிரிஸில் உள்ள வரலாற்றுக்கு முந்தைய காலக் குடியிருப்புகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கரும்பளிங்குப் பாறையும் மீன் எலும்புகளும் காட்டுகின்றன.



பூம்புகார்க் கடற்பகுதியில் நிகழ்ந்த ஆழ்கடல் ஆய்வினைக் காணவந்த நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஆழ்கடல் ஆராய்ச்சியாளர்கள்.

## நீரடி அருங்காட்சியகம்

கிறித்துவுக்கு முந்தைய கடைசி 200 ஆண்டுகளில் அல்லது கிறித்துவுக்குப் பிந்தைய 200 ஆண்டுகளில் ஒரு மலையின் உச்சியிலிருந்து ஒருவர் மத்திய தரைக்கடலைப் பார்க்குங்கால் நீலவானில் நட்சத்திரக் கூட்டங்களைக் காண்பதுபோல் நீலநிறக் கடலில் ஏராளமான பாய்மரக் கப்பல்கள் தவழ்ந்து செல்வதைக் கண்டிருப்பர் என்று பிரிஸ்டர் பல்கலைக்கழகத்தில் ரோமானியத் தொல் பொருளாய்வு விரிவுரையாளராக உள்ள ஆண்டனி ஜேபார்க்கர் என்பார் கூறியுள்ளார். இதன் விளைவாக மத்திய தரைக்கடல் ஒரு நீரடி அருங்காட்சியகம் என்று புகழ்ந்து பேசப்படுகிறது.

1969ல் பஹாமாவில் வடபிமில் தீவிற்கு அப்பால் கண்டுபிடிக்கப்பட்ட 'சுவர்' அல்லது 'தளம்' போன்ற பெரும் கற்பாளங்கள் வல்லுநர்களைத் திகைக்க வைத்துள்ளன. இக்கற்களை மனிதன் அமைத்தான் என்று சிலரும், இவை பாறை அருகில் அமைந்த சுண்ணாம்பு அமைப்பு என்று வேறு சிலரும் கருதுகின்றனர். 'டிமிட்ரி ரெபிகாஃப்' என்பவர் இதேபோன்ற ஒரு சுவரைக் கண்டுபிடித்து, கார்பன் 14 சோதனை மூலம் அதன் காலம் கி.மு.5,000 என்று கூறியுள்ளார். அச்சுவர் போன்றே பஹாமா சுவரும் காணப்பெறுவதால் இச்சுவர் காலமும் அதே காலத்ததாக இருக்கலாம் என்று தற்போது வல்லுநர்கள் கருதுகின்றனர்.

1982ல், கடற்பஞ்சு தேடி கடலுள் சென்ற துருக்கி மூழ்குநர் ஒருவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் டெக்ஸாசைச் சார்ந்த இன்ஸ்ட்டியூட் ஆஃப் நாட்டிகன் ஆர்க்கியாலஜியைச் சேர்ந்த குழுவினர் துருக்கிக் கடற்கரையில் ஹபுரூன் என்னுமிடத்தில் ஆய்வு செய்ததில் கி.மு.14-ஆம் நூற்றாண்டினுடைய கப்பலைக் கண்டறிந்தனர். அதிலிருந்து எகிப்திய குடங்கமன் காலத்தையும், ட்ராயின் வீழ்ச்சிக் காலத்தையும் சார்ந்த உருவச் சிலையையும், நான்கு கைப்பிடிகளுடன் கூடிய செப்புத் துண்டுகளையும், ஆயிரக்கணக்கான அரிய தொல்பொருட்களையும் கண்டறிந்தனர்.

## ஒளிப்படங்கள் உதவி


ஆழ்கடலகழாய்வில் மேலும் சில நுட்பமான தொழில் முறைகள் கையாளத் தொடங்கப்பட்டுள்ளன. வான்வழி மற்றும் துணைக்கோள் வழி உருவரைக் காட்சி பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. முன்னர் அறியப்படாதிருந்த கடற்பாறை அடுக்குகளையும், மணல் திட்டுகளையும் துணைக்கோள் வழி உருவரைக் காட்சிகள் புலப்படுத்தியுள்ளன. சில நேரங்களில் உயரத்திலிருந்து எடுக்கப்படும் ஒளிப்படங்களிலிருந்து கடலில் மூழ்கியுள்ள கப்பல்களைக் கண்டறிய முடிகிறது.

உலகின் பல பகுதிகளிலிருந்தும் இவ்வாறு பல விலை மதிப்பற்ற தொல்பொருட்களும், கப்பலழிவுகளும் கண்டுபிடித்து வருவதைக் கருத்தில் கொண்டு யுனெஸ்கோ பல முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. யுனெஸ்கோவின் புகழ்மிகு உலக மரபுச் சின்னங்களின் பட்டியலில் கடலில் காணப்பெறும் தொல்பொருளாய்வுக்குரிய பல முக்கியப் பகுதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. 1972ல் நடைபெற்ற யுனெஸ்கோ பொது மாநாடு நிறைவேற்றிய உலக மரபுச் செல்வ ஒப்பந்தப்படி, கடலுக்கு அடியில் உள்ள மரபுச் சின்னங்களும், தக்க பாதுகாப்பும் பன்னாட்டுத் தொழில் நுட்பக் கூட்டுறவும் பெறுகின்றன.




பூம்புகார்க் ஆழ்கடலில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கையில் கப்பலிலிருந்து மூழ்குநர்களின் நடமாட்டங்களைக் கண்காணிக்கும் மானிட்டர் என்னும் கருவி.

இந்தியத் துணைக் கண்டத்தில் ஆழ்கடலகழாய்வு முதன் முதலில் மேலைக் கடற்கரையான அரபிக் கடலில் குஜராத் மாநிலத்தையொட்டிய பெட் துவாரகைத் தீவுக்



மூழ்குநர் கடலில் மூழ்கி ஆய்வு செய்தல்.

கடற் பகுதியில், இறைவன் கண்ணனால் அமைக்கப் பெற்றதாகக் கூறப்பெறும் துவாரகை நகரத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சி 1983லிருந்து 1988-89 வரை ஆண்டுதோறும் டாக்டர் எஸ்.ஆர்.இராவ் அவர்களது தலைமையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் கிடைத்துள்ள பானையோடுகள், பஹரயின் கலைத் தாக்கத்தோடு கூடிய அரப்பன் கால முத்திரை, பெரிய கோட்டைச் சுவர் ஆகிய அனைத்துச் சான்றுகளையும் கொண்டு பார்க்கையில் துவாரகையில் இன்றைக்கு 17,000 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு துறைமுகப் பட்டினம் இருந்திருக்கிறது என்பது உறுதியாகியுள்ளது.

இவ்வாய்வினையொட்டி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, தமிழ்நாட்டில் சங்க காலத்தில் கடலால் கொள்ளப்பட்டது என்று இலக்கியங்கள் கூறும் சோழர்களின் தலைநகரமாகவும் துறைமுகப் பட்டினமுமாக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல் அகழாய்வு மூலம் கண்டறிய இயலுமா என்பது குறித்து ஆய்வு செய்யத் திட்டம் தீட்டியது.

### கடல்கொண்ட பூம்புகார்

முதற்கட்டமாக 1981ல், நில இயற்பியல் ஆய்வு காவிரிப்பூம்பட்டினக் கடற்பகுதியில் கரைக்காட்டுக்கும் சின்னவானகிரிக்கும் இடைப்பட்ட பகுதியில் கடற்பகுதியிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் உள்பகுதி வரை ஆய்வு செய்யப்பெற்றது. அவ்வாய்வில் கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் சில இடங்களில் சில உயரமான மேடுகள் இருப்பது கண்டறியப்பட்டது. அதனை அடிப்படையாகக் கொண்டு விரிந்த அளவில் ஆழ்கடலகழாய்வு மேற்கொள்வதற்காக முதன் முதலாக மாநில அரசு ரூ.2.2 கோடி நிதியொதுக்கி பூம்புகாரில் 1991-ஆம் ஆண்டு முதல் இதுவரை நான்கு கட்டங்களில் ஆய்வு நடைபெற்றிருக்கிறது. மேற்காணும் நான்கு கட்ட அகழாய்வு மூலம் பண்டைய பூம்புகார் கடலுள் மூழ்கியது பற்றிய கீழ்க்காணும் சில முக்கியத் தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

1. கடற்கரையிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் கடலினுள் 23 மீட்டர் ஆழத்தில் இலாட வடிவக் கட்டடத்தின் அடிப்பகுதி வடக்குப் பக்கம் வாயில் உள்ள நிலையில் கண்டறியப்பட்டுள்ளது. கட்டடத்தின் மொத்த சுற்றளவு 135 மீட்டர். சுவரின் அகலம் 4.50 மீட்டர் வரை, சுவரின் உயரம் சில இடங்களில் 1.30 மீட்டர், வேறு சில இடங்களில் 3.00 மீட்டர். நுழைவாயிலின் இடைவெளி 25 மீட்டர். இக்கட்டடம் ஒரு கோயிலாகவோ அல்லது ஒரு கோட்டைக் கொத்தளமாகவோ இருக்கலாம் என்று கூறப்படுகிறது.
2. இக்கட்டடத்துக்கு முன்பாக இரு பக்கங்களிலும் இரு கட்டடப் பகுதிகள்.
3. இக்கட்டடங்களுக்கும் தென் கிழக்கில் 50 மீட்டர் தொலைவில் மேலும் இரண்டு கட்டடப் பகுதிகள். இக்கட்டடங்கள் அனைத்தும் செம்புரால் கற்களால் கட்டப் பெற்றவை. இவை கி.மு.5-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு. 3-ஆம் நூற்றாண்டுக் காலக் கட்டத்தைச் சார்ந்தவைகளாகலாம்.
4. பண்டைய காவிரியாற்றின் போக்கு.
5. கடற்கரையையொட்டிய பகுதியில், ஒரு மீட்டர் தொலைவில் ஏழு அல்லது எட்டு மீட்டர் ஆழத்தில் விட்டு விட்டுச் சில கட்டடப் பகுதிகள். இக்கட்டடங்கள் கருங்கற்களால் கட்டப்பெற்றவை.
6. கரையையொட்டிய அலைகள் மோதும் பகுதிகளில் சில செங்கற் கட்டடங்கள் அழிபாடுற்று மண் மேடான நிலையில் காணப்படுகின்றன. இவை கி.மு.3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.3-ஆம் நூற்றாண்டு வரை உள்ளதாக இருக்கலாம்.
7. சின்னமேடு என்னும் ஊருக்கு எதிர்த்திசையில் கடலடியில் 36 அடி ஆழத்தில் ஒரு புத்தர் சிலை கிடைத்துள்ளது. இதன் காலம் கி.பி.முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டு.
8. சின்ன வானகிரிக்கு எதிர்த்திசையில் கடற்கரையிலிருந்து 4.50 கிலோமீட்டர் தொலைவில் கடலுள் மூழ்கிய கப்பல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கப்பலில் நூற்றுக்கணக்கான ஈயக்கட்டிகளும், பீரங்கி ஒன்றும், வெடிமருந்து பெட்டிகளும், கொடி மரமும், மற்றும் சில செம்புப் பொருட்களும் கண்டறியப்பட்டிருக்கின்றன. ஈயக்கட்டிகளில் ஒரு பக்கம் டபிள்யூ பிளாக்கெட் என்று ஆங்கில எழுத்திலும், மற்றொரு பக்கத்தில் 1791 அல்லது 1792 என்று எண்கள் எழுதப்பெற்று காணப்பெறுகின்றன. இவைகொண்டு, இக்கப்பல் கி.பி.18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மூழ்கியிருக்க வேண்டுமென்றும், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்றும் உணரமுடிகிறது.

மேற்காணும் நான்கு கட்ட ஆய்வின் மூலம் மறைந்த மாநகர்ப் பூம்புகாரின் பகுதிகளைச் சிறிது சிறிதாகக் கண்டறிந்துவிட முடியும் என்ற நம்பிக்கைத் துளிர்க்கிறது. தற்போது கிடைத்துள்ள தடயங்களின் மூலம் பண்டைய பூம்புகார் குறைந்தது சுமார் 100 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பெரும் நகரமாக விளங்கியிருக்கலாம் என்று கருத இடமேற்படுகிறது.

## முதலமைச்சர் தரும் ஊக்கம்

பூம்புகாா் கடற்பகுதியில் மேலும் தொடா்ந்து கடலகழாய்வு செய்வதற்குத் தமிழக முதலமைச்சா் மாண்புமிகு டாக்டா் கலைஞா் அவா்கள் மென்மேலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்துவருகிறாா்கள்.

அவா்களது அறிவுரையினாலும், தமிழ் ஆட்சிமொழி-தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சா் மாண்புமிகு முனைவா் தமிழ்க்குடிமகன் அவா்களின் வழிகாட்டுதலினாலும், தமிழ் வளா்ச்சி-பண்பாட்டுத்துறை முன்னாள் செயலா் திருமிகு வைபழனிச்சாமி,இ.ஆ.ப., அவா்களின் விடாமுயற்சியினாலும் பூம்புகாரில் சென்ற செப்டம்பா்த் திங்கள் 29ஆம் நாள் ஆழ்கடல் தொல்லியல் அகழ்வைப்பகம் ஒன்று இந்தியாவில் முதன்முதலில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வகழ்வைப்பகத்தில் கடலகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களும், கப்பலிலிருந்து வெளிக்கொணரப்பட்ட பொருட்களும், பண்டைத் தமிழகம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த பொருட்களும், வெளிநாட்டிலிருந்து தமிழகத்துக்கு இறக்குமதி செய்த பொருட்களும், தமிழகத்தில் கிடைத்துவரும் வெளிநாட்டுக் காசுகளும், மட்பாண்டங்களும் மற்றும் கைவினைப் பொருட்களும் வெளிநாட்டில் கிடைத்துவரும் தமிழகத்தினுடைய காசுகள், பெயா் பொறித்த பானையோடுகள், தமிழ் எழுத்தில் உள்ள ஆவணங்கள், கலைப்பொருட்கள் ஆகியனவும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில், பூம்புகாா் மட்டுமல்லாது இன்னும் பல பண்டையத் துறைமுகப் பகுதிகளில் ஆழ்கடல் அகழாய்வு செய்ய வேண்டியுள்ளது. மாமல்லை, தரங்கம்பாடி, நாகப்பட்டினம், கொற்கை, கன்னியாகுமரி ஆகிய பண்டைத் துறைமுகப் பட்டினங்களில் இவ்வாய்வை மேற்கொண்டால் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பல தடயங்களை நாம் கண்டுபிடிக்க முடியும்.

குறிப்பாகக் கன்னியாகுமரிக்குத் தெற்கே கடற்பகுதியில் விரிந்த அளவில் ஆய்வை மேற்கொள்வது மிக முக்கியமானதாகும். ஏனெனில் குமரிக்கண்டம் என்று ஒன்று தற்போதுள்ள கன்னியாகுமரிக்குத் தெற்கே இருந்து கடலால் கொள்ளப்பட்டது சிலம்பு மூலம் புலனாகிறது. அங்கிருந்த மதுரையில் (தென்மதுரை) முதற்சங்கம் இருந்ததாகவும், அச்சங்கத்தில் பல இலக்கியங்கள் அரங்கேற்றம் பெற்றன என்றும் இலக்கியம் மூலம் நமக்குத் தெரிய வருகிறது. அப்பகுதி கடற்கோளால் கொள்ளப்பட்ட பொழுது அங்கிருந்து கபாடபுரத்துக்குத் தலைநகா் மாற்றம் செய்யப்பட்டு, அங்கு இரண்டாம் சங்கம் அமைக்கப்பெற்றது. பின்னா் அப்பகுதியும் கடற்கோளால் அழிக்கப்பட்டபோது தற்போதுள்ள மதுரைக்கு (வடமதுரை) மக்கள் குடிபெயா்ந்து மூன்றாம் சங்கம் நிலவியதாக இறையனாா் களவியலுரை கூறுகிறது. பண்டைக் குமரிக்கண்டம் இருந்ததாகக் கருதப்பெறும் கடற்பகுதியில் நில இயல் ஆய்வு செய்த புவி இயல் வல்லுநரான ருஷ்ய நாட்டறிஞா் கொண்டா்ட்டோன் என்பவா் தற்போதுள்ள மனித இனத்தின் முன்னோடியினா் *(HOMOSAPIANS)* அப்பகுதியில் வாழ்ந்திருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளாா். அக்கருத்துக்கு மேலும் வலுவூட்டுவதாகக் குமரியையொட்டி முட்டம் என்னும் ஊா்ப்பகுதியிலிருந்து இற்றைக்குச் சுமாா் 2000 ஆண்டுகட்கு முற்பட்ட நுண்கற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டு, குமரியில் அருங்காட்சியகத் துறையில் அமைக்கப்பெற்றுள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பெற்றிருக்கின்றன.

மேலும், குமரியைச் சாா்ந்த மீனவா்கள் குமரிக்குத் தெற்கே கடலில் மீன் பிடிக்கச் செல்கையில், பல இடங்களில் சில மேடான இடங்கள் கடலில் தென்படுகின்றன என்றும்; அப்பகுதியில் தாங்கள் வலையை வீசினால் வலை அறுந்து விடுகிறது என்றும் தெவிக்கின்றனா். ஆதலால் அப்பகுதியில் கடலகழாய்வு செய்வதற்கான திட்டம் ஒன்று தமிழக அரசின் பரிசீலனையில் இருந்துவருகிறது.

இன்றைக்குக் கடலையொட்டி அமைந்திருக்கும் ஒவ்வொரு நாடும் தம் பண்டைப் பண்பாட்டுச் சிறப்பையும் நாகரிக மேம்பாட்டையும் கண்டறிய நில அகழாய்வோடு கடலகழாய்வையும் மேற்கொண்டு வருகிறது. குறிப்பாகப் பண்டைய நகரங்களைக் கண்டறிதலிலும், கடலில் மூழ்கிப்போன கப்பல்களைக் கண்டுபிடித்தலிலும் பெரிதும் ஈடுபாடு கொள்கின்றன.

பண்டைக் கப்பல் ஒன்றைக் கண்டறிந்துவிட்டால் பல நூற்றாண்டு பாரம்பரியப் பெருமையை ஒரே நேரத்தில் எளிதாக உணா்ந்துகொள்ள முடியும் என்று தொல்லியல் அறிஞா்கள் நம்புகின்றனா். ஒரு கப்பலில் அதன் வடிவமைப்புக் கலையிலிருந்து, அதில் கண்டெடுக்கப்படும் பொருட்கள் அனைத்தும் பல பண்பாட்டுச் சின்னங்கள் ஆகும் என்பது பொதுக்கருத்து. ஆதலால், மத்திய தரைக்கடல், கருங்கடல், இந்துமாக்கடல் ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான கப்பலழிவுகள் நிகழ்ந்திருக்கின்றன என்பதைக் கருத்தில் கொண்டு அவற்றுக்குத்தொல்பொருள்வேட்டைக்காரா்களாலோ அல்லது முக்குளிப்பவா்களாலோ, அல்லது மீனவா்களாலோ யாதொரு அழிவும் நிகழ்ந்துவிடாமல் தடுப்பதற்கும், கப்பலில் கண்டறியும் பொருட்கள், உலக அளவில் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதால் தக்க சட்டப் பாதுகாப்பு அளிப்பதற்கும் யுனெஸ்கோ நிறுவனம் மிகுந்த கவனம் செலுத்திவருகிறது.

இது சம்பந்தமாகத் தெளிவான சட்ட வரைவுகள் இல்லையென்று கருதப்படுகிறது. எனவே இதுபற்றி ஆழ்ந்து சிந்தித்து ஒரு நல்ல முடிவு எட்டுவதற்காக அனைத்து நாட்டு ஆழ்கடல் ஆய்வு வல்லுநா்களுக்கும், ஒரு சட்ட முன்வரைவை அண்மையில் யுனெஸ்கோ நிறுவனம் அனுப்பிவைத்துள்ளது.

ஆதலால், நிலத்தின் மீது காணப்பெறும் மரபுச் சின்னங்களைப் பாதுகாப்பது எவ்வளவு இன்றியமையாதது என்று கருதுகிறோமோ, அதேபோன்று நீரடியில் மறைந்துகிடக்கும் ஆயிரக்கணக்கான மரபுச் செல்வங்களையும் போற்றிப் பாதுகாத்திடல் நம் அனைவரின் தவிா்க்க இயலாத பெரும் கடமையாகும். ★

> அறிவு, பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கிறது இயற்கையிலேயே! இருக்கும் அறிவு தெளிவுபெற - பகுத்தறிவு பெருக கல்வி கேள்வி மிகவும் அவசியம்!
>
> - கலைஞா்

# உலகுக்கு அமைதி வேண்டும் எனும் நோக்கில் அரும்பணியாற்றிய மூதறிஞர் இராஜாஜி

**- பேரறிஞர் அண்ணா**

இராஜாஜி அவர்கள் ஒவ்வொரு பிரச்சினையையும் மிகத் தெளிவாக அறிந்து வைத்திருக்கிறார்.

திருக்குறளுக்கு அவர் உரை எழுதியிருக்கிறார். அவரது உரை தனித்தன்மை வாய்ந்தது. அந்தத் தனித் தன்மைக்குக் காரணம், அவருடைய கூர்த்த மதிதான்.

அவரது சிந்தனையும் செயலும் மார்க்க அரேலியரைப் பின்பற்றியவை ஆகும்.

இராஜாஜியைப் போன்று பெரிய நிலையை அடைந்தவர்கள் சிறிய சிக்கல்களையெல்லாம் ஒதுக்கி விடுவார்கள்.



'சிறு பொறிதான் பெரு நெருப்பாகும்' என்பதை உணர்ந்த இராஜாஜி, பிரச்சினைகளில் சிறியது - பெரியது என்ற பாகுபாடு பார்க்காமல், அவற்றைத் தீர்ப்பதற்குத் தம்முடைய கருத்தைச் செலுத்துவார்.

இராஜாஜி செய்ய வேண்டிய தொண்டுகளையும், கடமைகளையும் செய்துவிட்ட போதிலும், இப்பொழுதும் தீவிரமாகச் சிந்தனையைச் செலவிடுவதற்குக் காரணம்-தவறு ஏற்பட்டு விட்டால் அதற்குத் தாமும் உடந்தையாக இருந்துவிடக் கூடாது என்பதும், தவறை இடித்துக்காட்ட வேண்டும் என்ற உணர்வும் இருப்பதுதான்.

காலமும் உலகமும் தன்னைக் கேட்கும் என்பதால்தான், அக்கிரமத்தையும், அநீதியையும், எதிர்ப்பதில் இந்த வயதிலும் தம்மை அவர் ஒப்படைத்துக் கொண்டிருக்கிறார்.

அவருக்குப் பல எதிர்ப்புகள் ஏற்பட்ட போதிலும் கலங்குவதில்லை.

'நாம் சொன்னால் யாரும் எதிர்க்க மாட்டார்கள்' என்ற எண்ணத்தில் அவர் பிரச்சினைகளை அணுகுவது இல்லை.

### உலக அமைதிக்கு ஒப்பில்லாத் தொண்டு

நான் அவரிடத்தில் பெருமதிப்போடு கவனிப்பது யாதெனில்-மக்கள் எல்லாரையும் சிந்திக்கும்படி அவர் செய்திருக்கிறார் என்பதேயாகும்.

இதுவே, இராஜாஜி தமது வாழ்க்கையில் பெற்றுள்ள மகத்தான வெற்றிகளில் தலையாயது ஆகும்.

உலக அமைதிக்காக அவர் அயல்நாட்டுப் பயணம் மேற்கொண்டார்.

அணுக்குண்டுகளைச் செய்து குவித்து வைத்திருந்த அமெரிக்க நாடு சென்று, அந்நாட்டின் அதிபர் கென்னடியைச் சந்தித்தார்.

உலகுக்கு அமைதி வேண்டும் என்பதற்காக அந்தப் பயணத்தை மேற்கொண்டவர்-'இந்தியாவிலிருந்து சென்றவர்' என்பது இந்த நாட்டினுக்குப் பெருமைமிகு அத்தியாயமாக விளங்கும்.

இராஜாஜி ஆற்றிய பணி அத்தகையது. அந்தக் காரியத்துக்கு ஈடான பெருமை மிக்கது-அவரது வாழ்க்கை வரலாற்றிலும் வேறு இருக்க முடியாது.

உலகை மருட்டிய அணுக் குண்டுப் பிரச்சினை குறித்து அமெரிக்க ஆட்சித் தலைவரோடு அவர் பேசிவிட்டு வந்தது-உலக வரலாற்றில் இடம் பெறும்.

இந்த உலகில் ஒரு நாள் போர் நிறுத்தம் ஏற்படும். பயங்கரங்கள் நீடிக்காமல் உலகம் 'சாந்தி பூமியாக' ஆகும்.

அதற்காகப் பெருமுயற்சி எடுத்தவர்களது பெயர்களில் இராஜாஜியின் பெயர் உறுதியாக இடம் பெறும்.

இராஜாஜியின் உலக அமைதிக்கான இந்தச் சாதனைக்குக் கீழேதான் அவருடைய ஏனைய சாதனைகள் - அதாவது அவர் 'கவர்னர்-ஜெனரல்' ஆக இருந்தது-'கவர்னர்' (ஆளுநர் ஆக) இருந்தது-முதலமைச்சர் ஆக இருந்தது - சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்தது-எல்லாம் எழுதப்படும்.


அப்படிப்பட்ட மாமேதை ஒருவர் வாழ்கிற காலத்தில் நாம் வாழ்கிறோம். இந்தக் காலத்தில் நாம் பயன் பெறாவிட்டால் இனி எந்தக் காலத்திலும் நாம் பயன்பெற முடியாது.

மாமேதை ஒருவர் வாழ்ந்த நாட்களில் நாம் வாழ்கிறோம் என்பதற்கு-இதுவரை அவரால் நாம் அடைந்த பலன்களை எண்ணி, நம் நன்றியையும் அஞ்சலியையும் இந்த விழா நாளில் நாம் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம்.

*(மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 91-வது பிறந்தநாள் விழா, டாக்டர் ஏ.இலட்சுமணசாமி முதலியார் தலைமையில் 14.12.1968 அன்று சென்னையில் நிகழ்ந்தபோது முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரை).*



# தீபத்திருவிழா






தமிழ் நாட்டின் முக்கியமான பண்டிகைகளில் ஒன்று 'கார்த்திகைத் தீபம்' ஆகும். கார்த்திகைத் தீபம் என்பது விளக்குகளை ஏற்றி வழிபாடு நடத்தும் விளக்குத் திருவிழாவாகும்.

நம் நாட்டு மக்களில் பெரும்பான்மை மகளிர், அன்றாடம் விளக்கேற்றி வைப்பதைத் தமது ஒரு முக்கியக் கடமையாக, வழிவழியாகக் கருதி வருகின்றனர். மங்கள நிகழ்ச்சிகள், விழாக்கள், பண்டிகை ஆகிய முக்கிய நாட்களில் 'விளக்கேற்றும்' பணியினை முதலில் தொடங்குவது வழக்கம்.


விளக்கு ஏற்றுவதனால், இருள் நீங்கி, ஒளி பெருகும்; அதாவது வாழ்வு ஒளிமயமாகும் என்பது விளக்குகள் ஏற்றுவதன் முக்கியத் தத்துவம் என நம்பப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் வழக்கத்தில் உள்ள விளக்குகளில் 'அன்ன விளக்கு' மிகவும் புகழ் பெற்ற பழமை வாய்ந்தது.


'கார்த்திகைத் தீபம்' பண்டிகை நமது நாட்டில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளில் வசிக்கும் நம்மவர்களாலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.


பூம்புகார் விற்பனை நிலையங்களில், 'விநாயகர் சதுர்த்தி', 'கொலு' போன்ற பண்டிகைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, கண்காட்சிகள் நடத்தப்படுவது போன்று 'கார்த்திகை தீபத்தினையும்' இவ்வாண்டு, பொதுமக்களுடன் இணைந்து ஒரு புதிய விதத்தில் சிறப்பாகக்











கொண்டாடுவதற்கெனப் பூம்புகார் தனது உற்பத்தி நிலையங்களில் எண்ணற்ற வடிவங்களில், கலை அமைப்புகளுடன் பித்தளை விளக்குகளைத் தயார் செய்துள்ளது. 500க்கும் மேற்பட்ட விதவிதமான பித்தளை விளக்குகளில், அகல் விளக்கு, அன்ன விளக்கு, லட்சுமி விளக்கு, கணேஷ் விளக்கு, கருமாரி விளக்கு, தொங்கு விளக்கு, வாசமாலை, தூண்டா விளக்கு, இரத தீபம், கிளை விளக்கு போன்ற பெயருடையவை பல. இந்த ஆண்டு புதிய வரவாக 'கஜேந்திர தீபம்' மற்றும் 'கிளிக்கிளை விளக்குகள்' ஆகியவை இடம்பெற்றுள்ளன.

கார்த்திகைத் தீபத்தை முன்னிட்டு, "விளக்குகள் பண்டிகை" என்ற தனிக் கண்காட்சி, அண்ணா சாலையில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையத்தில் கண்கவர் வடிவங்களில் பித்தளை விளக்குகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மிகக் குறைந்த விலையான ரூ.6 முதல் உயர்ந்தபட்ச விலையாக ரூ.49,800 வரையில் 500 விதமான வகைகளில், ரூ.45 இலட்சம் மதிப்புள்ள பித்தளை விளக்குகள் கண்காட்சியில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன. இதில் குறிப்பிடத்தகுந்தது யாதெனில், இவ்வெழில் மிகு விளக்குகள் அனைத்துமே நம் தமிழ்நாட்டுக் கைவினைஞர்களின் எழில்மிகு கலைப்படைப்புகளாகும் என்பதே.

கார்த்திகை விளக்குக் கண்காட்சி மற்றும் விற்பனை, 28.11.97 முதல் 15.12.97 வரை நாள்தோறும் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை (ஞாயிற்றுக்கிழமை உட்பட) நடைபெறும். இக்கண்காட்சி நாட்களில், சென்னை மற்றும் பிற முக்கிய நகரங்களிலுள்ள விற்பனை நிலையங்களில், அனைத்து வகை விளக்குகளும் 10 சதவிகித தள்ளுபடிச் சலுகை விலையில் விற்பனை செய்யப்படும்.

இத்தகைய விளக்குக் கண்காட்சியின்மூலம் கடந்த ஆண்டில் மட்டும் பூம்புகார் விற்பனை நிலையத்தின் விற்பனை ரூ.9 இலட்சம் என்ற அளவில் இருந்தது, இந்த ஆண்டில் விற்பனை ரூ.12 இலட்சம் அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பூம்புகாரின் இவ்வாறான ஊக்குவிப்பின் காரணமாக - 10 ஆயிரத்திற்கும் மேலான கைவினைஞர்களின் குடும்பங்கள் பயன்பெறுகின்றன.

கண்காட்சியில் உள்ள அனைத்து விளக்குகளும், தமிழ்நாட்டில் உள்ள சிறந்த கைவினைஞர்களால் கலைநயத்துடன் உருவாக்கப்பட்டவை. இத்தகு சிறப்புக்குரிய கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் வகையிலும், இந்த விளக்குகள் கண்காட்சி நாட்களில் தரப்படும் 10% சிறப்புச் சலுகையையும் பயன்படுத்தி, இத்தகைய நம்நாட்டின் பாரம்பரியமிகுகலைச்செல்வங்களை வளர்க்க, பாதுகாத்திட விழைவோம்.



# எங்கள் ஊர்ப் பிரச்சினை



**பிரச்சினை:**

எங்கள் ஊர் ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், வெங்கம்பூர் ஊராட்சி ஒன்றியம், வடக்குப் புதுப்பாளையம் பஞ்சாயத்தைச் சேர்ந்த வடக்குப் புதுப்பாளையம் கிராமமாகும். எங்கள் கிராமத்தில் 12 வருடமாகத் தொடர்ந்து சாராயம் விற்று வருகின்றார்கள். அதனால் பல குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றனர். நாங்கள் எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும், பல மனுக்கள் கொடுத்தும், நேரில் சொல்லியும் எந்தப் பலனுமில்லை. ஆகையால் எத்தனையோ ஊர்ப்பிரச்சினைகளைத் தீர்த்து வைத்த தாங்கள் எங்கள் ஊர்ப்பிரச்சினையையும் தீர்த்து வைக்குமாறு வேண்டி விரும்பி பணிவன்புடன் இருகரம் கூப்பி கேட்டுக்கொள்கிறோம்.

*- ஊர்ப்பொதுமக்கள்,*
*வடக்குப் புதுப்பாளையம்,*
*ஈரோடு மாவட்டம்.*

**தீர்வு:**

கொடுமுடி காவல்நிலையச் சரகம் வடக்குப் புதுப்பாளையத்தில் மதுவிலக்கு வேட்டை நடத்தியதில், கள்ளச்சாராயம் விற்கும் நபர் ஒருவர் பிடிபட்டு, தண்டனையும் வழங்கப்பட்டு விட்டது. மேலும் ஆய்வு



செய்ததில், கடந்த 1995-ஆம் ஆண்டு ஈரோடு மதுவிலக்குப் பிரிவில் கள்ளச்சாராயம் விற்பவர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் இதே நபர் ஓர் ஆண்டு தண்டனையும் அனுபவித்துள்ளது தெரிந்தது. எனவே இந்த நபரைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கும்படியும், கொடுமுடி காவல்நிலைய ஆய்வாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. தற்போது வடக்குப் புதுப்பாளையத்தில் சாராய விற்பனை இல்லை. மேலும் தீவிரமாகக்

**பிரச்சினை:**

நாமக்கல் மாவட்டம், எஸ்.உடுப்பம் கிராமம், முத்தப்புடையார்பாளையம் எங்கள் ஊராகும். இங்கு சுமார் 50 குடும்பத்தார் வசித்து வருகிறோம். இங்கு ஊர்ப்பொதுப் பிரச்சினை தொடர்பாக, ஊர் இரண்டாகப் பிரிந்தது. எங்களுக்கு 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கொளத்துப் பாளையம், செங்கோடம்பாளையம், மூலக்காடு, கரடிப்பட்டி, கொசவம்பட்டி ஆகிய ஊர்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. எங்கள் ஊர் முத்தப்புடை யார்பாளையம் அருந்ததியர் தெரு மக்களாகிய (40 வீடுகள்) எங்களுக்கு இலவச மனைப்பட்டா இதுவரை கிடைக்கவில்லை. எங்களுக்கும் இலவச வீட்டுமனை கிடைத்திட வழிவகை செய்ய வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*- ஊர்ப்பொதுமக்கள், அருந்ததியர் தெரு,*
*முத்தப்புடையார்பாளையம்,*
*எஸ்.உடுப்பம் கிராமம்,*
*- நாமக்கல் மாவட்டம்.*

**தீர்வு:**

ஆதிதிராவிட நலத்துறை தனி வருவாய் ஆய்வாளர் விசாரணை செய்து, பயனாளிகள் பட்டியல் தயார் செய்து, தனியார் ஒப்பந்தம் மூலம் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*- ரோல் கும்லென் புஹ்ரில்,இ.ஆ.ப.,*
*மாவட்ட ஆட்சித் தலைவர்,*
*நாமக்கல் மாவட்டம்.*


கண்காணிப்பு செய்யப்பட்டும் வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

*- சீமா அகர்வால்,இ.கா.ப.,*
*காவல் கண்காணிப்பாளர்,*
*ஈரோடு மாவட்டம்.*

**பிரச்சினை:**

1. மேலகுப்பம்-செங்காநத்தம் இணைப்புச்சாலை பல ஆண்டுகளாக ஜல்லி சாலையாகவே இருப்பதாலும், சமீபத்தில் பெய்த மழையின் காரணமாகச் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. இதைத் தார்ச் சாலையாக அமைக்கவும், நாராயணபுரம்-மோட்ராப்பட்டி சாலை பல ஆண்டுகளாக ஜல்லி சாலையாகவே உள்ளது. இதையும் தார் சாலையாக்கவும், மோட்ராப்பட்டியிலிருந்து நத்தம் (மலைக்கிராமம்) கிராமத்திற்குச் சாலை அமைத்துக் கொடுக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

2. மேலகுப்பம்-செங்காநத்தம் சாலையில் அமைந்து உள்ள இலவம்தோப்புப் பகுதியில் சாலை, தெரு விளக்கு மற்றும் வீடுகளுக்கு மின் இணைப்பும், பொன்னி அம்மன் கோவில் பகுதியில் தெரு விளக்கும், வீடுகளுக்கு மின் இணைப்பும், மோட்டுராப்பட்டி



செல்லும் சாலையில் சாலை விளக்கும், நத்தம் கிராமத்திற்கு வீடுகளுக்கு மின் இணைப்பு மற்றும் விவசாயம் செய்வதற்கும் (பம்புசெட்) மின் இணைப்பு வழங்கவும் கேட்டுக் கொள்கிறோம்.

3. மேலகுப்பம் கிராமத்தில் சில பகுதிகளில் பொன்னிஅம்மன் கோயில் பகுதி, கொல்லைமேடு, பஜனை கோயில் பகுதி, பாளையம் மற்றும் கிராமத் தெருக்களில் இரண்டு இடங்களிலும் சேர்ந்து ஆக ஐந்து ஆழ்துளைக் கிணறுகளும், மோட்ராப்பட்டி சானார்பண்டை இரு கிராமங்களுக்கும் மேநீர் தேக்கத் தொட்டி அமைத்துக் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

4. மேலகுப்பம் ஏரிக்கு முன் உள்ள குறைந்தது 200 ஏக்கர் நிலங்கள் வருடந்தோறும் மழை வெள்ளத்தால் நீர்ப்பிடிப்பு ஏற்பட்டு, சரியான விளைச்சல் இல்லாமல் பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே, ஊராட்சியில் அமைந்துள்ள ஏரியில் தூர் எடுப்பதால் வெள்ளப் பாதிப்பு குறைவதோடு, ஏரியில் நீர்த் தேக்கம் அதிக நாட்கள் இருப்பதால், டி.சி.குப்பம், மோட்டுராப்பட்டி, சாணாரபண்டை கிராம விவசாய நிலங்களுக்கு அதிக நாட்கள் ஏரிநீர் பாய்ச்ச ஓர் அரிய வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே, ஊராட்சியில் அமைந்துள்ள ஏரியில் தூர் எடுத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலகுப்பம் கொல்லைமேடு மாவுத்துக்கால் பகுதியில் சுமார் 250 ஏக்கர் நிலம் மழை இல்லாக் காலங்களில் வறட்சியால் அதிகப் பாதிப்புக்கு உள்ளாகின்றது. எனவே, மாவுத்துக்கால் பகுதியில் ஓர் ஏரி கட்டி, பாசனத்திற்கு வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*-பெ.வினாயகமூர்த்தி, பொது செயலாளர்,*
*''உதவும் நெஞ்சங்கள்'' சமூகநலச் சேவை,*
*மேலக்குப்பம் கிராமம் & அஞ்சல், இரத்தினகிரி வழி,*
*வாலாஜா தாலுகா, வேலூர் மாவட்டம்.*

**தீர்வு:**

1. **1996-97 வரை இச்சாலை ஜல்லி சாலையாக இருந்தது. இந்த நிதியாண்டில் (1997-98) இச்சாலை ''ஜவஹர் வேலைவாய்ப்பு''த் திட்டத்தில் ரூ.5.87 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக அமைக்கத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு, ஜல்லி சேகரிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டுள்ளது. இப்பணி 31.12.97க்குள் முடிக்கப்பட்டுவிடும், எனினும் இப்பாதையில் உள்ள உள்ளூர் வாசிகளின் ஆக்கிரமிப்புகளை அகற்ற ''உதவும் நெஞ்சங்கள்'' சேவை பொதுச்செயலாளர்**

## *மாநில அரசின் நிதி ஆதாரத்தின் கீழ் இந்த ஆண்டிற்கான (1997. 98)*
## *நிதி ஒதுக்கீடு ரூ.10 கோடிக்கான திட்டங்கள்!*

- ★ *சென்னை நகருக்கான எண்ணியல் நுண்ணலை முறையிலான தொலைத் தொடர்பு அமைப்பு முறைக்காக (Digital Trunking) - ரூ.300 இலட்சம்.*
- ★ *புறக்காவல் நிலையங்களுக்கு மோட்டார் சைக்கிள் வாங்கவும், காவல் நிலையங்களுக்கு 'வாட்டர் கேன்' கருவி வாங்கவும் மற்றும் தென் மாவட்டங்களுக்கு '20 டெம்போ டிராவலர்' வண்டிகள் வாங்குவதற்காகவும் - ரூ.172.54 இலட்சம்.*
- ★ *வானொலி தகவல் அமைப்பு கட்டடம் கட்ட, பல்வழி (TDMA) அலைவரிசை அமைக்கத் தொலைத் தொடர்பு சாதனங்கள் மற்றும் 'வாக்கி டாக்கி கருவிகள்' வாங்குவதற்காக - ரூ.407.56 இலட்சம்.*
- ★ *மாவட்டத் தனிப்பிரிவு குற்றப்புலனாய்வு மற்றும் காவல் அலுவலகங்கள், ஒற்றாய்வுப் பிரிவுகள் மற்றும் திருச்சி விமான நிலையக் குடிபுகுவோர் பிரிவிற்குக் கணினிகள் (72) வாங்குவதற்காக - ரூ.63.00 இலட்சம்.*
- ★ *அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் தமிழ்த்தட்டச்சு வழங்க, திருச்சி மற்றும் ஆவடி காவல் போக்குவரத்துப் பணிமனைகளை நவீனப்படுத்த மற்றும் அனைத்து சரக அலுவலகங்களுக்கும் போட்டோ நகல் எடுக்கும் இயந்திரம் வாங்குவதற்காக - ரூ.56.90 இலட்சம்.*

*ஆக மொத்தம் - ரூ.10 கோடி*

உதவி செய்தால் மேலும் விரைவாக இப்பணியை முடிக்க இயலும்.

2. பெரும்பாலான இப்பகுதிகள் கிராம நத்தமாக மாற்றக்கூடிய நிலையில் இல்லாத, வனத்துறைக்குச் சொந்தமான இடத்தின் அருகில் உள்ள மேலக்குப்பம் மக்களால் தாங்களாகவே ஆக்கிரமிப்பு செய்து கொண்டுள்ள பகுதியாகும். இப்பகுதிகளுக்கு மின் இணைப்பு, வீடுகளுக்கு மின் இணைப்புப் பெற இவ்வீடுகளின் நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்துள்ளோர் இதுவரை தங்கள் வீடுகள் கட்டியுள்ள நிலங்களைத் தாங்கள் அனுபவித்துக் கொள்ள 'பட்டா' பெறவில்லை. மேலும் அப்பகுதிகள் பெரும்பாலானவை 'பட்டா' பெறாமலேயே ஆக்கிரமிப்புச் செய்துகொண்டுள்ளவையாகும். இந்நிலையில் வீடுகளுக்கு மின்இணைப்பு மற்றும் வீதிகளுக்கு வீதி விளக்குகள் அமைப்பது என்பவை மேற்படி பகுதி வாழ் மக்கள் தங்கள் ஆக்கிரமிப்புப் பகுதிகளுக்கு 'பட்டா' பெற்ற பின்னரே இயலும். எனினும் மலையடிவார கிராமமான 'மோட்டுரான்பட்டி' வீதிகளுக்கும், வீடுகளுக்கும் மின் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. மலைக் கிராமமான நத்தம் கிராமத்திற்குத் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. நத்தம் கிராமத்தில் அமைந்துள்ள எல்லா வீடுகளும் (சுமார் 25 வனத்துறைக்குச் சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்புச் செய்து கட்டப்பட்டு உள்ளதாலும், இந்த ஆக்கிரமிப்புகளுக்கு வீடுகள் கட்டியுள்ள நபர்கள் 'பட்டா' பெறாததால், இந்த வீடுகளுக்கு இன்னமும் மின் இணைப்பு அளிக்கப்படாமல் உள்ளது. இங்குள்ள விளை நிலங்களும் பெரும்பாலானவை 'ஆக்கிரமிப்பு' செய்யப்பட்டவையே ஆகும். பட்டா பெறாமல் உள்ளவை ஆகும். எனவே இங்குள்ள மின் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படாமலுள்ளது. ஆனால், இங்குள்ள விவசாயிகள் யாவரும் 'ஆயில்' எஞ்சின்கள் அமைத்துக்கொண்டு விவசாயம் செய்துவருகிறார்கள்.


3. பொன்னியம்மன் கோயில் பகுதி, கொல்லைமேடு பஜனைக்கோயில் பகுதி, சானார்பெண்டை, மோட்டூரான்பட்டி ஆகிய பகுதிகள் ஒவ்வொன்றும் 500 மக்கள் தொகைக்குக் குறைவானது. இந்த மக்கள் தொகைக்கு ஏற்றாற்போல் ஒவ்வொரு பகுதிக்கும் போதுமான அளவு தண்ணீர் வழங்க மக்கள் தொகைக்கு ஏற்ப 3 முதல் 2 குழாய் கைப்பம்புகள் அமைக்கப்பட்டு, போதுமான தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இப்பகுதிகளின் வீடுகள் பெரும்பாலான வீடுகள் அவரவர் வசதிக்கேற்ப அவரவர் வேளாண் நிலங்களில் கட்டப்பட்டுள்ளன. ஆனால் இப்பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த வகையில் ''மேனிலை நீர்த்தேக்கத் தொட்டி'' அமைப்பது விதிமுறைகளின்படி தற்போது இயலாததாகும்.

4. கடந்த 1996-97ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டத்தில் மேலகுப்பம் மதுரை டி.சி.குப்பம், மலையடிவார கிராமத்தில் மழைக்காலங்களில் மலையிலிருந்து வரும் காட்டாறு வெள்ள நீரைக் கட்டுப்படுத்தி விளைநிலங்கள் பாதிக்காத வகையில் ''தடுப்புச்சுவர்கள்'' கட்டப்பட்டு, வெள்ளநீர் கட்டுப்படுத்தப்பட்டு விளைநிலங்கள் பாதுகாக்கப் பட்டுள்ளது. மேலகுப்பம் ஏரி தூர் வாரும் பணி கடந்த ஆண்டு பொதுப்பணித்துறையின் மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன். மாவுத்துக்கள் பகுதி நில உரிமையாளர்கள் இப்பகுதியில் பாசன ஏரி கட்டத் தேவையான தங்களின் நிலங்களைத் தானமாகப் பெற்றுத்தர மேலகுப்பம் கிராம. "உதவும் நெஞ்சங்கள்" பொதுச் செயலாளர் உதவி செய்தால் இப்பணியை மேற்கொள்ள இயலும்.

*-எஸ்.துக்காராம், ஆணையாளர்,*
*ஆற்காடு ஊராட்சி ஒன்றியம்.*

**பிரச்சினை**

எங்கள் ஊர் வழியாகத் தமிழ்நாடு அரசு பேருந்துகள் தடம் எண் டி-79, 58-டீ, 58-ஈ ஆகிய பேருந்துகள் செல்கின்றன. இந்த மூன்று பேருந்துகளுமே சரிவர இயங்குவதில்லை. எந்த நேரத்தில் எந்தப் பேருந்து வரும் போகும் என்று சொல்லமுடியாது. சில நாட்களில் ஒரு




பேருந்து ஒரு நாளைக்கு ஒரு தடவை வந்து, அதோடு நின்று விடும். கேட்டால் ரோடு சரியில்லை என்ற பதில்தான் வரும். எனவே, ரோட்டைச் சரிசெய்து பேருந்துகள் சரியாக இயங்க ஆவன செய்யும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*- சி.குணசுந்தரி,தலைவர்,*
*அதிதங்கிகாவனூர் ஊராட்சி மன்றம்,*
*வெங்கல் அஞ்சல்,*
*ஊத்துக்கோட்டை வட்டம்,*
*திருவள்ளூர் மாவட்டம்.*

**தீர்வு**

தடம் எண் 58-டீ, 58-ஈ, டி-79 ஆகிய பேருந்துகள் நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணைப்படி இயக்கத் தக்க நடவடிக்கை எடுத்து இயக்கப்பட்டு வருகிறது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

*பொது மேலாளர் (இயக்கம்)*
*தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்*
*(விழுப்புரம்-கோட்டம் 3), காஞ்சிபுரம்.*



தோழமைதான்
சமத்துவத்தின் கனி;
சமதர்ம மணம்; இதைக்
காணவேண்டுமானால்,
சாதி தொலையவேண்டும்!

**- அறிஞர் அண்ணா**

## இராமநாதபுரம் மாவட்டம்:

# கமுதி, முதுகுளத்தூர் ஆகிய பகுதிகளில் ஆண்டாண்டுகளாக வறண்டு கிடந்த 22,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற ரூ.7½ கோடி நிதி ஒதுக்கி

## முதலமைச்சர் கலைஞர் ஆணை.



தமிழ்நாட்டில், வறட்சியால் பாதிக்கப்படும் மாவட்டங்களில் ஒன்றான இராமநாதபுரம் மாவட்டநீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றிய ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களால் 27.11.97 அன்று நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், தலைமைச் செயலாளர், பொதுப்பணித்துறைச் செயலாளர், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஆனந்த், இ.ஆ.ப., மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் குண்டாறு நதியிலிருந்து பிரியும் ரகுநாத காவேரி ஆங்கிலேயர்காலத்திற்கு முன் மன்னர் காலத்தில் வெட்டப்பட்டது. கடைசியாக 1962ல் புதுப்பிக்கப்பட்டது. அதன் பிறகு கடந்த 35 ஆண்டுகளாக முறையாகப் பராமரிக்கப் படவில்லை.

அதுபோன்றே ஆங்கிலேய ஆட்சிக்கு முன்பு சேதுபதி மன்னரால் நாராயண காவேரி வெட்டப்பட்டது. 1975-76ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டது. இருப்பினும், தேவையான அளவுக்குப் பணிகள் நிறைவு செய்யப்படாததால் பயனற்ற நிலையிலேயே 15 ஆண்டுகளாக இருந்து வந்தது.

115 ஆண்டுகளுக்கு முன் வெட்டப்பட்ட சங்கரத்தேவன் கால்வாய் 1976ஆம் ஆண்டில் ஒரு பகுதி மட்டும் புதுப்பிக்கப்பட்டது. ஏனைய பகுதிகள் புதுப்பிக்கப்படாமல் அரைகுறை நிலையில் விடுபட்டு முழுப்பயனும் எய்திடவில்லை.

1957ல் கட்டப்பட்ட கமுதி ரெகுலேட்டர் புதுப்பிக்கப்படாத நிலையில் உள்ளது. 1975-76ல் கட்டிய மண்டல மாணிக்கம் அணையின் நிலையும் இதுதான்.முறையாகப்பராமரிக்காததால் பயனற்ற நிலையில் உள்ளது.

நாராயணகாவேரி வாய்க்கால், ரகுநாதகாவேரி வாய்க்கால், சங்கரத் தேவன் வாய்க்கால ஆகியவை சீர்செய்தால், இராமநாதபுர மாவட்டம் நீர்ப்பாசன வசதிபெற்று, மக்கள் பெரிதும் பயன்பெறுவர் எனக் கருதப்பட்டது. எனவே இவ்வாய்க்கால்களைச் சீர்செய்ய ரூ.7 கோடி 40 இலட்சம் உடனடியாக ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்.

நாராயணகாவேரி வாய்க்கால் மற்றும் அது சம்பந்தப்பட்ட அணைக்கட்டு 'மண்டலமாணிக்க அணைக்கட்டு' ஆகியவற்றைச் சீரமைக்கும் பணிக்காக ரூ.5.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ரகுநாதகாவேரி வாய்க்கால் மற்றும் அது சம்பந்தப்பட்ட ரெகுலேட்டர் 'கமுதி ரெகுலேட்டர்' பணிக்காக ரூ.1.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சங்கரத் தேவன் அணைக்கட்டு, வாய்க்கால் சீரமைக்க ரூ.55 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்போது பெய்துள்ள பெரும் மழையின் பயன், இம்மாவட்டத்திற்குக் கொஞ்சமும் கிட்டாத நிலையில் இப்பணிகளை உடனடியாக மேற்கொண்டு முடிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவருக்கு **முதலமைச்சர்** நேரடியாக ஆணையிட்டுள்ளார்.

இதன் மூலம் இராமநாதபுரம் மாவட்டம் கமுதி, முதுகுளத்தூர் ஆகிய பகுதிகளிலுள்ள சுமார் 110 ஏரிகளுக்கு நல்ல முறையில் தண்ணீர் கிடைக்கும்; இதனால் சுமார் 22,000 ஏக்கர் நிலம் பாசன வசதி மற்றும் குடிநீர் வசதி பெறும். குடிநீர் தட்டுப்பாடே இல்லாத நிலை ஏற்படும். ★

---

## மூன்று புதிய வட்டங்கள் உதயம்: அரசு ஆணை

நீலகிரி மாவட்டம், தற்போது உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, கூடலூர் ஆகிய நான்கு வட்டங்களைக் கொண்டுள்ளது. பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப நிர்வாக வசதியை மேம்படுத்தும் பொருட்டு, உதகமண்டலம் வட்டம் மற்றும் கூடலூர் வட்டம் ஆகியவைகளைப் பிரித்து, புதிய வட்டங்களைத் தோற்றுவிக்குமாறு பொது மக்களிடமிருந்தும், சட்டப்பேரவை உறுப்பினர்களிடமிருந்தும் ஏற்கெனவே கோரிக்கைகள் பெறப்பட்டு, அரசால் பரிசீலனை செய்யப்பட்டது.

அதேபோல் நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் வட்டத்திலுள்ள **திருக்குவளை** கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு தனி வட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்ற பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர்.

சட்டசபையில் மாவட்ட நிர்வாகம் குறித்த மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில், நீலகிரி மாவட்டம் உதகமண்டலம் வட்டத்தைப் பிரித்து **குந்தா என்ற புதிய வட்டமும்**, கூடலூர் வட்டத்தைப் பிரித்து பந்தலூர் என்ற புதிய வட்டமும் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவின்பேரில் உதகமண்டலம் வட்டத்தைப் பிரித்து குந்தா வட்டம் என்ற வட்டமும், கூடலூர் வட்டத்தைப் பிரித்து **பந்தலூர்** வட்டம் என்ற புதிய வட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது.

இதுபோன்றே கீழ்வேளூர் வட்டத்தைப் பிரித்து **திருக்குவளையைத்** தலைமையிடமாகக் கொண்டு, புதிய வட்டம் ஒன்றை உருவாக்கிடவும் **கலைஞர்** அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

# உலக சாதனை படைத்துள்ளது கிணத்துக்கடவு இரத்த தான முகாம்!



கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த கிணத்துக்கடவில் நடைபெற்ற கூட்டுறவு வாரவிழா, உலக சாதனை படைப்பதாக அமைந்தது!

44வது அனைத்திந்தியக் கூட்டுறவு வாரவிழாவை முன்னிட்டு-கிணத்துக்கடவு அரிமா சங்கம், பொள்ளாச்சி ஊரகம், பொள்ளாச்சி பிரின்ஸ், கோவை காஸ்மாஸ், கோவை இரத்ததானக் கழகம், இரத்ததானம் வழங்குவோர் சங்கம் ஆகியவை இணைந்து கிணத்துக்கடவு ஜே.எம்.எம். மகாலில் நடத்திய இரத்ததான முகாம், உலக சாதனை படைப்பதாக இருந்தது!.

19.7.97ல் நடைபெற்ற இந்த இரத்ததான முகாமை மாண்புமிகு கூட்டுறவு மற்றும் உணவு அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் துவக்கிவைத்தார்.

இதற்கு முன்பு ஒரே முகாமில் 1132 யூனிட் இரத்தம் பெறப்பட்டது - உலக சாதனையாக அறியப்படுகிறது; இச்சாதனையை முறியடித்து, புதியதொரு மாபெரும் சாதனையைப் படைத்திருக்கிறது இந்த இரத்ததான முகாம்; இம்முகாமில் 1,357 யூனிட் இரத்தம் பெறப்பட்டுள்ளது! முதல் நபராக அங்கே சட்டப் பேரவை உறுப்பினர் திரு எம்.சண்முகம் அவர்கள் இரத்ததானம் செய்தார்.

கோவையில் உள்ள அரசு மருத்துவமனை, கோவை மருத்துவனை, ஷீலா மருத்துவமனை, பி.எஸ்.ஜி.மெடிக்கல் சென்டர், ஸ்ரீஇராமகிருஷ்ணா மருத்துவமனை இரத்ததான வங்கிகள் ஆகியவற்றின் மருத்துவர் குழுவினரும், செவிலியரும் இரத்தம் பெறும் பணியில் ஈடுபட்டார்கள். கோவை, உடுமலை, பொள்ளாச்சி, காரமடை, கிணத்துக்கடவு தொகுதியின் மக்களும், மாணாக்கர்களும், அரசு ஊழியர்களும் இந்த இரத்ததான முகாமில் பெருமளவில் கலந்துகொண்டார்கள்.

*ஆசிரியரும் வெளியிடுபவரும் : ரா. சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.*
*சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.*
*தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906*



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.


கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



# கலைஞர் அரசு

## காவலர்களின் காவலன்



# கலைஞர் அரசு

## - 'காவலர்களின் காவலன்'

*மாண்புமிகு முதலமைச்சர்* **கலைஞர்** *அவர்கள்*
*14-12-97 அன்று, சென்னை-சாஸ்திரிநகர் காவல்நிலையப்*
*புதிய கட்டடத்தைத் திறந்துவைத்து ஆற்றிய உரை*
*மற்றும்*
*காவல்துறையினருக்குக்* **கலைஞர்** *அரசால்*
*அளிக்கப்பட்ட சலுகைகள், அடிப்படை வசதிகள் -* **மேம்பாடு,**
**நவீனமயமாக்கல் ஆகியவற்றின் தொகுப்பு.**

*வெளியீடு:*
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

சிறப்பு வெளியீடு எண் : 7

# கலைஞர் அரசு
## - 'காவலர்களின் காவலன்'

'தமிழரசு' இலவச வெளியீடு

15-12-1997

*வெளியிடுபவர்:*
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

தமிழரசு அச்சகம்,
சென்னை-600 002.

# காவலர்கள் என்றென்றைக்கும் எங்கள் நண்பர்களே

- முதலமைச்சர் கலைஞர்

**சா**ஸ்திரி நகர் காவல் நிலையத்தைத் திறந்து வைக்கின்ற இந்த இனிய வைபவத்தில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இங்கே தம்பி பாலு பேசும்போது, மதச் சார்பற்ற நிலையை நாடி இந்த நாடும், நாட்டில் இயங்குகிற பல்வேறு அரசியல் இயக்கங்களும், சமுதாய இயக்கங்களும், இயக்கங்களில் ஈடுபடாத ஆன்றோர்களும், சான்றோர்களும் இருக்கின்ற நிலையை எடுத்துக் கூறினார்.

இந்த மேடையிலேயே இஸ்லாமிய சமுதாயத்து நண்பர் ஒருவரும், இந்து மதத்தைச் சேர்ந்த பெரியவர் ஒருவரும், கிறித்துவ சமுதாயத்தைச் சேர்ந்த பேராயர் ஒருவரும் எனக்கு வரிசையாக வந்து சால்வைகள் அணிவித்ததை அவர் உதாரணமாக எடுத்துச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டார். அவர்கள் மேடைக்குத் தனித்தனியாக வந்தது மாத்திரமல்ல, நான் எதிரே பார்க்கிறேன்; வந்தவர்கள் மூவருமே ஒன்றாக ஒரே வரிசையிலே இந்தப் பந்தலிலே அமர்ந்திருக்கிறார்கள்.

பந்தலிலே மாத்திரமல்ல, பாரதத் திருநாடு முழுதும் இந்தக் காட்சியைக் காணத்தான் நான் விரும்புகிறேன். நாட்டிலே உள்ள நல்லவர்கள் எல்லாம் இந்தக் காட்சிக்காகத்தான் காத்துக் கிடக்கிறார்கள். சிறுபான்மைச் சமுதாயத்தினர், பெரும்பான்மைச் சமுதாயத்தை மதித்துச் செல்ல வேண்டும் என்பதையும், பெரும்பான்மைச் சமுதாயத்தினர் சிறுபான்மை சமுதாயத்தை அரவணைத்துச் செல்லவேண்டும் என்பதையும் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்ற ஒரு இயக்கத்தின் தலைமைப் பொறுப்பிலே இருப்பவன் என்கின்ற முறையிலும், அந்த இயக்கம் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தால் அந்தப் பொறுப்பையும் நிறைவேற்ற வேண்டியவன் என்ற முறையிலும் அரசே இந்தக் காரியங்களை எடுத்துச் செய்ய வேண்டும் என்றில்லாமல்

சமுதாயத்துப் பெருமக்கள் அவர்களாகவே இந்த அமைதி வழியை விதைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்; அதற்குக் காவல் துறை கண்டிப்பாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும்; அதைப் போல காவல்துறைக்கும் அவர்கள் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்ற செய்தியை இந்தக் கட்டடத் திறப்பு விழாவின்போது நான் வெளியிட விரும்புகிறேன்.

## ஆறும் உடையவன் அரசருள் ஏறு!

காவல்துறை ஒரு நாட்டிற்கு எவ்வளவு முக்கியமானது என்பதைத் தம்பி துரைமுருகன் இங்கே எடுத்துக் காட்டினார். வள்ளுவரின் குறளில் அரசன் தலைசிறந்தவனாக இருக்கிறான் என்றால், அவன் எந்த நிலையிலே இருந்தால் அரசர்களில் தலையானவனாக இருப்பான் என்பதைச் சொல்ல வரும்போது - வள்ளுவர் கூறுகிறார். "படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும் உடையவன் அரசருள் ஏறு" என்று குறிப்பிடுகிறார்.

படை, குடி - குடி என்றால் குடிமக்கள், வேறுபொருள் கொள்ளக் கூடாது என்று மாலை நேரத்தில் சில நண்பர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, கூழ் - செல்வம் அல்லது உணவு, அமைச்சு, நட்பு, அரண் இந்த ஆறும் உடையவன்தான் அரசர்களிலேயே தலையாயவன் என்றார், வள்ளுவர்.

அன்று அரசர்கள் இருந்தார்கள், இப்போது அரசர்கள் இல்லை; அரசுகள் இருக்கின்றன. அரசுகளிலே தலையாய அரசு என்றால் - இந்த ஆறும் உடைய அரசாக இருக்க வேண்டும். இந்த ஆறில் வள்ளுவர் முதலிலே வைத்திருப்பது படையைத்தான். அந்தக் காலத்திலேயே-2000 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு நாடு வலிமையாக இருக்க வேண்டுமானால், வலிமையாக இருந்தால்தான் பிறகு அங்கே உருவாகின்ற வளத்தைக் காப்பாற்ற முடியும்; அங்கேயிருக்கின்ற மக்களைக் காப்பாற்ற முடியும்; அமைச்சர்கள் உருவாக முடியும். பிறகு அந்த நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும் நட்பு உருவாக முடியும்; அரண் காப்பாற்றப்பட முடியும் - இவைகளை எல்லாம் வைத்துத்தான் முதல் நிலையிலே வள்ளுவர் படையை

முதலாவதாக வைத்து - படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் இந்த ஆறும் உடையவன் அரசருள் ஏறு - என்று குறிப்பிட்டார். அந்தப் படை எப்படி இருக்க வேண்டும் என்பதனை இங்கே எனக்கு முன்னால் பேசிய உள்துறைச் செயலாளர் திரு. பூரணலிங்கம் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

## நான் காவலர்களின் காவலன்:

காவலர்களிடத்திலே எனக்கு இன்று நேற்றல்ல, நான் காவல்துறைக்கு இன்றைக்குப் பொறுப்பேற்றுள்ள முதலமைச்சர் என்ற காரணத்தினால் மாத்திரமல்ல - இந்தப் பொறுப்புக்கள் எல்லாம் வராததற்கு முன்பே - காவல்துறை நண்பர்களுக்காக - எதிர்க்கட்சிக்காரனாக இருந்தபோதே வாதாடியவன்; அவர்களுக்காகப் போராடியவன். பொதுவாக எதிர்க்கட்சி என்றால், காவலர்களை எதிர்த்துப் போராடுவார்கள். காவலர்களைக் குறை சொல்வார்கள்; காவலர்கள் மீது பழி சுமத்துவார்கள், காவலர்களைக் குற்றஞ்சாட்டுவார்கள். இது வெள்ளைக்காரன் காலத்திலிருந்து இந்திய நாட்டில் காவலர்கள் என்றாலே ஒரு இழுக்கு, ஒரு இழிமொழி, ஒரு கேவலம், ஒரு ஏளனம், ஒரு எள்ளி நகையாடல் - இப்படித் தூற்றப்பட்ட ஒரு இலாகாவாக இந்த இலாகா இருந்தது உண்டு. இன்றைக்கும் அரசியல் கட்சிகள் பல கட்சிகள் எதற்கெடுத்தாலும் காவல்துறை மீது பழி சுமத்துவதை நாம் பார்த்திருக்கிறோம்.

நான் எதிர்க்கட்சியாக இருந்த அந்த காலத்திலேயே எதிர்க்கட்சி என்கின்ற தகுதியைப் பெறாமல் எதிர்க் கட்சிகளிலே ஒரு கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையில் இருந்த அந்தக் காலத்திலேயே - குறிப்பாக 1960களில் அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் இந்த இயக்கத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த அந்தக் காலக்கட்டத்தில், மக்களிடத்திலே சில கொள்கைகளைப் பரப்புவதற்காக எழுதி நடித்த நாடகங்களில் ஒரு நாடகம் உதயசூரியன் என்ற நாடகம். அந்த நாடகத்திலே பல காட்சிகளில் நான் காவல்துறை நண்பர்களுக்காக வாதாடியிருக்கிறேன். காவல்துறையில் இருக்கின்ற நண்பர்கள், காவலர்கள் - அதிகாரிகள் கூட அல்ல, சாதாரண நிலையிலே இருக்கின்ற கான்ஸ்டபிள் என்று அழைக்கப்படுகின்ற காவலர்கள் எந்த அளவிற்குத்

தங்களுடைய வாழ்க்கையை நகர்த்த வேண்டியிருந்தது என்பதையெல்லாம் அந்த நாடகத்திலே நான் எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

அலுத்துச் சலித்து இரவு 11 மணிக்கோ 12 மணிக்கோ காவலர் இல்லத்திற்கு வருவார். வந்து சாப்பிட ஏதாவது இருக்கிறதா என்பார். என்ன இருக்கிறது என்று சொல்லிவிட்டு, - பழைய சாதம்தான் இருக்கிறது என்று - பழைய சாதத்தைப் பிழிந்து ஒரு தட்டிலே வைத்து - இதுதான் என்று துணைவியார் காட்டுவார். பக்கத்திலே உட்கார்ந்துகொண்டு, கணவன்-காவலர் தொட்டுக் கொள்ள ஒன்றும் இல்லையா என்பார். "நான்தான் இருக்கிறேன்.. வேறு யாரும் இல்லை" என்று அந்த அம்மாள் வேடிக்கையாகச் சொல்வார். ஆனால், எவ்வளவு வேதனையான கருத்தை வேடிக்கையாக அந்த நாடகத்திலே நான் புகுத்தினேன் என்பது அதைத் தடை செய்த பிறகுதான் மற்றவர்களுக்கெல்லாம் தெரிந்தது.

அதிலே ஒரு பாடல்கூட எழுதியிருந்தேன். அப்போதெல்லாம் காவல்துறையிலே காவலர்களுக்கு 75 ரூபாய், 80 ரூபாய்தான் மாதச் சம்பளம். அதை வைத்து - காவலரின் துணைவியார் தன் குழந்தையைத் தாலாட்டுவதைப் போலவும் - அப்படித் தாலாட்டுகின்ற நேரத்தில் பாடுவதைப் போலவும் அந்தப் பாட்டை எழுதியிருந்தேன்.

நானே எழுதி, நானே நடித்த நாடகம் உதயசூரியன். அந்தப் பாட்டில் "போலீஸ் வேலைக்கென்று போகின்ற நொப்பனுக்கு உன்னைப் போல நாலு வந்து பிறந்து விட்டால் காவி உடை வேண்டுமடா, கமண்டலமும் தேவையடா, போலீஸ்காரனுக்குப் புத்திரனாய் வந்துதித்த தரித்திரமே கண் வளராய்"- என்று அவள் பாடுவாள். இப்படிப் பாடப்பட்ட - தாலாட்டு அடங்கிய அந்த நாடகம் அந்தக் காலத்து ஆட்சியிலே - எந்த ஆட்சி என்று நான் சொல்ல விரும்பவில்லை. 1967க்கு முன்பிருந்த ஆட்சியிலே தடை செய்யப்பட்டது. உதயசூரியன் நாடகத்திற்குத் தடை! நாடகத்தை மேடையிலே நடிப்பதற்கு மாத்திரம் தடை இல்லை. உதய சூரியன் நாடகப் புத்தகத்திற்கே தடை போடப்பட்டது. 1962ஆம் ஆண்டு நான் தஞ்சைத் தொகுதியிலே வெற்றி பெற்று சட்டமன்றத்திலே எதிர்க்கட்சித் துணைத் தலைவனாக அமர்ந்திருந்தபோது இதைச் சொல்லி, இந்த நாடகத்தை ஏன் தடை செய்ய வேண்டுமென்று அன்றைய முதலமைச்சரை நான் கேட்டேன்.

அவர் சொன்னார், "நீங்கள் போலீஸ்காரர்களைத் தூண்டிவிடுகிறீர்கள். அதனால்தான் அந்த நாடகத்தைத் தடை செய்தோம்" என்று சொன்னார். எது தூண்டுதல் என்று கேட்டுவிட்டு நான் எழுதிய அதே தாலாட்டுப் பாடலைச் சட்டசபையில் ஒரு முறை பாடிக்காட்டி, இதில் தடை செய்வதற்கு என்ன இருக்கிறது என்று கேட்டு - தடை செய்யப்பட்ட அந்தப் பாட்டைச் சட்டமன்றப் பதிவேட்டிலே எப்படியோ அன்றைக்குப் பதிவு செய்தேன். இது ஒரு நிகழ்ச்சி. ஆனால், தடைசெய்யப்பட்ட நாடகம், பிறகு 1967இல் அண்ணா தலைமையிலே ஆட்சி அமைந்து, அதற்குப் பிறகுதான் தடை நீக்கப்பட்டது.

## காவலர்களுக்காக அவர்தம் குறை களைய முதன் முதல் போலீஸ் கமிஷன்:

இதைச் சொல்வதற்குக் காரணம் பாட்டு எழுதியதோடு மாத்திரமல்ல, 69-இல் அண்ணா அவர்களின் மறைவிற்கு பிறகு நான் ஆட்சிப் பொறுப்பேற்றதும், முதன்முதல் செய்த பணி-கோபாலசாமி அய்யங்கார் ஐ.சி.எஸ்., அவர்கள் தலைமையில் இந்தியாவிலேயே ஒரு மாநில அரசு காவல் துறைக்காக ஒரு தனி கமிஷன் நியமித்தது என்றால், தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான், அந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டது.

இந்தியாவில் ஒரு மாநில அரசு போலீஸ் கமிஷன் நியமித்தது என்று அதுவரையில் சரித்திரமே கிடையாது. 1969க்கு பிறகுதான் போலீஸ் கமிஷன் அமைத்து, அதனுடைய பரிந்துரைகளைப் பெற்று நிறைவேற்றியதும் நான் பொறுப்பிலே இருந்தபோதுதான். அதற்கு முன்பு 75 ரூபாய், 80 ரூபாய் என்று மாதாந்திரச் சம்பளம் பெற்றுக்கொண்டிருந்த காவலர்கள் அந்தக் கமிஷனின் பரிந்துரைக்குப் பிறகுதான், மாதம் 200 ரூபாய், 250 ரூபாய் என்கின்ற அளவிற்கு ஊதியம் பெறுகின்ற நிலையை எய்தினார்கள். இன்று அந்த ஊதியம் அதிக அளவிற்கு உயர்ந்து போயிருக்கின்றது.

அதற்குப் பிறகும் கூட 1989-90ஆம் ஆண்டுகளில் மீண்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற பிறகுதான்

மீண்டும் ஒரு போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு அதனுடைய பரிந்துரைகளில் 90 சதவிகிதம் நிறைவேற்றியதும் கழக ஆட்சிதான்.

**உங்கள் நண்பன்:**

இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் காவல்துறை பற்றி ஏற்கெனவே ஒரு படம் "உங்கள் நண்பன்" என்று எடுக்கப்பட்டது. நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்வேன். என்றைக்கும் காவல்துறை எங்கள் நண்பனாகத்தான் இருந்திருக்கின்றது; இருக்க வேண்டும் என்கின்ற அந்த உணர்வோடுதான் நான் இதைச் சொல்கிறேன்.

## தேவைகளைத் தெரிந்து கொள்ள ஆய்வு:

இப்போது கூட உள்துறைச் செயலாளர் குறிப்பிட்டதைப் போல - காவல்துறையின் தலைவர் பொறுப்பை திரு. சர்மா அவர்கள் ஏற்றுக் கொண்டதும், அவரை நான் அழைத்துப் பேசியபோது, அவருக்கு விடுத்த வேண்டுகோள் - அதை அவர் ஆணையாக எடுத்துக் கொள்ளலாம் - ஆணையிட்டு எனக்குப் பழக்கமில்லை - இருக்கின்ற பதவியின் காரணமாக நான் விடுக்கின்ற வேண்டுகோள், ஆணையாக மாறக்கூடும். நான் விடுத்த வேண்டுகோள் ஒவ்வொரு காவல்துறையின் குடியிருப்புகளுக்கும் சென்று ஒவ்வொரு நகரத்திலும் - எல்லா மாவட்டங்களிலும் உள்ள காவல்துறையினரின் குடியிருப்புகளுக்குச் சென்று அவர்களுடைய தேவைகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்கின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். எல்லா இடங்களுக்கும் நீங்கள் செல்ல முடியாவிட்டாலும், ஆங்காங்கு இருக்கின்ற மாவட்டக் காவல்துறை அதிகாரிகள் மூலமாக அந்த ஆய்வை நடத்தச்சொல்லி அவர்களுடைய தேவைகளையெல்லாம் உடனடியாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுங்கள் என்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

அவர்களுடைய கோரிக்கைகள் பலவற்றை நிறைவேற்றியிருக்கிறோம். குறிப்பாகத் தனியாக அவர்கள் மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்கின்ற அந்த ஏற்பாடு அவர்களுக்குத் தேவை என்று சொன்னபோது - மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி அவர்களின்

துணையோடு அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு இன்றைக்கு அது நடைமுறையில் இருந்து வருகின்றது.

**தாராளமான நிதி - ஏராளமான திட்டங்கள்:**

முழுமையாக அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்றாலும் கூட, நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புவதெல்லாம் உள்துறைச் செயலாளரே சொன்னார். தாராளமாக நிதி வழங்கப்படுகிறது, ஏராளமான திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன, அதற்காக எங்களிடம் பணம் அதிகம் இருக்கிறது. ஆனால் பணிகளைத்தான் விரைவாகச் செய்ய முடியவில்லை என்பதைச் சூசகமாக அவர் இங்கே எடுத்துச் சொன்னார். பணிகளை நீங்கள் விரைவாக முடிக்க முடிக்க எவ்வளவு பணம் வேண்டுமானாலும், நாட்டைக் காப்பாற்றுகின்ற - சமுதாயத்தைக் காப்பாற்றுகின்ற - மக்களைக் காப்பாற்றுகின்ற - மக்களுடைய உயிர் உடைமைகளைக் காப்பாற்றுகின்ற - முதல் சேவகனாக இருக்கின்ற காவல்துறைக்கு எவ்வளவு செலவழிக்கவும் இந்த அரசு தயாராக இருக்கின்றது. அவர்களுடைய நன்மைகளுக்காக எவ்வளவும் செலவழிக்க இந்த அரசினிடத்தில் எந்தத் திட்டங்களையும் தரலாம் என்பதை எடுத்துக்கூறி - இந்தக் காவல் நிலையத்தைத் திறந்து வைத்ததிலே நான் மிகுந்த மகிழ்ச்சியுற்று, நான் இந்த அளவில் விடைபெறுகிறேன்.

*- சென்னை சாஸ்திரிநகர் காவல் நிலையப் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து 14-12-97 அன்று முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.*

**"பொது இடங்களில் அனைத்து மக்களையும்**
**சமத்துவமாக நடத்த வேண்டுமென்று,**
**அரசே முன்வந்து நடவடிக்கை எடுக்கும்போது,**
**சட்டத்தை யாரும் கையில் எடுத்துக் கொள்ளக்கூடாது.**
**இப்படிப்பட்ட நேரங்களில் 'சமூக விரோதிகள்'**
**உள்ளே புகுந்து வன்முறைகளைப் பயன்படுத்தி,**
**கொள்ளையடிக்க இடம் கொடுத்துவிடாமல்,**
**எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்".**

**- கலைஞர்**

# காவல்துறையினருக்கான அடிப்படை வசதிகள், மேம்பாடு - கடமைகளில் கவனம் செலுத்தி, அவர்தம் பணி சிறக்க, முதலமைச்சர் கலைஞரால் அளிக்கப்பட்ட சிறப்புச் சலுகைகள்

தமிழகக் காவல்துறை, இந்தியாவின் சிறந்த காவல்துறைகளில் ஒன்று என்னும் பெருமையைப் பெற்றுள்ளது. காவல்துறையினர் பல்வேறு சூழ்நிலைகளில் உயிரையும் துச்சமாகக் கருதிப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுத் தமிழக மக்களின் அமைதியான வாழ்க்கைக்குப் பெருந்தொண்டாற்றி வருகின்றனர். காவல்துறையினருக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் காவலர் தங்கள் கடமைகளில் மேலும் கவனம் செலுத்திச் சிறப்பாகப் பணியாற்றிட முடியும் என்பதால் அதற்கான சிறப்பு நடவடிக்கைகளைக் கலைஞர் தலைமையிலான தமிழக அரசு ஒவ்வொரு காலகட்டத்திலும் மேற்கொண்டு வந்துள்ளது.

★ 1969ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதல்முறையாக - மாநில அரசின் சார்பில் முதல் போலீஸ் கமிஷன் - திரு.ஆர்.ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ்., அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு அதன் அடிப்படையில் காவல்துறை மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்கள் தமிழக அரசால் நிறைவேற்றப்பட்டன.

★ அதேபோல, 1989ஆம் ஆண்டில் கலைஞர் அரசு மீண்டும் அமைந்தபின் ஒய்வு பெற்ற முன்னாள் தலைமைச் செயலாளர் திரு பி.சபாநாயகம் அவர்கள் தலைமையில் தமிழகக் காவல் துறையின் இரண்டாவது போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு, அவ்வறிக்கையில் உள்ள பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 1996-ஆம் ஆண்டில் மீண்டும் முதலமைச்சரான கலைஞர் காவல்துறையினர்க்கு வழங்கிய சலுகைகள்:

★ காவல்துறையினர் மீது கனிவும், கருணையும் கொண்டுள்ள கலைஞர் அரசு 1996ஆம் ஆண்டு மே திங்களில் மீண்டும் பொறுப்பேற்ற பிறகு

பல்வேறு சலுகைகளை வழங்கிக் காவல்துறையினருக்கு ஊக்கம் அளித்துள்ளது. அவைகளின் விவரம் :

**கருணைத் தொகை இருமடங்காக உயர்வு:**

★ வீரதீரச் செயல்களில் மரணம் அடைந்த காவல்துறையினருக்கு வழங்கப்பட்ட கருணைத் தொகை ரூபாய் 1 இலட்சம் என்பது ரூபாய் 2 இலட்சம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இச்சலுகையினைச் சிறைத்துறை அலுவலர்களுக்கும் நீட்டித்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

★ செயல்படமுடியாத அளவுக்கு நிரந்தர ஊனம் அடைந்தவர்களுக்கு வழங்கப்பட்ட கருணைத் தொகை ரூபாய் 20 ஆயிரம் என்பது ரூபாய் 50 ஆயிரம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ படுகாயம் அடைந்தோர்க்கு வழங்கப்பட்ட கருணைத் தொகை ரூபாய் 5 ஆயிரம் என்பது ரூபாய் 10 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ சாதாரண காயம் அடைந்தோர்க்கு வழங்கப்பட்ட கருணைத் தொகை ரூபாய் 3 ஆயிரம் என்பது ரூபாய் 5 ஆயிரம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**உணவுச் செலவு உயர்வு:**

★ அவசர காலங்களில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படும் காவல்துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தின உணவுப்படியினை உயர்த்தி வழங்கிட கலைஞர் ஆணை.

★ இரண்டாம் நிலைக் காவலர்கள்/லான்ஸ் நாயக் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த உணவுப்படி ரூ.16-லிருந்து ரூ.25-ஆக உயர்வு.

★ தலைமைக் காவலர்கள்/முதல்நிலைக் காவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த உணவுப்படி ரூ.20 லிருந்து ரூ.30 ஆக உயர்வு.

★ ஆய்வாளர்கள்/உதவி ஆய்வாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த உணவுப்படி ரூ.30 லிருந்து ரூ.45 ஆக உயர்வு.

**பயணப்படி வரம்பு உயர்வு:**

★ தமிழ்நாடு சிறப்புக் காவல்படை மற்றும் குற்றப்புலனாய்வுத் துறையின் சிறப்புப் பிரிவுகளில் பணிபுரியும் காவல்துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பயணப்படி வரம்பு 40 விழுக்காடு என்பது 45 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ மாவட்டங்கள் மற்றும் ஆயுதப்படைப் பிரிவுகளில் பணிபுரியும் காவல்துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பயணப்படி 30 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

**சீருடைப்படி உயர்வு:**

காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதச் சீருடைப்படி ரூ.25 லிருந்து ரூ.30 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

**நற்பணி புரிந்தோர்க்குச் சிறப்புப்படி உயர்வு:**

★ காவல்துறையில் அப்பழுக்கின்றி நற்பணி புரிந்துவரும் காவல் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் 1996-97ல் சிறப்புப்படி வழங்கும் புதிய திட்டம் **கலைஞர்** அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ இத்திட்டத்தின்படி, 15 ஆண்டுகள் அப்பழுக்கின்றி நற்பணி புரிந்தோர்க்கு கடந்த ஆண்டு முதல் மாதந்தோறும் வழங்கப்பட்டு

வந்த சிறப்புப்படியான ரூ.5 தற்பொழுது ரூ.15 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ 20 ஆண்டுகள் அப்பழுக்கின்றி நற்பணி புரிந்தோர்க்கு கடந்த ஆண்டு முதல் மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த சிறப்புப்படியான ரூ.7.50 தற்பொழுது ரூ.20 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ 25 ஆண்டுகள் அப்பழுக்கின்றி நற்பணி புரிந்தோர்க்கு கடந்த ஆண்டு முதல் மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த சிறப்புப்படியான ரூ.10 தற்பொழுது ரூ.25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ 30 ஆண்டுகள் அப்பழுக்கின்றி நற்பணி புரிந்தோர்க்கு கடந்த ஆண்டு முதல் மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த சிறப்புப்படியான ரூ.15 தற்பொழுது ரூ.30 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ 35 ஆண்டுகள் அப்பழுக்கின்றி நற்பணி புரிந்தோர்க்கு கடந்த ஆண்டு முதல் மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த சிறப்புப்படியான ரூ.20 தற்பொழுது ரூ.40 ஆக உயர்வு.

**"செயல் திறமைப்படி" உயர்த்தி வழங்கப்படுகிறது:**

★ ஆயுதச் சேமப்படையில் பணிபுரியும் காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த செயல்திறமைப்படி ரூ.3லிருந்து ரூ.10 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ ஆயுதச் சேமப்படையில் பணிபுரியும் தலைமைக் காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த செயல்திறமைப்படி ரூ.5லிருந்து ரூ.15 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

> ***"தவறு செய்தவர்கள் மீது உடனடி நடவடிக்கையைக் காவல்துறை எடுக்கத் தவறினால், பொதுமக்களின் நம்பிக்கையை இழக்க நேரிடும்".***
>
> **- கலைஞர்**

**உத்தமர் காந்தி பதக்கம்:**

★ கள்ளச்சாராயத்தை ஒழிக்கும் பணியில் சிறந்து விளங்குவோரை ஊக்கப்டுத்தும் வகையில், கடந்த ஆண்டு முதல் 'உத்தமர் காந்தி பதக்க'மும், ரூ.10 ஆயிரம் வீதம் பணமுடிப்பும் வழங்கும் புதிய திட்டத்தின்படி, இதுவரையில் 8 பேருக்கு காந்தி பதக்கங்களும், தலா ரூ.10 ஆயிரம் வீதம், ரூ.80 ஆயிரமும் வழங்கப்பட்டுள்ளன.

**முதலமைச்சர் காவல் பதக்கம் பெறுவோரின் மாதப்படி உயர்வு:**

★ முதலமைச்சர் காவல் பதக்கம் பெறும் காவலர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திரப்படி ரூ.20லிருந்து ரூ.40 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ தலைமைக் காவலர்கள் மற்றும் நாயக்குகளுக்கு வழங்கப்படும் மாதாந்திரப்படி ரூ.25லிருந்து ரூ.50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**அண்ணா பதக்க விருதுத் தொகை உயர்வு:**

★ தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கம் - அண்ணா பதக்கம் பெறுகின்ற காவலர் மற்றும் தலைமைக் காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அண்ணா பதக்க விருதுத் தொகை ரூ.1,500லிருந்து ரூ.2,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அண்ணா பதக்க விருதுத் தொகை ரூ.2,500லிருந்து ரூ.3,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அண்ணா பதக்க விருதுத் தொகை ரூ.4 ஆயிரம் என்பது ரூ.5 ஆயிரம் என உயர்த்தப்பட்டுள்ளது.

★ மேலே காணும் அண்ணா பதக்கம் பெறுவோரில் வீரதீரச் செயல் புரிந்தோர்க்கு சிறப்புப்படியாக ரூ.100 மாதந்தோறும் வழங்கப்படும்.

### காவலர்களுக்குப் பதவி உயர்வுகள்:

★ 10 ஆண்டுகள் பணி முடித்தும் பதவி உயர்வு பெறாமல் உள்ள இரண்டாம்நிலை ஆண் காவலர்களுக்கு, முதல்நிலைக் காவலர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

★ 15 ஆண்டுகள் பணி முடித்தும் பதவி உயர்வு பெறாமல் உள்ள முதல் நிலை ஆண் காவலர்களுக்கு, தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

★ 15 ஆண்டுகள் பணி முடித்தும் பதவி உயர்வு பெறாமல் உள்ள பெண் காவலர்களுக்கு, தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

### சிறப்புக் காவல் அணிகளுக்கு நிரந்தர உணவு முன்பணம் உயர்வு:

★ தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிகளுக்கு வழங்கப்படும் நிரந்தர உணவு முன்பணம் ரூபாய் ஐயாயிரத்திலிருந்து ரூ.25 ஆயிரமாக உயர்வு.

### நாயக்குகளுக்கு அவில்தாரர்களாகப் பதவி உயர்வு:

★ தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிகள் மற்றும் ஆவடி படைப்பயிற்சி மையத்தில் உள்ள 90 நாயக்குகள் அவில்தாரர்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளனர்.

### ஓட்டுநர்கள் சிறப்புப்படி உயர்வு:

★ காவல்துறையில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த சிறப்புப்படி ரூ.40லிருந்து ரூ.60 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

> "ஆதிதிராவிடர் பழங்குடி இனத்தவர்க்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகளைத் தடுத்திட தக்க நடவடிக்கையினைக் காவல்துறையினர் விரைந்து மேற்கொள்ளவேண்டும்".
>
> - கலைஞர்

**காவல் இசைக்குழுவின் பணியாளர்களுக்கு மாதச் சிறப்பூதியம் உயர்வு:**

**மாநில இசைக்குழு**

★ சேமப்படை ஆய்வாளர் மற்றும் பேண்டு மாஸ்டர் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பூதியம் ரூ.50லிருந்து ரூ.100 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ உதவி சேமப்படை ஆய்வாளர் மற்றும் உதவி பேண்டு மாஸ்டர் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பூதியம் ரூ.25லிருந்து ரூ.75 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ தலைமைக் காவலருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பூதியம் ரூ.25லிருந்து ரூ.60 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பூதியம் ரூ.15லிருந்து ரூ.40 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**ஆவடி படைக்கல மைய இசைக்குழு:**

★ உதவி ஆய்வாளருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பூதியம் ரூ.25 லிருந்து ரூ.75 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ அவில்தார் (பேண்டு) வழங்கப்பட்டு வந்த சிறப்பூதியம் ரூ.10 லிருந்து ரூ.50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ நாயக் மற்றும் லேன்ஸ் நாயக் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பூதியம் ரூ.10லிருந்து ரூ.40 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**காவலர் நலநிதி மானிய உயர்வு:**

★ தமிழ்நாடு காவலர் நலநிதிக்கு வழங்கப்பட்டுவந்த மானியத் தொகை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**கூடுதல் குடியிருப்புகள் உருவாக்கம் - புதிய வசதிகள்:**

★ காவல்துறை பணியாளர்களுக்குக் காவலர் வீட்டுவசதிக் கழகத்தால் ஆண்டுதோறும் கட்டப்படும் குடியிருப்புகளின் எண்ணிக்கை 1,500 என்பது 2,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கென ரூ.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ காவலர் குடியிருப்புகளில் 2,751 நவீனக் கழிப்பிடங்களைக் கட்ட ரூ.5 கோடி ஒதுக்கி, அரசு ஆணையிட்டுள்ளது.

**வீடுகட்டும் முன்பணத்தொகை உயர்வு:**

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் மூலம் வீடு கட்டும் திட்டத்திற்கு அரசு வழங்கும் முன்பணத்தொகை ரூ.1 கோடியிலிருந்து ரூ.3 கோடி ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**உணவுப் பொருள் மானியத் தொகை உயர்த்தி வழங்கப்படுகிறது:**

★ 1 கிலோ துவரம் பருப்புக்கு வழங்கப்பட்டு வந்த மானியம் ரூ.4லிருந்து ரூ.10 ஆக வழங்கப்படுகிறது.

★ 1 கிலோ உளுத்தம் பருப்புக்கு வழங்கப்பட்டு வந்த மானியம் ரூபாய் 3லிருந்து ரூபாய் 10 ஆக வழங்கப்படுகிறது.

"தாழ்த்தப்பட்ட மக்களோடு கைகோர்த்து, அடக்கப்பட்ட மக்களை அரவணைத்து, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உறுதுணையாக இருந்து நல்வாழ்வைச் சமுதாயத்திலே பரவலாக்கிட உறுதியேற்போம்".

- கலைஞர்

★ 1 கிலோ ரவை/மைதாவுக்கு வழங்கப்பட்டு வந்த மானியம் ரூ.1.50லிருந்து ரூ.3 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

**காவலர் குடும்ப குழு ஈட்டுறுதித் திட்ட நிதி ஒதுக்கீடு:**

★ காவலர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கான குழு ஈட்டுறுதித் திட்டத்திற்கு ரூபாய் 10 இலட்சம் நிதி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**காவலர்களுக்குக் குடும்ப அட்டைகள்:**

★ காவலர்களுக்கு சுமார் 80 ஆயிரம் குடும்ப அட்டைகள் புதிதாக வழங்கப்படும். இந்த அட்டைகளைப் பயன்படுத்திக் காவலர்கள், ரேஷன் கடைகளில் மானிய விலையில் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

**காவலரின் குடும்ப உறுப்பினர்க்கும் மருத்துவ நலத்திட்டம்:**

அரசு ஊழியர் நலத்திட்டத்தில் வழங்கப்படுவது போல், காவலர்களுக்கான மருத்துவ நலத்திட்டத்திலும் காவலர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் மருத்துவ நலத்திட்ட பயன் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**காவலர் குடியிருப்புகளுக்குத் தனி மீட்டர்:**

★ தமிழகத்தின் பல பகுதிகளிலும் உள்ள 13,932 காவலர் குடியிருப்புகளுக்கு உடனடியாக தனிமீட்டர் பொருத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

**காவல்துறை மருத்துவ நலநிதியின் அரசு மானியம் உயர்வு:**

★ தமிழ்நாடு காவல்துறை நலநிதித் திட்டத்திற்கு அரசு வழங்கி வந்த மானிய நிதி உதவி 10 இலட்சம் ரூபாயிலிருந்து 25 இலட்ச ரூபாய் என உயர்த்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் **கலைஞர்** அவர்களால் இத்தகு சலுகைகள் வழங்கப்பட்டு, காவலர்களின் நலம் காப்பதில் தமிழ்நாடு, இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாய்த் திகழ்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டி, குற்றங்களை விரைந்து களைந்து நல்லிணக்கத்தோடு கூடிய - ஒரு புதிய தமிழகத்தினை உருவாக்கிட, சுமார் 22,000 காவல் பணியாளர்களைப் புதிதாக நியமித்து, கலைஞர் ஆணை.

### 10 ஆயிரம் காவலர்கள் நியமனம்:

★ கடந்த ஆட்சியில் 10 ஆயிரம் காவலர்கள் நியமனம் செய்வதாக அறிவிக்கப்பட்டு உரிய நியமன ஆணைகள் இறுதிவரை வெளியிடப்படவேயில்லை. மீண்டும் **கலைஞர்** அவர்கள் முதலமைச்சரானதும், அத்தகையோர் எந்த வழியில் தேர்வு செய்யப்பட்டிருந்தாலும் அவ்விளைஞர்களின் எதிர்கால நலன் கருதி அவர்கள் அத்தனை பேரும் நியமனம் செய்யப்படுவார்கள் எனப் பரந்த நோக்கில், **கலைஞர்** அவர்களால் அறிவிக்கப்பட்டது.

★ அந்த அறிவிப்பின்படி முதல் கட்டமாக 1,581 பெண் காவலர்கள் உட்பட மொத்தம் 4,602 காவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் 16.10.97-ல் பணியில் அமர்த்தப்பட்டனர்.

★ இரண்டாம் கட்டமாக 4,677 ஆண் காவலர்களும், 1,023 பெண் காவலர்களும் ஆக மொத்தம் 5,700 காவலர்கள் 1.11.97 முதல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள 12 தற்காலிக காவல் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகிறார்கள். இவர்களது பயிற்சி நிறைவுற்றதும், காவலர்களாகப் பணியமர்த்தப்படுவார்கள்.

### 10,000 காவலர்கள் தேர்வு செய்ய அரசு ஆணை:

★ நடப்பு நிதியாண்டில் 5 ஆயிரம் ஆண் காவலர்களையும், 5 ஆயிரம் பெண் காவலர்களையும் நியமனம் செய்திட அனுமதி வழங்கி, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவர்களை தமிழ்நாடு சீருடைப் பணியாளர்

தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ 1989-90ஆம் ஆண்டில் காவலர் நியமனத்திற்கென மருத்துவத் தேர்வு முதலியவற்றையெல்லாம் முடித்துத் தேர்வு செய்யப்பட்டவர்களில் 2 ஆயிரம் பேர் கடந்த ஆட்சியில் நியமனம் செய்யப்படாமல் விடப்பட்டிருந்தனர்.

★ அவர்களில் இன்னும் வேறு எந்த வேலைக்கும் செல்லாமல் தகுதி படைத்தவர்களாக இருந்த மொத்தம் 1,023 நபர்கள், கடந்த நவம்பர் திங்கள் முதல் காவலர்களாக நியமனம் செய்யப்பட்டுக் காவலர்களுக்குரிய பயிற்சிகளைப் பெற்று வருகிறார்கள்.

**சார்ஆய்வாளர்கள் நியமனம்:**

★ கடந்த ஆட்சியில் 1994-95ஆம் ஆண்டில் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் பொதுப் போட்டியில் 1,100 சார்ஆய்வாளர்கள் நியமனத்திற்கெனத் தேர்வு செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் 500 பேர்கள் மட்டுமே பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர்.

★ **கருணை உள்ளம் கொண்ட கலைஞர்** அவர்கள் பயிற்சி முடித்த 500 பேர்களுக்கும் பணிநியமன ஆணை வழங்கினார்கள். தற்பொழுது அவர்கள் சார்ஆய்வாளர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர்.

★ மேலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 1,100 நபர்களில் எஞ்சிய 600 நபர்களுக்கும் 12.5.97-ல் சார்ஆய்வாளர்களுக்குரிய பயிற்சியினைப் பெற ஆணை வழங்கப்பட்டது. அந்த 600 நபர்களுடன் காவல்துறையில் பணிபுரிந்து வரும் பட்டதாரிக் காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள் ஆகியோரிலிருந்து சார்ஆய்வாளர் பதவிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களும் ஆக மொத்தம் 818 பேர்கள் 2.6.97 முதல் பயிற்சி பெற்று வருகின்றனர். இப்பயிற்சிகள்

முடிவு பெற்றதும், இவர்களும் சார்ஆய்வாளர்களாகப் பணி அமர்த்தப்படுவார்கள்.

**3 - புதிய மாநகராட்சிகளில் 3 - புதிய காவல் ஆணையகங்கள்:**

★ திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய 3 புதிய மாநகராட்சிகளிலும் கலைஞரின் ஆணையின்படி 1-6-97 முதல், 3 புதிய காவல் ஆணையகங்கள் உருவாக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இம்மூன்று காவல் ஆணையகங்களுக்கும் 3 காவல்துறை ஆணையாளர்கள், 6 துணை ஆணையாளர்கள், 6 உதவி ஆணையாளர்கள், 24 ஆய்வாளர்கள், 45 சார் ஆய்வாளர்கள், 84 தலைமைக் காவலர்கள், 18 முதல்நிலைக் காவலர்கள், 1,101 இரண்டாம் நிலைக் காவலர்கள், 21 இதர காவல் பணியாளர்கள், 24 தொழில் நுட்பப் பணியாளர்கள், 192 அமைச்சுப் பணியாளர்கள் ஆக மொத்தம் 1,608 புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ரூ.8.04 கோடி செலவில், 3 காவல் ஆணையகங்களுக்கும் தேவையான தளவாடப் பொருட்களும், வி.எச்.எப். கருவிகளும் வாங்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன.

★ இது தவிர, திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய காவல் சரகத் துணைத் தலைவர் அலுவலகம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# முதலமைச்சர் கலைஞரின் தொலைநோக்குப் பார்வையால், நவீனமயமாகி வரும் காவல்துறை

★ சட்டம்-ஒழுங்கு, கொலை, கொள்ளை போன்ற நிகழ்வுகளின் போது ஏற்படும் அவசர காலங்களில் விரைந்து செயல்படுவதற்கெனவும், காவல்துறையினர் திறமையாகப் பணியாற்றுவதற்கெனவும், காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ், 1996-97-ஆம் ஆண்டிற்கு ரூ.8.33 கோடியும், 1997-98-ஆம் ஆண்டிற்கு ரூ.10 கோடியும் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய புதிய காவல் ஆணையங்கள், திண்டுக்கல்லில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட புதிய காவல் சரகத்திற்குமாக 45 மகேந்திரா ஜீப்புகள் வாங்கப்பட்டுள்ளன.

★ மாவட்டங்களின் வாகன வசதிகளைப் பெருக்கிடும் வகையில், 20 மகேந்திரா ஜீப்புகளும், 6 பேருந்துகளும், அவசர விபத்துப் பயனுக்கென 2 ஆம்புலன்ஸ்களும், 15 மினி வேன்களும், புறக் காவல் நிலையங்களில் பணிபுரியும் தலைமைக் காவலர்களின் விரைவுச் செயலாக்கப் பணிகளுக்கென 77 மோட்டார் சைக்கிள்களும், புறக்காவல் நிலையங்களாக இருந்து, தகுதி உயர்த்தப்பட்ட 17 புதிய காவல் நிலையங்களுக்கென முதல் கட்டமாக 5 மாருதி ஜீப்புகளும் ஆக மொத்தம் 170 வாகனங்கள் ரூ.3.5 கோடியில் வாங்கப்பட்டு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களால் வழங்கப்பட்டன.

ஏற்கெனவே, ரூ.5.30 கோடி செலவில் 330 வாகனங்கள் வாங்கி காவல் பணிகளுக்கென வழங்கப்பட்டுள்ளன.

★ மதுரை மாநகர்க் காவல் பணிக்குக் கூடுதல் ஆயுதச் சேமப்படைப் பிரிவு ஒன்று புதியதாக உருவாக்கி, ஆயுதப் படை சார்பு ஆய்வாளர்கள்-2, தலைமைக் காவலர்கள்- 4, முதல்நிலைக்

காவலர்கள் - 8, இரண்டாம் நிலைக் காவலர்கள் - 48, தலைமைக் காவல் ஓட்டுநர்கள் - 2, இரண்டாம் நிலைக் காவலர் - 1, ஆக மொத்தம் 65 பேர்கள் பணியமர்த்தப் பட்டுள்ளனர். இதற்கென ரூ.37.46 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

★ காமராசர் மாவட்டம், இராஜபாளையத்தில் சட்டம்-ஒழுங்கைச் சீரிய முறையில் பராமரிக்கும் பொருட்டு, சிறப்புக் காவல் அணிப் பிரிவு ரூ.9.5 கோடி நிதிஒதுக்கீட்டில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

## அதிவிரைவுப் படை:

★ சாதி-மதக்கலவரங்கள் ஏற்படாமல் தடுப்பதோடு, அத்தகு நிலை ஏற்படின் அப்பகுதிகளுக்கு அதிவிரைவில் சென்றடைந்து, விரைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டு சுமூகச் சூழ்நிலையை உருவாக்கி அமைதியை உருவாக்கிடவும், அதோடு, அப்பகுதியில் மதநல்லிணக்கத்தைப் பேணி, அமைதிச் சூழ்நிலையைத் தொடர்ந்து நிலைநிறுத்திடும் பணிகளுக்கெனவும் 'அதிவிரைவுப் படை' எனும் புதிய அமைப்பு ஒன்று **கலைஞர் அரசினால்** உருவாக்கப் பட்டுள்ளது.

★ தற்பொழுது, தமிழ்நாடு சிறப்புக் காவல் படையிலிருந்து, துணைத் தளவாய்-1, உதவித் தளவாய்-2, ஆய்வாளர்கள்-8, உதவி ஆய்வாளர்கள்-24, அவில்தார்கள்-48, நாயுக்குகள்-24, இரண்டாம் நிலைக் காவலர்கள்-168 ஆகியோரைக் கொண்ட முதலாவதான 'அதிவிரைவுப்படை', முதலமைச்சர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டு, இப்படைக்கான சிறப்புப் பயிற்சிகள் ஆவடியில் 27-3-97 அன்று தொடங்கிவைக்கப்பட்டது.

## புதிய கட்டடங்கள்:

★ கோவையில், ரூ.2 கோடி மதிப்பீட்டில், காவல் ஆணையர் அலுவலகம் கட்டப்படுகிறது.

★ சென்னை, காமராசர் - சாலையிலுள்ள, காவல்துறை இயக்குநர் அலுவலகம் ரூ.1.35 கோடியில் புதுப்பிக்கப்படுகிறது.

★ வேலூரில் மாவட்டக் காவல் அலுவலகம் ரூ.1.88 கோடியிலும், சரகத்துணைத் தலைவர் அலுவலகம் ரூ.19.50 இலட்சத்திலும், புதிதாய்க் கட்டும் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.

★ கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் ரூ.62 இலட்சத்தில் கட்டப்படுகிறது.

★ 81 காவல் நிலையங்களுக்கு ரூ.15.29 கோடி மதிப்பீட்டில், தற்பொழுது புதிய கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

**புதிய காவல் நிலையங்கள்:**

★ கடந்த நிதியாண்டில், சென்னையில்-2, திருச்சியில்-1 ஆக 3 புதிய காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. மேலும், 14 புறக்காவல் நிலையங்கள் காவல் நிலையங்களாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

★ நடப்பு நிதியாண்டில், 23 புதிய காவல் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதோடு, 17 புறக்காவல் நிலையங்கள், காவல் நிலையங்களாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

❑❑❑

*"புலியும் மானும் ஒரே துறையில் தண்ணீர் குடித்ததாக*
*புராணங்கள் கூறும் - புலியும் மானும் கூட வேண்டாம்;*
*மானும் மானுமாவது இந்தக் காலத்தில்*
*ஒரே துறையில் தண்ணீர் குடிக்க வேண்டாமா?*
*"ஒன்றே குலம்" என்ற கொள்கை வெற்றியடைய*
*காவல்துறையும் கடமையாற்றிட வேண்டாமா?"*

**- கலைஞர்**

❑❑❑

தமிழரசு

படித்துப்

பயன்பெறுவீர்